# அல் ஹஸனாத்

மலர் 25 இதழ் 10 – 11 ஒக். – நவ. 99

الحسنات ! اسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية



இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்)

## செச்னியா அடிபணியாது!



துதாயேவ்



யெல்ட்சின்



மஸ்கடோவ்



உணர்வுள்ள தேனீ

## பாகிஸ்தான் : தவிர்க்க முடியாத தீர்வு!



காஸி ஹுஸைன் அஹ்மத்



ஜெனரல் முஷாரப்

## குடும்ப உறவில் அனுமதிக்கப்பட்ட பொய்



## நீதிமன்றத்தை அவமதித்த பதுளை வித்தியாலயம்

15/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்

கௌரவ தலைவர் /கௌரவ பிரதம பேஷ் இமாம்/ கதீப்
பள்ளி பரிபாலன சபை

அன்புடைய இஸ்லாமிய சோதரீர்,

அஸ்ஸலாமு அலைக்கும்

# இன ஐக்கியத்தைச் சீர்குலைக்கவும், விசேடமாக முஸ்லிம் சமூகத்தை அழிவுப் பாதைக்கு இழுத்துச் செல்லவும் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்

முஸ்லிம் சமூகம் நாடளாவிய ரீதியில் இன்று எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினை குறித்து உங்கள் ஜமாஅத்தாரின் கவனத்தை ஈர்ப்பதற்காக இக்கடிதத்தை வரைகின்றோம்.

ஆண்டாண்டு காலமாக முஸ்லிம் சமூகத்துக்கும், பெரும்பான்மை சமூகமான சிங்கள, தமிழ் சமூகங்களுக்குமிடையே நிலவி வந்த ஒருமைப்பாடு, நல்லிணக்கம், நல்லுறவு ஆகியவற்றைச் சீர்குலைப்பதற்காக சில தீய சக்திகள் மறைமுகமாகவும் வேறு சில தீய சக்திகள் வெளிப்படையாகவும், முனைப்புடன் செயல்பட்டு வருவது பற்றி நீங்கள் அறிந்து வைத்திருப்பீர்கள்.

நாட்டின் தேசிய ஐக்கியத்தைச் சீர்குலைத்து சமூகங்களுக்கிடையே பாரிய பிரச்சினைகளை உருவாக்குவதற்கு முயற்சிக்கும் சக்திகள் குறித்து நாம் மிக்க அவதானத்துடன் இருப்பது அவசியமாகும். நம்மவர் தரப்பில் தற்செயலாகவேனும், ஏற்படும் தவறுகளைச் சாதகமாக்கி, குழப்ப நிலையைத் தோற்றுவிப்பது இத்தீய சக்திகளின் உள் நோக்கமாய் அமைந்துள்ளது. எனவே இவ்விடயம் குறித்து உங்கள் பகுதி ஜமாஅத்தாருக்கு அறிவூட்டுமாறு அன்பாய் வேண்டுகின்றோம்.

இன ஐக்கியத்தைச் சீர்குலைக்கவும் விசேடமாக முஸ்லிம் சமூகத்தை அழிவுப் பாதைக்கு இழுத்துச் செல்லவும் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்நடவடிக்கைகளில் பெரும்பான்மைச் சமூகத்தில் உள்ள ஒரு சிறிய விகிதத்தினரே ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே, இந்த நாட்டின் இன ஐக்கியத்தைக் கட்டிக் காக்கவும், அதனைத் தொடர்ந்து பேணி வளர்க்கவும் விரும்புவர்களுடன் நெருங்கிய உறவினை ஏற்படுத்திக் கொள்வதில் மிகுந்த கவனம் செலுத்துமாறு வேண்டுகிறோம்.

எமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் பொருளாதார, கல்வி முன்னேற்றங்களையும் சீர்குலைப்பதே இவர்களின் உள்நோக்கமாயுள்ளது. இவர்கள் விரிக்கும் மாய வலையில் சிக்கிச் சீரழியும் வகையில் எமது நடவடிக்கைகளும் செயல்பாடுகளும் அமைந்து விடக்கூடாது! இனக் கலவரங்களை சிறிதளவேனும் ஏற்படுத்தும் வகையில் உங்கள் ஜமாஅத்தினரின் நடவடிக்கைகள் அமைந்து விடக்கூடாது என்பதையும் அடிக்கடி உங்கள் ஜமாஅத்தாருக்கு அறிவுறுத்துமாறு அன்பாய் வேண்டுகிறோம்.

உருவாகி வரும் சூழ்நிலை குறித்து உங்கள் ஜமாஅத்திலுள்ள உலமாக்கள், கல்விமான்கள் மற்றும் முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடி, சிறுபான்மை, பெரும்பான்மை சமூகங்களுக்கிடையே நல்லு றவை வளர்ப்பதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அவசரமாக எடுக்குமாறு அன்பாய் வேண்டுகிறோம். நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகளை நன்கு ஆராய்ந்து, நிதானமாகவும், தீர்க்க தரிசனத்துடனும் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் நடவடிக்கைகள் மற்றும் அவை தொடர்பான ஆலோசனைகள் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

**SRI LANKA MUSLIM MEDIA FORUM**
**C/O, All Ceylon Jammiyathul Ulama.**
**No. 211, Orabi Pasha Road, Colombo - 10.**

இவ்வண்ணம்

1. அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா
2. அகில இலங்கை முஸ்லிம் லீக்
3. அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை
4. இலங்கை ஜமாஅதே இஸ்லாமி
5. ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போ.ரம்
6. அகில இலங்கை கதீப்மார் சம்மேளனம்.
7. ஸ்ரீலங்கா ஷரியாக் கவுன்ஸில்
8. ஸ்ரீலங்கா மேமன் சங்கம்
9. ஸ்ரீலங்கா முஸ்லிம் மாணவர் சம்மேளனம்
10. இலங்கை இஸ்லாமிய நிலையம்
11. அகில இலங்கை தௌஹீத் ஜமாஅத்
12. நளீமிய்யா பழைய மாணவர் சங்கம்
13. ஜம்இய்யத்துஷ் ஷபாப் (AMYS)
14. அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி
15. இஸ்லாமிய கற்கைக்கான நிலையம் (CIS)
16. சர்வதேச வை.எம்.எம்.ஏ.
17. ஜம்மியத்துல் தலபத்துல் இஸ்லாமிய்யா
18. இலங்கை முஸ்லிம் மலாயர் சங்கம்
19. கொழும்பு பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ்
20. ஸ்ரீலங்கா கதீப் முஅஸ்ஸின் நலன்புரி அமைப்பு
21. அகில இலங்கை அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

அருளாளன் அன்புடையோன் அல்லாஹ் அவன் பெயரால்

❛அவனே தன் தூதரை நேரான வழியைக் கொண்டும், உண்மையான மார்க்கத்தைக் கொண்டும் அனுப்பி வைத்தான். அது சகல மார்க்கங்களையும் ஜெயித்து விடும். (இதற்கு) அல்லாஹ்வே போதுமான சாட்சியாக இருக்கிறான்❜

அல்குர்ஆன் **48:28**

# அல்ஹஸனாத்


மலர்: 25 இதழ்: 10/11 ஒக்/நவ.1999

**ISSN : 1391 - 460 X**



வெளியீடு:

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி

**Sri Lanka Jama'ath-e-Islami**
**77, Dematagoda Road,**
**Colombo - 9**
**Sri Lanka.**
**Phone : 687091**
**Fax : 686030**


**விலை விபரம்**

(உள்நாடு)

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூபா 15.00 |
| வருட சந்தா | ரூபா 200.00 |

(வெளிநாடு) வருட சந்தா

| | |
|---|---|
| இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர், மலேசியா | 500.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் | 550.00 |
| ஏனைய நாடுகள் | 650.00 |

## உள்ளே உள்ளவை


- கலாச்சாரம் காப்போம் 2
- திருப்பம் - ஒரு வாழ்வியற் பார்வை (குர்ஆன் விளக்கம்) ........ 3
- நீதிமன்றத்தை அவமதித்த பதுளை பாடசாலை 5
- சுவன இல்லம் வேண்டுமா? (ஹதீஸ் விளக்கம்) 7
- பாகிஸ்தானில் ஆட்சிமாற்றம் 9
- இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்) ........ 11
- இஸ்லாமிய வியாபார அமைப்புகள் (இஸ்லாம் A/L) 13
- அல்லாஹ்வின் பாதையில் போராட்டம் IV 27
- அமெரிக்காவில் இஸ்லாம் 29
- புத்தாயிரம் ஆண்டிலொரு மீள்பார்வை........ 31
- உள்ளுணர்வால் உந்தப்படும் தேனீக்கள் 33
- ஜம்இய்யா பக்கம்........ 34
- உங்கள் வீட்டிலும் TV? 35
- இலட்சிய சமூகத்தின் இலட்சணங்கள் 37
- இயக்கச் செய்திகள் 39
- உலகச் செய்திகள் 40


## அந் நிஸா


- குடும்ப உறவில் அனுமதிக்கப்பட்ட பொய் யூஸுப் கர்ழாவி 15
- பெண்களின் பிரச்சினைகள்........ 17
- திருப்பம் ஏற்படுத்திய குர்ஆன்வகுப்பு 19
- கவிதாபவனம் 20/21
- இமாம் ஹஸனுல் பன்னாவின் இறுதிக் கணங்கள் 23
- சோரம் போகும் முஸ்லிம் யுவதிகள் 25



வெளிவருகிறது!

**ரமழான் விசேட மலர்**

பிரதிகளுக்கு முந்துங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கலாச்சாரம் காப்போம்!

இன ஐக்கியம், சமூக நல்லிணக்கம் எனும் பெயரில், அரசு ஏற்படுத்தியுள்ள திட்டம் காரணமாக முஸ்லிம் பாடசாலை ஒன்றில் வட்டாரத்திலுள்ள ஏனைய சிங்கள முஸ்லிம் பாடசாலைகளைச் சேர்ந்த 7ம் ஆண்டு பிள்ளைகள் சேர்ந்து தீபாவளியைக் கொண்டாடினார்களாம். இது எந்தவகையில் சமூக நல்லிணக்கத்திற்கு வித்திடும் என்பது புரியாவிட்டாலும் நிச்சயமாக இது ஒரு கலாச்சாரச் சீரழிவையே கொண்டு வரும் என்பதில் ஐயமில்லை. முஸ்லிம்களைப் பொறுத்தவரை இது தவிர்க்கப்பட்ட விடயமும் கூட.

தமிழர்கள் தீபாவளியைக் கொண்டாடுவதை முஸ்லிம் சிறார்கள் பார்த்து மகிழ்வது, தீபாவளியைப் பற்றி அறிந்து கொள்வது, அவர்களது மதத்தை இகழாதிருப்பது என்பதெல்லாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயங்களே. ஆனால் இவர்களே அவர்களது திருநாளை கொண்டாட வேண்டுமென்பது புத்திக்குப் பொருந்துவதாயில்லை.

கொழும்பிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் தீபாவளி பற்றிக் கூறப்பட்டவேளை, 9 வயது முஸ்லிம் சிறுவன் ஒருவன் தமிழ்ப் பிள்ளையிடம் "உனது கடவுளுக்கு கண்ணைக் கூடத் திறக்க முடியாது; ஒரு இடத்திற்கும் போக, வர முடியாது; இது ஒரு கடவுளா?" என இகழ்ந்துரைத்துள்ளான். ஆசிரியருக்கு இது தெரிய வரவே, "நான் இனி மற்ற மதத்தவரின் கடவுளை நிந்திக்க மாட்டேன்" என 100 முறை எழுதும்படி பணித்துள்ளார். அந்தச் சிறுவனின் வீட்டுச் சூழல் அவனைத் தூண்டியிருக்க எவ்விதத்திலும் நியாயமில்லை. இருந்தும் அவனின் பகுத்தறிவு இதனைப் பேச வைத்துள்ளது. இந்நிகழ்ச்சியைக் கேட்ட மாத்திரத்தில் இப்றாஹிம் நபியின் முன்மாதிரியே ஞாபகத்திற்கு வருகிறது.

சிலைவணங்கிகளின் மகனாகப் பிறந்தும், அவர் "சிலைகளுக்கு எதுவித சக்தியுமில்லை" என்பதை நிரூபிப்பதற்காக, கோவிலுக்குள் நுழைந்து, சிறிய சிலைகளையெல்லாம் உடைத்து விட்டுப் பெரிய சிலையின் கழுத்தில் கோடரியைத் தொங்க விட்டார். மக்கள் அவரிடம் கேட்டபோது, "பெரிய சிலையைக் கேள்" என்றார். "சிலை எப்படிப் பேசும்?" என அந்த மக்கள் திருப்பிக் கேட்டார்கள். "இதனைத்தானே கடவுளாக நீங்கள் ஏற்றுள்ளீர்கள்" என பதிலளித்தார் இப்றாஹிம் நபி. அந்த மக்கள் வெட்கித் தலை குனிந்தார்கள்". இதனை அல்குர்ஆன் தெளிவாகக் கூறியதுடன், **"இப்றாஹீமிடத்திலும், அவருடன் இருந்தவர்களிடத்திலும் உங்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரி நிச்சயமாக இருக்கிறது. அவர்கள் தம் ஜனங்களை நோக்கி, "நிச்சயமாக நாங்கள் உங்களிலிருந்தும், அல்லாஹ்வையன்றி நீங்கள் வணங்கிக் கொண்டிருப்பவைகளிலிருந்தும் விலகி விட்டோம். நிச்சயமாக நாங்கள் உங்களையும் நிராகரித்து விட்டோம். அல்லாஹ் ஒருவனையே நீங்கள் விசுவாசம் கொள்ளும் வரையில் எங்களுக்கும், உங்களுக்குமிடையில் விரோதமும் குரோதமும் ஏற்பட்டு விட்டது" என்று கூறினார்கள். அன்றி, இப்றாஹிம், தம் தந்தையை நோக்கி, "அல்லாஹ்விடத்தில் உமக்காக (வேதனை) யாதொன்றையும் தடுக்க எனக்குச் சக்தி கிடையாது.... எங்கள் இறைவனே! உன்னையே நாங்கள் நம்பினோம்; உன்னையே நாங்கள் நோக்கினோம். உன்னிடமே (நாங்கள் யாவரும்) வர வேண்டியிருக்கின்றது"** (60:4) என அல்குர்ஆன் ஒரு முஸ்லிமின் நிலைப்பாட்டை மிகத் தெளிவாகப் பிரஸ்தாபிக்கின்றது.

ஏனைய மதங்களைப் போல இஸ்லாமும் ஒன்று என்று பலர் கருதுகின்றனர். அப்படியல்ல. உலகில் இரண்டு மார்க்கங்களே இருக்கின்றன. ஒன்று படைத்த இறைவனை அங்கீகரித்து, அவன் அனுப்பி வைத்த வழிகாட்டல்களை ஏற்று நடப்பது. இரண்டாவது, இதனை மறுத்து, ஷைத்தானின் வலையில் சிக்கி, மறுமையில் நரகத்திற்குச் செல்வது. எனவே, ஒரு முஸ்லிம், தனது கொள்கை விடயத்தில் மிகத் தெளிவான நிலைப்பாட்டை கொண்டிருப்பது அவசியம். மனிதாபிமான அடிப்படையில் ஏனைய படைப்புக்களை நேசிப்பது, உதவுவது, சிநேகமாக வாழ்வது என்பதெல்லாம் இஸ்லாம் போதிப்பவைதான். அதற்காகத் தன் கொள்கையை, கட்டுப்பாடுகளை, கலாச்சாரத்தை, காற்றில் பறக்க விட்டு விடுவது "சகிப்புத்தன்மை"யல்ல. அது சுத்தமான அடிமைத்துவம்.

முஸ்லிம்கள் கண்ணியமானவர்கள்; இறைவேதத்தின் சாட்சிகள்; சான்றுகள்; இவ்வுலகில் நீதி நிலைக்க, நேர்மை கோலோச்ச, நித்திய சாந்தி, சமாதானம் நிலைபெற, தீமைகள் ஒழிந்து போக பாடுபட வேண்டியவர்கள். அவர்கள் அறியாமைக்கு அடிபணிந்து விட மாட்டார்கள். இதனை முஸ்லிம் தலைவர்களும், ஆலிம்களும் அரசுக்குத் தெளிவாக விளக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

அரசு அங்கீகரித்துள்ள முஸ்லிம் சிறுமிகளின் சீருடையையே தம் பாடசாலையில் அனுமதிக்க மறுக்கும் ஹிந்துக்களின் தீபாவளியை முஸ்லிம்கள் கொண்டாடுவது என்பதுவும் அது தொடர்பாக அரசின் நடவடிக்கையும் ஒரு கேலிக்கூத்தாகவே மக்கள் மனதில் காட்சியளிக்கிறது.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருப்பம்: ஒரு வாழ்வியற் பார்வை

அஷ்ஷெய்க் கே.முனாஸ் இஸ்லாஹி

## அல் குர்ஆன் விளக்கம்

**உமது இறைவன் உம்மைக் கைவிடவு மில்லை, வெறுக்கவு மில்லை. பின்னர் வரவிருக்கின்ற வாழ்வு உமக்கு, கடந்து வந்ததை விட மிக்க சிறப்பாக அமைய விருக்கிறது.**
(அல்குர்ஆன் 93:03-04)

நாம் ஒரு நிலையிலிருந்து இன்னுமொரு நிலைக்கு மாறுகிறோம். அல்லது, வாழ்வில் ஏற்படுகின்ற சில நிகழ்வுகளால் வாழ்வுப்போக்கு திரும்புகிறது; இதனால் வாழ்வில் திருப்பம் ஏற்படுகிறது.

அல்லாஹ்வின் பாதையில் இருப்பவர்களுக்கு செயல்களின் முன்னளப்பு (களாகத்ர்) எனும் பெயரில் அவனாலேயே இத்திருப்பம் நிகழ்கிறது. நாம் ஒன்றை விரும்புவோம். அல்லாஹ் பிறிதொன்றை நாடியிருப்பான். நல்ல மனங்கொண்டோர் – விரும்பியது கிடைக்காத போது, கிடைத்ததை விரும்பியதாக்கிக் கொள்வர்; இப்படிச் செய்வது நலவை நோக்கிய சிறப்பான நகர்வாகவே அவனது வாழ்வில் அமைந்து விடுகிறது. இந்த உண்மையினை, **"எதுவேனும் உங்களுக்கு மிக நலவாக இருந்தும் அதனை வெறுக்கக் கூடும். பிறிதொன்று கேடாகவிருந்தும் அதனை விரும்பக் கூடும். (அவை நலவா, கேடா என்பதனை) அல்லாஹ் தான் அறிவான். நீங்களோ புரிந்து கொள்ள மாட்டீர்கள்"** (02:216) என குர்ஆன் அறிவிக்கிறது.

எனவேதான், அல்லாஹ்வுக்கென்று வாழ்பவர்களை அவன் கைவிடுவதோ, வெறுப்பதோ இல்லை.

அதீத விருப்புக்குரிய ஒன்றில் நாம் ஈடுபடுகின்ற போது, ஒருவர் தடுப்பாராயின், அத்தடுப்பினை வெறுக்கிறோம். இது போலவே மிக வெறுக்கின்ற ஒன்றை செய்யத் திணிக்கின்ற வேளையிலும் அத்திணிப்பினை உடைத்து வெளிவர விரும்புகிறோம். இதுதான் மனித அனுபவம். ஆனால், அல்லாஹ் சில இடங்களில் சில நிகழ்வுகளால் எம்மைத் திசை திருப்பி விடுகிறான். அத்திருப்புதல் எம்மை வேறு எங்கோ நகர்த்திச் செல்கிறது. வந்து அடைந்த இடத்திலிருந்து எமக்கு ஏற்பட்ட நிகழ்வுகளை எண்ணிப் பார்க்கும் போது இன்று சந்தோஷமடைகிறோம். அப்படி அல்லாஹ் சில நிகழ்வுகளின் பெயரால் எம்மைத் திருப்பிய சமயம் நாம் அவற்றை விரும்பியிருக்க வில்லை; வெறுத்திருந்தோம்.

ஒரு நிகழ்வு எம் வாழ்வில் ஏற்படுகிறது; அது எம் வாழ்க்கைப் போக்கினை மாற்றுகிறது. அந்நிகழ்விற்கு முந்திய வாழ்வு 'முதல் வாழ்க்கை,யாகவும் 'நிகழ்விற்குப் பின்னதானது' பிந்திய வாழ்வாக'வும் அமைகிறது. இந்த இடத்தில் 'பிந்திய வாழ்வு, நாம் விளக்கி வரும் வசனத்தின் கருத்தின்படி சிறப்புறுகிறது. பின்னரும் வேறு ஒரு சம்பவம் குறித்த காலத்தின் பின் நிகழ்ந்து வாழ்க்கைப்போக்கை மாற்றுகிறது. சிறப்புற்றிருந்த வாழ்க்கை மேலும் செழுமை பெறுகிறது. ஏனென்றால் புதிது என்று சொல்லும் போது, சில நாட்களின் பின் பழையது என்றே மாறப் போகிறது. 'இன்று' என்று சொல்வது புதிதாக உள்ளது. இன்றோடு 'நேற்று' எனும் பழைய வடிவம் நல்குகிறது; பின் 'நாளை' எனும் புதிதினை காத்திருக்கிறோம்; அதுவும் பழையதாகிப் போகிறது. ஒவ்வொரு புதிதும் வெகுவிரைவில் அதன் பழைமையைத் தேடிக் கொள்கிறது.

இவ்விளக்கத்தின் பின்னணியில், **"பின்னர் வரவிருக்கின்ற வாழ்வு உமக்கு கடந்து வந்ததை விட மிக்க சிறப்பாக அமைய விருக்கிறது"** என்பதனை பார்க்கின்ற வேளை, எம் வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுக்குப் புலப்படாத பாதையில் ஓட்டப்படுகிறோம். அப்பாதை பல விளைவுகள் கொண்டதென்பது உண்மை. ஒவ்வொரு குறிப்பிட்ட காலத்தின் பின்னும் ஏற்படுகின்ற வாழ்க்கை வளைவு-வாழ்வினைச் செழுமைப்படுத்துகிறது; சிறப்புற வைக்கிறது.

இருந்த வாழ்க்கை மேலும் சிறப்புறுவது எவர்களுக்கென்பதனையும் இங்கு இணைத்தே பேச வேண்டும். **"எமது விஷயங்களில் முயல்பவர்களுக்கு (ஜாஹத) எம் பாதைகள் பலவற்றை காட்டியே தீர்வோம்; அல்லாஹ் எப்போதும் நன்மை புரிகிறவர்களோடு தான் இருக்கிறான்"** (29:69) என்றே குர்ஆன் கருதுகிறது.

மனித அறிவாற்றல், கொள்கையார்வம் போன்றவற்றால் அல்லாஹ்வின் பாதையிலான ஈடுபாடு கூடிக்குறைகிறது. ஈமான் சில போது கூடியும் இன்னும் சில போது குறைவதுமான தளம்பல் இருப்பது சாத்தியமாயின் அல்லாஹ்வின் பாதையிலான ஈடுபாட்டிலும் இப்படி நிகழ்வதில் ஆச்சரியமொன்றுமில்லை.

ஈமான் கூடுகின்றபோது அதிக கிரிகைகள் புரிவது மாதிரியே இஸ்லாமிய அழைப்புப் பாதையில் ஈடுபடுகின்றவர்கள் நிறைய வேலைகளுக்காக ஓடியாடித் திரிந்து பாடுபட்டுத் திரிவதனை காண்கிறோம். ஓடியாடிப் பாடுபட்டுத்திரிதல், அதிகம் முயல்தல் எனும் பொருளினை வெளிப்படுத்துகின்ற சொல்லான **'ஜாஹத'** என்பதனையே குர்ஆன் மேற்கூறிய 29:69 வது வசனத்தில் பிரயோகிக்கிறது.

எனவே, ஓடியாடித் துடித்துப் பாடுபடுகிறவர்கள் அப்படியல்லாதோரைப் பார்த்து விமர்சிக்கக் கூடும். விமர்சனங்கள் அல்லாஹ்வின் பாதையிலான ஈடுபாட்டினை நல்ல முறையில் செய்வதற்கான ஒரு வழிமுறையாகும். அவ்விமரிசனம் அல்லாஹ்விற்கென்றே அமைய வேண்டுமே ஒழிய, நமது அடைவுகளுக்காக இருத்தல் கூடாது.

எதிர்ப்பும் விமரிசனமும் இருக்கின்ற போதுதான் வேலைகள் மும்முரமடைகின்றன. அல்லாஹ்வின் பாதையில் ஈடுபடுகின்றவர்கள் முகாம்களாகப் பிரிந்து கொண்டு தம்மிடையே பரஸ்பர விமர்சனம் புரிகின்றனர். இவ்வேளை காழ்ப்பு, வெறுப்புணர்வு, கோபாவேசம் இன்றியதாக அமைதல் அவசியமாகும். இந்த இடத்தில் தான் குர்ஆன் பிரார்த்தனை ஒன்றினைக் கற்றுத் தருகிறது. **"எங்கள் இறைவா! எங்களையும் எங்களுக்கு முன் விசுவாசம் கொண்ட எங்களுடைய சகோதரர்களையும் நீ மன்னித் தருள்! விசுவாசங் கொண்டவர்களைப் பற்றி எங்கள் உள்ளங்களில் குரோதங்களை உண்டு பண்ணாதே! எங்கள் இறைவா! நீ மிக்க கிருபை யுடையோன், இரக்க முடையோன்".** (59:10)

எல்லோரும் ஈமான் கொண்டவர்கள்; அல்லாஹ்வின் விடயத்திற்காக பாடுபடுகின்றவர்கள்; எமது முகாமினை, அமைப்பினைச் சாராத போதிலும் இப்பாதையின் ஊழியன் என்றும் எம் சோதரன் என்றுமே நோக்குதல் அவசியமாகும்.

குரோத உணர்வு மனிதர்களிடையே உலக வாழ்வில் விட்டுப் பிரிவதில்லை. ரசூலுல்லாஹ்வைப் பொறுத்தமட்டில் அவர்களில் இது எடுக்கப்பட்டுள்ளது. எம்மிடத்தில் நாம் தான் அகற்ற முயல்தல் வேண்டும்; அம்முயற்சி முழுமையான வெற்றியினை தரும் என்று எதிர்பார்க்க முடியாது; ஏனெனில் மறுமையிலேதான் அல்லாஹ் இதனைப் போக்குவிக்கிறான்; இது குறித்து ஹதீஸ்கள் உள்ளன. எம் விளக்கத்தை திருப்பக் கூடும் என்பதனால் தவிர்க்கிறோம்.

இவ்வசனத்தின் விளக்கத்தினை சுருங்கக் கூறின், மனிதப் புலனின் ஆளுகைக்குட்படாத விடயங்களில் உடனே அவன் இறங்குவதில்லை; எம் கண்களுக்குப் புலப்படாத பாதை வழியே அல்லாஹ் எம்மை வழிநடாத்திச் செல்கின்ற போது, வாழ்வியற் திருப்பங்கள் நிகழ்கின்றன. விருப்பமில்லாத போது அத்திருப்பத்தினை எதிர்க்கிறோம். ஆனால் அதுவே, எமக்கு உடன் புலப்படாத சிறப்பான நாளைய வாழ்வை நோக்கிய இன்றைய நகர்வாகும்.

---

### பதுளை பர்தா விவகாரம்
### பிந்திய செய்தி

நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் அதிருப்தியடைந்த தமிழ் மாணவிகள் முஸ்லிம் மாணவிகள் சிலரை கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதனால் 3 மாணவிகள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அதில் ஒரு மாணவி இன்னும் பூரண குணமடையாத நிலையில் உள்ளார். இதனைக் கேள்வியுற்று ஆத்திரமடைந்த சிலர் பாடசாலைக்கு ஏதோ அலுவலாக (?) வந்திருந்த முன்னாள் அதிபர் (பர்தா பிரச்சினையை பூதாகரமாக்கியவர்) திருமதி கணேஷனையும் மற்றுமொரு ஆசிரியையும் தாக்கியுள்ளனர். பின்னர் இப்பிரச்சினையை வளாக்கிறார் என்று சந்தேகிக்கப்படும் ஒரு தமிழ் இளைஞர் மறைந்திருந்ததாகக் கூறப்படும் கடை அலுமாரி ஒன்றினையும் சேதப்படுத்தியுள்ளனர். பின்னர் பிரச்சினை வளராமலிருப்பதற்காக தமிழ் முஸ்லிம் பிரமுகர்கள் ஒன்று கூடி சுமுகமாக இப்பிரச்சினையைத் தீர்த்து வைத்துள்ளனர்.

பாடசாலையில் வன்முறைகள் நிகழாவண்ணம் தடுக்கு முகமாக தலா இவ்விரண்டு தமிழ் முஸ்லிம் சகோதரிகள் பாடசாலையைக் கண்காணிப்பதில் ஈடுபடுகின்றனர். தற்போது நிலை சுமுகமானதாக இருப்பினும் மாணவர் வரவு குறைவாகவே காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றத்தையும் அவமதித்த பதுளை தமிழ் மகா வித்தியாலயம்!

## பதுளை ஹிஜாப் விவகாரம்

எமது ஊரில் நடந்த ஹிஜாப் விவகாரம் முற்றிலும் இவ்வூரில் உள்ள முஸ்லிம்களால் மாத்திரம் சமாளிக்க முடியாத ஒன்றாக மாறியதை அடுத்து, பொதுசன தொடர்பு சாதனங்கள், அரசியல் பலம் ஏதும் இல்லாத நிலையில் இதனை ஊரறிய, உலகறியச் செய்வதற்கு 'அல்ஹஸனாத்', 'மீள்பார்வை', 'நவமணி' ஆகிய பத்திரிகைகள் ஆற்றிய சேவையை நன்றியுடன் நோக்குகிறோம். குறிப்பாக 17.09.1999 அன்று முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி ஒரு போராட்டத்தை கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளியிலிருந்து ஆரம்பித்து, அமைச்சர் தொண்டமான் அவர்களது அலுவலகம் வரை ஊர்வலமாகச் சென்று ஒரு மகஜரையும் சமர்ப்பித்து எங்கள் பிரச்சினையை நாடறியச் செய்தது. இப்போராட்டத்தில் வெற்றியை அடைவதற்கு எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய சில ஆலோசனைகளையும் மு.ஐ.வி.மு. எமக்குத் தந்துதவியது.

யாவரும் எதிர்பார்த்தவாறே அரச சார்பு பதுளை முஸ்லிம் அரசியல் வாதிகளின் செயல்கள் அமைந்தன. அவர்கள் வாக்களித்ததற்கு மாற்றமாக, பிரச்சினைக்குரிய பாடசாலையில் ஏற்கனவே சேவையாற்றிய 08 முஸ்லிம் ஆசிரியைகள் இடமாற்றம் செய்யப்பட்டு, பதிலாக ஹிஜாப் அணியாத ஒருவர் மட்டுமே தற்போதும் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் இரண்டு ஆசிரியைகள் ஹிஜாப் அணிந்து வரவே (04.10.99 இல்) "ஹிஜாபுடன் உங்களுக்கு இங்கு வேலை செய்ய முடியாது" என்று கூறி ஒரு மணித்தியாலத்துள் அவர்களிருவரும் தந்தி மூலம் இடமாற்றம் செய்யப்பட்டனர். ஹிஜாப் அணியாத ஆசிரியையிடமும் "நான் ஹிஜாப் அணிந்து வர பாடசாலை நிர்வாகத்திடம் அனுமதி கோரமாட்டேன்" என்று வாக்குறுதியினை எழுத்து மூலம் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த ஆசிரியையோ, **"நான் ஹிஜாப் அணியாததற்காக, இஸ்லாத்தை விற்கத் தயாரில்லை"** என்று கூறிவிட்டார்

### - அபூ உஸாமா -

இச்சந்தர்ப்பத்தில் 12.12.1995 திகதியுடைய கல்வி அமைச்சின் 37/95 சுற்றுநிருபத்தின்படி முஸ்லிம் மாணவிகள் பஞ்சாப் சீருடை அணியலாம் என்பதை உணர்ந்த இப்பாடசாலை முஸ்லிம் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பஞ்சாப் சீருடையுடன் அனுப்பவே, மீண்டும் ஹிந்து தீவிரவாத சக்திகள் உடையை இழுத்தல், கேலி செய்தல், தரக்குறைவாக ஏசுதல் போன்ற வன்செயலில் ஈடுபட்டனர். எனினும் இச்சுற்று நிருபம் தொடர்பாக பெற்றோர் அறிவித்தமையால் இவ்வுடையுடன் வருவதை பாடசாலை நிருவாக மட்டத்தில் தடுக்க முடியாமல் போய் விட்டது. எனினும் தொந்தரவுகள் அதிகரித்ததனால் கல்வித் திணைக்களத்தால் ஆசிரியைகளுக்கும், மாணவிகளுக்கும் இச்சுற்று நிருபம் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டது. பின்னர் பிரச்சினைகள் தொடராதிருக்க பொலிசாரின் உதவி நாடப்பட்டது. பாடசாலைக்குள் வெளியார் எவரும் பிரவேசிக்கலாகாது எனவும் அறிவிக்கப்பட்டது. எனினும், இந்து தீவிரக்குணம் கொண்ட மாணவிகள் சீருடையைப் பகிஷ்கரித்து வண்ணவண்ண தாவணி பாவாடை உடை அணிந்தனர். வெளியார் யார்? மாணவிகள் யார், என்று பிரித்தறிய முடியாத நிலை ஏற்படவே சீருடை இன்றி பாடசாலைக்கு அனுமதி வழங்குவதில்லை என மீண்டும் பொலிசார் அறிவித்தனர். நிலைமை எல்லைமீறிச் செல்லவே, பாடசாலை தொடர்பான நிலைமைகளை விளக்கி பொலிசாரினால் பதுளை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் 12.10.1999, 13.10.1999 ஆகிய திகதிகளில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் 14.10.1999 இல் பாடசாலையிலிருந்து சுமார் 75 மீட்டர் தொலைவில் ஒரு வீட்டில் மூன்று முஸ்லிம்கள் (இருவர் வீட்டுக்கார சகோதரர்கள்) பாடசாலை வளவிற்குள் செயற்பட்டனர் என்ற பொய்க் காரணம் கூறப்பட்டு கைது செய்யப்பட்டனர். இதனையறிந்த பதுளை வாழ் முஸ்லிம்கள் பொலிஸ் நிலையத் திற்கருகில் ஒன்று சேர்ந்து விட்டனர். முதற்கண் அல்லாஹு தஆலாவின் பேருதவி, அடுத்து கொழும்பிலிருந்து எமது அரசியல் வாதிகளின் சிபாரிசு, DIG பொலிஸ் பிரிவின் "பின்விளைவு பற்றிய அறிக்கை" என்பவற்றை கவனித்த DIG, அம்மூவரையும் பிணையில் விடுதலை செய்ய அனுமதித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் பாடசாலை சம்பந்தமாக பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் நீதிமன்ற தீர்ப்பு 15.10.1999 இல் மாஜிஸ்திரேட்டினால் வழங்கப்படுவதாக, கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக பொலீஸ் நிலையம் சென்ற எமக்கு தகவல் கிடைத்தது. நீதிமன்றம் சென்ற நாம் அத்தீர்ப்பு 19.10.1999 இல் வழங்கப்படவுள்ளதாக அறிந்து அந்த வாய்ப்பை பயன்படுத்த எண்ணி கொழும்பில் உள்ள முஸ்லிம் வழக்கறிஞர்கள் சிலரிடம் தெரிவிக்கவே ஜனாப்களான ஏ.உவைஸ், கஸ்ஸாலி ஹுஸைன், ஏ.எல்.எம், நஜிமுதீன், சம்சுதீன் ஆரிப் ஆகியோர் ஆகியோர் எதுவித கட்டணமுமின்றி பதுளை வருகை தந்து நீதிமன்றத்தில் வாதாடி அதன் தீர்ப்பை எமக்கு சாதகமாக, அதாவது "37/95 சுற்று நிருபத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கமைய முஸ்லிம் மாணவிகள் பஞ்சாபி உடை அணிந்து பாடசாலை வரலாம்; இதனை எதிர்க்கும் எவராயினும், அவரை சட்டத்துக்கு முன் கொண்டுவரப்பட வேண்டும்" என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. பின் 22ம் திகதி வரை பாடசாலை சுமுகமாக நடைபெற்றது. (23, 24 விடுமுறை தினங்கள்) 25, 26ம் திகதிகளில் இந்து மாணவிகள் சிலர் வண்ணப் பாவாடை தாவணியில் மீண்டும் பாடசாலை வந்திருந்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் நடைபெற்ற ஓர் அதிசயமான விடயத்தையும் குறிப்பிட்டாக வேண்டும், மேற்படி தீர்ப்பின் எழுத்துப் பிரதியையும், நீதியால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட கல்வி அமைச்சின் 37/96 சுற்று நிருபத்தின் பிரதியொன்றையும் அலுவலக ஆவணமாக எடுத்துச் செல்லுமாறு அதிபருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. எனினும் அவர் அதனைப் புறக்கணித்து பெற்றுக் கொள்ளாது சென்றுள்ளார். நீதி மன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக அவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு பொலிஸ் நிலையம் வரை அவர் செல்ல வேண்டிய தாயிற்று. பின்னர் பாடசாலைக்கு வந்து முஸ்லிம் மாணவிகளிடம் "என்னை சிறையில் தள்ளப் பார்த்தீர்களே" என்று கூறியுள்ளார்.

இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால் இந்த அதிபர் இதற்கு முன்னர் ஊவா ஹைலன்ட் தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றியவர். பதுளை தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபருக்கான வெற்றிடம் ஏற்பட்டு இவர் நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரிய வந்ததும் பதுளையிலுள்ள சில தமிழர்கள் இவருடைய வீட்டுக்கே சென்று "பதுளைக்கு வந்தால் ஆபத்து" என்று எச்சரித்ததும், பதுளை மாணவிகளைக் கொண்டு பகிரங்கக் கூட்டம் ஒன்றில் இவரைப் பற்றி சாதி சமயமெல்லாம் இழுத்து தரக்குறைவாக பேசவைத்ததும் ஊரறிந்த விடயம். அதனை அவரே சந்திக்கச் சென்றவர்களிடம் சொல்லி வேதனைப்பட்டுள்ளார்.

தொடர்ச்சியாக நடைபெற்று வரும் இப் பிரச்சினையால் முஸ்லிம் மாணவிகளது கல்வி பெரும் பாதிப்புக்குள்ளாகும் என அஞ்சப்படுகிறது. க.பொ.த (சா/த) மாணவிகளுக்கு அல்அதான் மகா வித்தியாலயத்தில் மாலை நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உயர்தர வகுப்பு மாணவிகளின் பிரச்சினை தீராப் பிரச்சினையாக உள்ளது.

அத்தோடு இந்த "முஸ்லிம் உரிமைப் பறிப்பு" போராட்டத்தில் பதுளையை அண்டியிருக்கும் பாடசாலைகள் சிலவும் இறங்கியுள்ளதாகத் தெரிகிறது. ஹல்தும் முல்ல தமிழ்ப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஹிஜாப் அணிந்த ஆசிரியை அப்பாடசாலையின் 11ம் ஆண்டு மாணவர்களால் தொல்லைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். பதுளை சரஸ்வதி மத்திய மகா வித்தியாலயத்திலும் (ஆண்கள் பாடசாலை) வகுப்பு நேரங்களில் பாடங்கள் நடைபெறாது அதே ஆசிரியர்களைக் கொண்டு மாலைநேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன. அப்பாடசாலையிலும் கணிசமான அளவு முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்களுடன் வாஞ்சையோடு பழகிய தமிழ் மக்கள், திடீரென கல்வியமைச்சின் சுற்று நிருபம், கல்வித் திணைக்கள பணிப்புரை, பொலிசாரின் அறிவுறுத்தல், இறுதியாக நீதிமன்றத் தீர்ப்பு எதனையும் கவனத்திற் கொள்ளாது மூர்க்கத் தனத்துடனும், சட்டத்தை மதியாத அடாவடித் தனத்துடனும், மதசகிப்புத் தன்மையற்றும் நடந்து கொள்வது ஏன் என்று என்றும் புதிராகவே உள்ளது! அத்தோடு பதுளை நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்வதற்கு ஒரு சிலர் முயன்று வருவதாக தகவல் கிடைத்துள்ளது.

## உங்களைப் பார்த்தொரு வினா?

கண்ட திக்கெலாம்
முஸ்லிம் என்ற பெயருக்கு
கீரியாக வந்திடும் இனவாதம்
எங்கே? எப்போது?
தன்னாயுளை முடிக்கும்?

எந்தத் தவறு செய்ததற்காக
தலையில் ஹிஜாபைக் கண்டால்
உறுக்கியே பார்க்கிறீர்
இறைவனளித்த உரிமையது யாவருக்கும்
என்பதை ஏன் மறந்து போனீர்?

பெரும்பான்மை இனம் நாமே
என்றெண்ணி எம் உரிமை பறிக்கிறீரே....
இன்னொரு பெரும்பான்மை
இனத்துடன் முரண்பட்டுக் கொண்டது
உரிமைப் போராட்டம் என்பதும்
ஞாபகத்திலில்லாது போனதோ?

யார் விதைத்தார்
உம் உள்ளத்தில்
இனவாத நச்சுக் கொடி...?

முன்னேற்றம் என்ற பேரில்
ஆடை அவிழ்க்கவா சொல்கிறீர்?
யார் சொல்லித் தந்தார்
இந்த நாட்டுக் கூத்தை...?

இரத்தமும் வியர்வையும் சிந்தி
உடல்களை மண்ணுள் புதைத்து
கட்டியெழுப்பியது இந்த மார்க்கம்!
ஒரு நொடியில் வீழ்த்தலென்பது
சதிகளால் மட்டும் சாத்தியமில்லை!

பாவமின்றி பழி சுமக்கும்
முஸ்லிம்களின் நாளைய கதியென்ன?
என்ன தவறு செய்ததாய்
எம்மைச் சீண்டிப் பார்க்கின்றனர்?

முஸ்லிம் என்ற பெயரில்
அந்நிய வாழ்க்கை வாழ்வதாலா?
இல்லையென்றால்
அல்லாஹ்வை மறந்து வாழும்
ஈமான் கெட்ட - எம் மாதரின்
ஈனத்தனத்தாலா?

அல்லாஹ்வின் நம்பிக்கை
இப்றாஹிம் நபிக்கு
குளிர்ச்சியைத் தரவில்லையா?
பிலாலுக்கு சுதந்திரம் தரவில்லையா?

துயில் கொண்ட உள்ளங்களை
தண்ணீர் விட்டு எழுப்புவோம்
பலம் கொண்ட உள்ளங்களே
கைசேருங்கள்
புதிய அத்தியாயம் ஆரம்பிக்க
பெண் சமுதாயத்தின் சார்பில்
என் பேனாவின் அழைப்பு இது!

**ஹமீதா நிஸார் - பண்டாரவளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவன இல்லம் வேண்டுமா?

## ஹதீஸ் விளக்கம்

அஷ்ஷெய்க் H.M. மின்ஹாஜ்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**"உண்மை உரைக்கக் கூடியவனாக இருந்தும் தர்க்கம் புரிவதை விட்டு விட்டவனுக்கு சுவர்க்கத்தின் சுற்றுப் புறத்தில் ஒரு இல்லத்தையும், நகைச்சுவையாக பேசக்கூடியவனாக இருந்தும் பொய்யுரைப்பதை விட்டு விட்டவனுக்கு சுவர்க்கத்தின் நடுப்பகுதியில் ஒரு இல்லத்தையும், மேலும் எவரது பண்பு அழகாக அமைந்து காணப்பட்டதோ அவருக்கு சுவர்க்கத்தின் உயர்ந்த பகுதியில் ஒரு இல்லத்தையும் பெற்றுத் தருவதற்கு நான் உத்தரவாதமளிக்கின்றேன்"**

(அறிவிப்பாளர்: அபூ உமாமா அல்பாஹிலி (ரழி)
ஆதாரம்: அபூதாவூத்)

நாம் விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸ் தாரமி, தபரானி போன்ற இமாம்களாலும் பதிவ செய்யப்பட்டுள்ளது. நபி (ஸல்) அவர்கள் சுவன இல்லங்களைப் பெற்றுத் தருவதற்கான உத்தரவாதம் ஒன்றை வழங்குகின்றார்கள். தனிமனித தொடர்பாடல்கள் நெறிப்படுத்தப்பட்ட நிலையில் தொடருகின்ற போதே சுவன இல்லங்கள் கிடைக்கின்ற வாய்ப்பு கிட்டுகின்றது. ஏகத்துவத்தை இதயத்தில் ஆழப்பதித்து இணை வைப்பை விட்டும் தூர விலகி வாழ்ந்தால் மட்டும் சுவன இல்லங்கள் கிடைப் பதில்லை. மாறாக, இறைவன் விதித்த கடமைகள் நிறைவேற்றப்பட்டு, அவன் தடுத்தவைகள் புறந்தள்ளப்பட்டு, ஹலால் - ஹராம் பேணப்பட்டு, நற்செயல்கள் புரியப்படும் போது மட்டுமே சுவனம் எமக்கு கிடைக்கும்.

### தர்க்கம்

நபி (ஸல்) அவர்கள், தனிமனிதனது இறுதி இலக்கு சுவனம் என்றும், அதனை அடைந்து கொள்வதற்கான ஊடகங்கள் தர்க்கம் புரியாமலும், பொய்யுரைக்காமலும் வாழ்ந்து பண்பாடுகளை அழகாக்கிக் கொள்வதுமாகும் என்றும் இந்த ஹதீஸின் மூலம் குறிப்பிடுகின்றார்கள்.

**"மேலும் ரஹ்மானின் அடியார்கள் எத்தகையோரென்றால், அவர்கள் பூமியில் பணிவாக நடப்பார்கள். மூடர்கள் அவர்களுடன் பேச முற்பட்டால் 'ஸலாமுன்' (சாந்தி சமாதானம் உண்டாகட்டும்) என்று கூறி (அவர்களை விட்டு விலகி) விடுவார்கள்"** (அல்புர்கான்: 63)

ரஹ்மானின் அடியார்களுக்கு அவர்களது ஆளுமைப் பண்புகள் எந்தளவு முக்கியமானதோ அவ்வாறே காலமும், நேரமும் அவர்களுக்கு பெறுமதி வாய்ந்தது. இவ்விரண்டையும் தகர்த்துவிடக் கூடிய பண்பாகவே தர்க்கமும், வீண் விவாதமும் அமைகின்றன. விவாதத் திறன் சிலருக்கு பிறப்பியல் பண்பாகவே அமைந்து காணப்படுகின்றது. வேறு சிலர் அதனை தங்களது சுய முயற்சியினூடாக வளர்த்துக் கொள் கின்றனர். அநேகமாக விவாதம், தர்க்கம் போன்றன சத்தியம் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் நடாத்தப்படுவதில்லை. மாறாக போட்டியில் வெற்றி பெறும் எண்ணமே அங்கு மிகைத்து நிற்கின்றது. ஆரம்பத்தில் நல்லெண்ணம் காணப்பட்டாலும், உண்மை உரைக்கப்பட்டாலும் விவாதம் சூடுபிடிக்கின்ற போது வெற்றிக் கம்பத்தை எட்டிப் பிடிப்பதே பிரதான இலட்சியமாக மாறிவிடுகின்றது. அவ்வேளையில் உண்மை இல்லா தொழிக்கப்பட்டு அசத்தியம் அவ்விடத்தைப் பிடித்துக் கொள்கின்ற நிலையும், எல்லோராலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மிகவும் சரியான கருத்துக்கள் கூட விவாதத் திறமையால் தோல்வி காணுகின்ற நிலையும் ஏற்படுகின்றது. சிலபோது இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடு களையும், ஷரீஅத் சட்டதிட்டங் களையும் மிகைத்து விடுகின்ற அளவுக்கு விவாதம் மனிதர்களை மாற்றி விடுகின்றது. எனவே தான் விவாதத்தை அல்லது தர்க்கத்தை பிரதான பிரச்சார ஊடகமாக அல்லாஹ் குறிப்பிடவில்லை. குர்ஆனிய வசனப் பிரயோகம் இதனை அழகுற விளக்குகின்றது.

**"(நபியே! மக்களை) உயர்ந்த ஞானம் நிறைந்த கருத்துக்களாலும், அழகிய நல்லு பதேசங்களாலும் உம்முடைய ரப்புடைய வழியின் பால் அழைப்பீராக! மேலும் அழகிய முறையில் அவர்களுடன் தர்க்கம் செய்வீராக!"**
(ஸூரத்துந் நஹ்ல் : 125)

**"அழகிய முறையிலன்றி வேதக் காரர்களோடு நீங்கள் தர்க்கம் புரியாதீர்கள்"**
(ஸூரத்துல் அன்கபூத் : 46)

மேற்படி திருமறை வசனங்கள், விவாதத் திறமை அற்றவர்கள் அல்லது அழகுற தர்க்கம் செய்யத் தெரியாத வர்கள் தமது பிரச்சார சாதனமாக தர்க்கத்தைக் கைக்கொள்ளக் கூடாது என்று குறிப்பிடுகின்றன. ஏனென்றால், சிறந்த முறையில் புரியப்படாத தர்க்கம் சத்தியத்தை அசத்தியமாகவும், அசத்தியத்தை சத்தியமாகவும் மாற்றி விடுவதுடன், ஆட்களைத் திரட்டிக் கொடுத்து விடுகின்றது. சிலபோது சில நன்மைகளை தர்க்கம் உருவாக் கினாலும் பெரும்பான்மையாக அது விபரீதமான விளைவுகளையே தோற்றுவிக்கின்றது. விவாதத்தின் போது சத்தியம் உள்வாங்கப்படுவதை விட உணர்ச்சிகரமான கருத்துப் பரிமாற்றமும், காரசாரமான ஆவேசமான பேச்சுக்களும், சொல்லம்புகளுமே சபையோரினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரிமை கொடுத்து கிரகிக்கப்படுகின்றன. சத்தியக் கருத்துக்கள் அங்கு புதைக்கப்படுகின்றன. போட்டிக்காக நடாத்தப்படுகின்ற விவாதத்தைத் தவிர உள்ள ஏனைய விவாத அரங்குகள் பொது முடிவு எட்டப்படாமலேயே முடிவடைந்திருப்பதும் யதார்த்தமான உண்மையாகும். விவாதத்தில் ஈடுபடுவோர் தோல்வியைச் சகித்துக் கொள்ளும் மனப்பான்மை அற்றவர்களாகவே காணப்படுவர். குறிப்பாக இஸ்லாத்தின் அழைப்பாளர்கள் இஸ்லாத்தை விவாதப் பொருளாக மாற்றி சந்தைப் படுத்துவதை தவிர்த்துக் கொள்வதே சாலச் சிறந்தது. இத்தகைய மரபு இஸ்லாத்தின் வழிமுறையல்ல. இம்மரபை கைக்கொள்கின்ற முஸ்லிமுக்கு சுவன இல்லத்தைப் பெற்றுத் தருகின்ற உத்தரவாதத்தை நபிகளார் வழங்க வில்லை. நபிகளாரின் வாழ்நாளில் மறைவானவை பற்றியும் ஏனைய விடயங்கள் பற்றியும் தர்க்கித்த சகாபாக்கள் குறித்து அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **"அல்லாஹ்விடத்தில் மிகவும் வெறுப்புக்குரியவன் குதர்க்கவாதம் செய்பவனே"**
(ஆதாரம் : புகாரி)

தர்க்கம் செய்வது குறித்து ஸலபுஸ் ஸாலிஹீன்களும் முன்னெச்சரிக்கையோடு கருத்துக்களை கூறிவைத்துள்ளனர்.

அலி (ரழி) அவர்கள் கூறினார்கள்:
"தர்க்கம் செய்வது குறித்து உங்களை நான் எச்சரிக்கின்றேன். ஏனென்றால் அது மார்க்கத்தை அழித்துவிடும்"

அல் அஹ்னப் இபுனு கைஸ் என்பார் கூறுகின்றார்கள்:
"அதிகம் தர்க்கம் புரிவது உள்ளத்தில் நயவஞ்சகத்தனத்தை உருவாக்கும்" சுவன இல்லத்தை அடைந்து கொள்ள தர்க்கம் புரிவதை விட்டு விடுவதே மிகவும் சிறந்த வழியாகும்.

## பொய்

சுவன இல்லத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு முஸ்லிம் தனது வாழ்வை விட்டும் இல்லாதொழித்து விட வேண்டிய அடுத்த மோசமான பண்பு பொய்யாகும். இஸ்லாமிய ஷரீஅத் தடுத்து விட்ட இப்பண்பு சமூகத்தில் மலிந்து காணப்படுகிறது. பொய் ஈமானியப் பண்பல்ல. அது நயவஞ்சகப் பண்பாகும். பேசினால் பொய் உரைப்பது நயவஞ்சகனின் அடையாளமாகும். பொய் என்னும் படுமோசமான பண்பு ஏனைய எல்லா தீமைகளினதும் நுழைவாயிலாக இருக்கின்றது. **"ஒருவன் கோழையாக இருக்கலாம். உலோபியாக இருக்கலாம். பொய்யானாக இருக்க முடியாது"** என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் நிர்க்கதியான நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கும், பிறரின் நன்மதிப்பைப் பெறுவதற்குமே இன்று சர்வசாதாரணமாக பொய்யுரைக்கப்படுகின்றது.

நாம் விளக்கப் புகுந்துள்ள ஹதீஸ்கள் நகைச்சுவையாகப் பேசும் திறமை கொடுக்கப்பட்டவர் பொய் உரைப்பதை விட்டு விட வேண்டும் என்று பணிக்கின்றன. பிறரின் உள்ளத்தில் அமைதியையும், ஆனந்தத்தையும் ஏற்படுத்தி சிரிப்பூட்டி மகிழ்விப்பதற்காகவே நகைச் சுவைத் துணுக்குகள் பரிமாறப்படுகின்றன. சிலபோது பிறரின் நன்மதிப்பைப் பெறுவதற்காக நகைச்சுவையாகப் பேசுகின்றவர்கள், தமது ஹாஷ்யத்திற்கு வளம் சேர்க்கும் நோக்கோடு இயல்பாகவே பொய் உரைக்கத் தலைப்பட்டு விடுகின்றனர். இறுதியில் இந்நிலை "பொய்யன்" என்ற கட்டத்தை அடைந்து கொள்ள வழியமைக்கின்றது. நபி (ஸல்) அவர்கள் நகைச்சுவையாகப் பேசுவார்கள். ஆனால் அவர்கள் உண்மையையே கூறுவார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **நிச்சயமாக நான் உண்மை உரைக்கக் கூடியவன்"**
(ஆதாரம் : திர்மிதி)

ஆரம்பத்தில் பொய் ஒருவருக்கு சாதகமான ஒரு சூழ்நிலையை அமைத்துக் கொடுத்தாலும் இறுதியில் மீள முடியாத ஒரு அனர்த்தத்தில் அவரைத் தள்ளி விடுகின்றது. வியாபாரக் கொடுக்கல் வாங்கலிலும், கடன் பெறும் போதும், அதனை மீள ஒப்படைக்கின்ற விடயத்திலும் பொய்யுரைப்பது இன்று நாகரிகமான ஒரு செயலாகக் கருதப்படுகின்றது. இது வரவேற்கத்தக்க நிலையல்ல. சுவனத்தின் நடுப்பகுதியில் ஒரு இடத்தைப்பெற்றுக் கொள்ள, கட்டாயம், பொய்யுரைப்பதை விட்டு விட வேண்டும்.

நாம் விளக்கி வந்த இழி குணங்களை விட்டு தனது பண்புகளை அழகுப்படுத்திக் கொண்டவருக்கு சுவனத்தின் உயர்ந்த பகுதி வெகுமதியாக கிடைக்கும். இஸ்லாம் அழகிய நற்பண்புகளால் அலங்கரிக்கப்பட்ட மார்க்கமாகும். அது இவ்வுலகில் ஆதிக்கச் சக்தியாக மேலோங்கியதும் பண்பாட்டுப் புரட்சியின் மூலமாகவே தான். இஸ்லாத்தின் தனி மனிதர்கள் தமது பண்புகளை அழகுபடுத்திக் கொண்டு களம் புகுந்த வேளை வேற்று மதத்தவர்களால் வரவேற்கப் பட்டார்கள். தம்மை ஆளுமாறு அவர்களை வேண்டிக் கொண்டார்கள். இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது என்ற குற்றச்சாட்டு அர்த்தமற்றது. இஸ்லாமிய வரலாற்றுப் பெருவெளியில் தங்களது பண்புகளை அழகுபடுத்திக் கொண்ட தனிமனிதர்களின் குடும்ப வாழ்வும், சமூக வாழ்வும், அவர்களது சர்வதேச தொடர்பாடல்களும் இக்குற்றச்சாட்டை மறுத்துரைக்கின்ற சிறந்த நல் ஆதாரங்களாகும். தனி மனிதர்களின் நற்பண்பாடு இஸ்லாமிய சமுதாயத்தில் சுமுக நிலையைத் தோற்றுவிப்பதோடு பிற மதச் சகோதரர்களுக்கு மத்தியில் இஸ்லாம் பற்றிய நல்லபிப்பிராயத்தையும் உருவாக்கிவிடும். மேலும், மறுமை நாளில் 'மீஸானுல் ஹஸனாத்தில்' எடையை அதிகப்படுத்தியும் விடும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **"நன்மை – தீமை நிறுக்கும் தராசில் எடையை அதிகப்படுத்திவிடக் கூடியது இறையச்சமும், நற்பண்பாடுமாகும்"** இன்றைய சூழ்நிலையில் இனவாத உணர்வலைகளால் முஸ்லிம் சமுதாயம் அள்ளுண்டு செல்வதை தடுத்து நிறுத்தி விடக்கூடிய ஒரே ஆயுதம் நற்பண்பாடுகளாகும்.

எமக்கு சுவன இல்லம் வேண்டுமென்றால், அண்ணலாரின் அருங்குணங்களைக் கடைப்பிடித்து, அவர்கள் வன்மையாகக் கண்டித்துத் தடுத்துவிட்ட படுமோசமான பண்புகளைவிட்டும் தவிர்ந்து வாழுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தானில் ஆட்சி மாற்றம்

# "தவிர்க்க முடியாத ஒரு தேர்வு"

ஆஸிம் அலவி

அது ஒரு கணப் பொழுதில் நடந்தேறிய நாடகம் என்றே கூற வேண்டும். "எனது சகோதர சகோதரிகளே! அனைத்தும் கட்டுப் பாட்டுக்குள் அடங்கி விட்டன; நீங்கள் இழிவுக்குள்ளானபோது உங்களுக்கு உங்களது ராணுவம் கைகொடுத்தது. அவ்வாறே இனி யும் அது உங்களுக்குக் கை கொடுத் துக் கொண்டே இருக்கும். இன்ஷா அல்லாஹ்". இந்த உறுதி மொழி களைக் கொண்டுதான் ஜெனரல் பர்வேஸ் முஷர்ரபின் ராணுவப் புரட்சி ஆரம்பமானது.

அது ஒரு கணப் பொழுதில் நடந்தேறிய நாடகம். கொழும் பிலிருந்து ஜெனரல் பர்வேஸை ஏற்றி வந்த விமானம் கராச்சி விமான நிலையத்தில் இறங்குவதற்கு இன்னும் ஆறு நிமிடங்கள் தாமதித் திருந்தால் எரிபொருள் வற்றி அதிலுள்ள இருநூற்றுக்கும் மேற் பட்ட பிரயாணிகளுடன் விழுந்து சிதறியிருக்கும். விமானம் இறங்கு வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள செய்தியை விமானமோட்டி ஜென ரல் பர்வேஸுக்குத் தெரிவித்த போது அவர் கைத் தொலைபேசி யூடாக கராச்சி மற்றும் இஸ்லாமா பாத்திலுள்ள ராணுவக் கட்டளைய கங்களுக்கு அறிவிக்கிறார். மறு முனையில், நவாஸ் ஷரீப் அவரது சகோதரன் பஞ்சாப் மாநில முதல மைச்சர் ஷஹ்பாஸ் சரீப் மற்றும் நவாஸின் கையாளான ஜெனரல் ஸியாஉத்தீன் போன்றோர், ஜெனரல் ஸியாஉத்தீனை புதிய ராணுவத் தளபதியாக்கும் காட்சியை மக்களுக்குக் காட்டும் நோக்குடன் தொலைக்காட்சி நிலையம் செல்கின் றனர். இரு நிகழ்வுகளும் இஸ்லாமா பாத்திலுள்ள ராணுவக் கட்டளைய கத்துக்குக் கிடைத்து விடுகிறது. அங்கே இரு அதிரடி நடவடிக்கை கள் ஆரம்பமாகின்றன. ஒன்று ஒரு பலம் பொருந்திய ராணுவக் குழுவை அனுப்பி நவாஸையும், ஷஹ்பாஸையும், கையாளையும் மடக்கிப் பிடிப்பது; அடுத்தது, ஆகாயத்தில் தவித்துக் கொண்டி ருக்கும் ஜெனரல் முஷர்ரபையும் ஏனைய பிரயாணிகளையும் உடனே கீழிறக்குவது. ஒரு செக்கண்டும் தாமதிக்க முடியாத உயிராபத்துள்ள அதிரடி நடவடிக்கை விளைவாக, நவாஸ் கும்பல் மடக்கிப் பிடிக்கப் படுகிறது. ஜெனரல் பர்வேஸ் கீழிறங்கி வந்து ஆட்சியைக் கைப்பற்றுகிறார்.

ஆரம்ப நிகழ்வுகளை அவ தானித்த ஆய்வாளர்கள், "அமெரிக்கா கிளர்ந்தெழுந்து, பாகிஸ்தானுக்கு எதிராக நெருக்குதல்களைக் கொண்டு வந்து அதனை வீழ்ச்சி யின் விளிம்புக்குக் கொண்டு சென்று விடும்" என எதிர்பார்த்தனர். ஆனால் அமெரிக்கர் தாம் அந்தளவு முட்டாள்கள் அல்ல என்பதையும் தாம் அசல் முனாபிக்குள் என்ப தையும் நிரூபித்துக் காட்டி விட்டனர். நான் முன்பு எழுதிய கட்டுரை யொன்றில் பேராசிரியர் குர்ஷித் அஹ்மத் அவர்களை மேற்கோள் காட்டி, ஆபத்து வரும்போது நவாஸ் ஷரீபை அமெரிக்கா கைவிட்டு விடும் எனக் குறிப்பிட்டி ருந்தேன். அது உண்மையில் இப் போது நடந்து விட்டது. இலங்கை யில் ஆட்சி மாற்றம் ஏற்படும் போது லேக் ஹவுஸ் நிறுவனம் எவ்விதம் பல்டி அடிக்குமோ அதே விதம் அமெரிக்காவும் நவாஸை விட்டு பல்டியடித்து விட்டது. எவ்வகையிலும் பாகிஸ்தானைப் பகைத்துக் கொள்ள அமெரிக்கா தயாரில்லை எனும் உண்மை இதி லிருந்து தெளிவாகிறது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, மற்றும் வல்லரசு நாடுகளும் ஒரு மிருதுவான அணுகு முறையையே கடைப்பிடித்தன. இதிலிருந்து புல னாகும் மற்றுமொரு உண்மை யா தெனில், கார்கிலில் முஜாஹிதீன் களை தொடர்ந்து முன்னேற நவாஸ் ஷரீப் அனுமதித்திருந்தாலும் அமெரிக்கா முட்டாள்தனமாக எதிர் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்காது.

உலகம் கிளர்ந்தெழாவிட்டா லும், மேற்கிலிருந்து கண்டனக் கணைகள் பாகிஸ்தானை நோக்கி வந்து குவிந்து கொண்டுதான் இருந்தன. ஏனெனில் அவர்களைப் பொறுத்த மட்டில் பாகிஸ்தானில் நடந்தது சட்ட விரோதமான ஒரு செயல்; பாகிஸ்தான் ராணுவம் ஒரு பெரும் பாவத்தைச் செய்துள் ளது; ஆனால், சூடான் ஜனாதிபதி உமர் அல் பஷீர் குறிப்பிடுவது போன்று, **"இஸ்லாத்தில் ராணுவ ஆட்சி, சிவிலியன் ஆட்சி என வேறுபாடு கிடையாது. இவை அனைத்தும் மேற்கத்திய அரசியல் ஞானிகளின் சிந்தனைகள். இவை இஸ்லாத்துக்கு அந்நியமானவை. மக்களின் நலன்களைக் காக்க எந்த மனிதன் முன்வருகிறாரோ அவர் தான் சட்டபூர்வமான ஆட்சியாளர்; அவர் ராணுவத்தின் மூலமாகவோ அல்லது வாக்கெடுப்பு மூலமா கவோ தெரிவு செய்யப்படலாம். எனவே பாகிஸ்தானில் ஜெனரல் பர்வேஸ் முஷர்ரப் ஆட்சியைக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கைப்பற்றிய விதம் இஸ்லாமிய அரசியல் சட்டங்களுக்கு முராணது அல்ல என தைரியமாகக் கூறலாம்"**

அங்கே ஒரு இஸ்லாமிய ஆட்சி உருவாகுமா என்ற கேள்விக்கு இப்போது பதில் கூற முடியா துள்ளது. **ஜெனரல் பர்வேஸ் அப்படியான ஒரு மனிதனுமல்ல.** எது எப்படியிருப்பினும் தான் எடுத்த பணியை நிறைவேற்றுவதில் மிக உறுதியாக இருக்கிறார். நாட்டின் செல்வத்தைச் சூறையாடி, அரசியல் அடாவடித்தனங்களைப் புரிந்த அனைத்து மனிதர்களையும் சட்டத்துக்கு முன் கொண்டு வந்து நிறுத்துவதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளார். இத்தகைய கள்வர்கள் விளையாடியுள்ள பணத்தின் பெறு மதி மலை போன்ற ஐயாயிரம் கோடி அமெரிக்க டாலர்களாகும். இதனை பறித்தெடுத்துக் கொள்ள முடியுமானால் சொற்ப காலத்துக்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடனு தவியின்றி ஆட்சி செய்யலாமென ஜெனரல் நம்புகிறார். இந்த வகை யில் இருநூறுக்கும் மேற்பட்ட அர சியல் கள்வர்களின் வங்கிக் கணக்கு கள் தடைசெய்யப்பட்டும், கடவுச் சீட்டுக்கள் பறிமுதல் செய்யப்பட்டும் இருப்பதோடு, அதைவிடப் பெருந் தொகையானோரது பெயர்ப் பட்டி யல் நாட்டிலிருந்து வெளியேறும் துறைகளில் வைக்கப்பட்டும் உள்ளது. எனவே எவரும் தப்பிவிட முடியாது!! நவாஸ் ஷரீபின் விதி என்னவாகப் போகிறது என்பது அல்லாஹ்வுக்குத்தான் வெளிச்சம்.

இதில் விநோதம் யாதெனில், ஜெனரல் முஷர்ரபை உயர் நிலைக் குக் கொண்டு வந்தவரும் நவாஸ் ஷரீப்தான். முன்னைய ராணுவத் தளபதி ஜஹாங்கீர் கராமத்துக்கும் நவாஸ் ஷரீபுக்கும் இடையில் முறு கல் நிலை தோன்றியதும், அவரை பதவி துறக்க வற்புறுத்தி விட்டு, நான்காவது படியில் இருந்த ஜென ரல் பர்வேஸை ராணுவத் தளபதி யாக்கினார். இதே போன்றுதான் மர்ஹூம் ஜெனரல் ஸியாஉல் ஹக்குக்கும் நடந்தது. அன்றைய ஆட்சியாளர் ஸுல்பிகார் அலி புட்டோ, நான்காவது படியில் இருந்த ஜெனரல் ஸியாவைத் தளபதியாக்கினார். எனவே இரு ஜெனரல்களும் அநியாயம் புரிந்த தமது எஜமானர்களை கீழிறக்கி விட்டனர். இவற்றுக் கிடையில் என்ன ஒற்றுமை உள்ளதென அந்த ஏகனே அறிவான்.

சரி, தன்னை "பிரதம செயல திகாரி" எனப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ள பர்வேஸ் முஷர்ரப் என்பவர் யார்? நாய்க்குட்டி களை தன்னுடன் அணைத்துக் கொண்டு தொலைக் காட்சியில் தோன்றிய ஜெனரல் ஒரு மார்க்கப்பற்றுணர் வுள்ள மனிதன் எனக் கூற முடியா துள்ளது. ஆனால் அவர் ஒரு திடவுறுதி மிக்க நாட்டுப்பற்றுள்ள பாகிஸ்தானி என்பது உறுதி. இவ ரது பெற்றோர் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்து சென்று அந்நாட்டுப் பிரஜைகளாக வாழ்கின்றனர். ஜென ரலுக்கு புகை பிடிக்கும் பழக்கம் இருப்பதோடு, அரிதாக மதுவருந் தும் பழக்கமும் இருப்பதாக கூறப் படுகிறது. அதே வேளை ஜெனரல வர்கள் தனது வெளிநாட்டுப் பயணத்தின் முதற் கட்டமாக உம்ரா வுக்குச் சென்று இஹ்ராம் உடையில் காட்சி தந்ததை பத்திரிகைகளில் கண்டு களித்தோம். **துருக்கியின் கமால் அதாதுர்க்தான் தனது முன்மாதிரி** என ஜெனரல் அறிக்கை விட்டுள் ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஸியாஉல்ஹக் அவர்களுக்கு நேர்வழி காட்டிய அல்லாஹ் இந்த ஜெனர லுக்கும் நேர்வழி காட்டும்படி பிரார்த் திப்போம். இவர் அமெரிக்காவின் பிடி யிலிருந்து தன்னை முழுமையாக விடுபடுத்திக் கொள்வாரா? என்பதை வருங்காலம்தான் எடுத்துக் காட்ட வேண்டும்.

அடுத்து, பாகிஸ்தானியர் இவ்வாட்சி மாற்றத்தை தமக்குக் கிடைத்த ஒரு அருளாகவே கரு தினர். மக்கள் தெருவில் இறங்கி பட்டாசு கொளுத்தி ஆரவாரம் செய்தனர். செய்தி ஊடகங்கள் பாராட்டித் தள்ளின. நவாஸ் ஷரீபின் அரசியல் வாழ்வு வரலாறாக மாறு வது கண்டு மக்கள் அகமகிழ்ந்தனர். பாகிஸ்தானின் அரசியல் கட்சி களும், முன்னாள் உளவுத்தாபனத் தலைவர் ஜெனரல் ஹமீத் குல், முன்னாள் ராணுவத் தளபதி ஜெனரல் அஸ்லம் பேக் போன்ற பிரமுகர்களும் ஒரு மித்து வரவேற்றனர். இது முற்றிலும் புதுமையான ஒரு மாற்றம். ஏனெனில் இதற்கு முன்பு நடந்த ராணுவப் புரட்சிகளின் போது அநேகமாக இந்நிலை இருக்கவில்லை; அப்போது எதிர்ப்பே கிளம்பியது.

இதற்கான அடிப்படைக் கார ணம் நவாஸ் ஷரீப் நாட்டின் திறை சேரியைத் திருடியும் இன்முகத் துடனான முறையில் மக்களின் அரசியல் உரிமைகளை நசுக்கியும் வந்ததுதான். ஜனாதிபதியின் அதிகா ரத்தைக் குறைத்து அரசியல் யாப் பில் மாற்றம் கொண்டு வந்தது, செனேட்சபை விவகாரங்களில் எதேச்சாதிகாரத்துடன் செல்வாக்குச் செலுத்தி சட்டத்துக்கு முரணாக செயற்பட்டமை போன்ற இன்னோ ரன்ன சட்ட விரோத நடவடிக்கை காரணமாக மக்களின் அதிருப் தியை அவர் சம்பாதித்துக் கொண் டார். கள்வர்களின் கைகளில் நாட் டின் சாவியை ஒப்படைத்து தனக் காக அவர்களைத் திருடும்படி தூண்டினார். சுமார் இருபது கோடி டாலர் பணத்தை எவ்விதம் சேர்த்துள்ளார் என்ற கேள்விக்கு புதிய அரசாங்கத்தால் நியமிக்கப் பட்டுள்ள ஆணைக்குழுவின் முன் நவாஸ் ஷரீப் பதில் சொல்லியாக வேண்டும். கார்கிலில் முஜாஹி தீன்களை வஞ்சித்ததிலிருந்து, பர்வேஸ் முஷர்ரபை விமானத்தில் வைத்துக் கொலை செய்ய முயற் சித்த குற்றம் வரை அவர் பதில் கூறியாக வேண்டும்.

14ம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்) - சில பதிவுகள்

அஷ்ஷெய்க். ஏ. அப்துல் மலிக் (நளீமி)

## பிறப்பும் வளர்ப்பும்

1906 ம் ஆண்டில் பிறந்த இமாமவர்கள் இஸ்லாமிய பற்றுள்ளவர்களாக வளர்க்கப்பட்டார். அல்குர்ஆனை மனனம் செய்திருந்த இமாமவர்கள், இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் எழுதிய முஅத்தாவை முழுமையாக மனனமிட்டிருந்தார். இமாம் ஹஸன் அல் பன்னாவினது தந்தை ஹதீஸ் துறையில் பெரும் பங்களிப்புச் செய்த இமாம்களில் ஒருவர். இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்களுடைய முஸ்னத் என்ற கிரந்தத்தை "அல்பத்ஹூர் ரப்பானி" என்ற பெயரில் தலைப்பு ரீதியாக அவர் ஒழுங்குபடுத்தியுள்ளார்.

இமாமவர்கள் சிறு பிராயத்தில் ஒரு முறை நைல் நதியில் விழுந்து விட்டார். இன்னுமொரு முறை அவரது வீட்டுக் கூரை நொறுங்கி விழுந்து விட்டது. இன்னுமொரு தடவை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த வேளையில் அன்னாருக்குப் பக்கத்தில் ஒரு பாம்பு நுழைந்து விட்டது. ஆனால் இந்த மூன்று சந்தர்ப்பங்களிலும் எதுவித ஆபத்துக்களுமின்றி இமாமவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். ஒரு மாபெரும் பணிக்காகவே அல்லாஹ் அவரை தயார்படுத்தி வந்திருக்கிறான் என்பதற்கான சான்றாகவே இச்சம்பவங்களை அவரது தந்தையார் குறிப்பிடுகின்றார்.

நல்ல வழிமுறைகளைக் கொண்ட தரீக்காக்களின் ஷெய்க்மார்களிடத்தில் தனது ஈமானிய ஆன்மீகப் பண்புகளை வளர்க்கப் பயிற்சி பெற்ற இமாமவர்கள் சுயநலமிக்க சூபிக்கள் போன்று தனது வழிகாட்டிகள் அமையவில்லை என்றும் எப்பொழுதும், நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கும் உணர்வு கொண்டவர்களாகவே இருந்ததாகவும் குறிப்பிட் டுள்ளார். செயற்கையாக கப்றுகளைத் தயார் செய்து அதனுள் இறங்கி மறுமை வாழ்வு பற்றிய அச்சத்தை உள்ளத்தில் பதிக்க பயிற்சி வழங்கினர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இமாம் ஹஸனுல் பன்னா மற்றைய மனிதர்கள் உறங்கும் வேளையில் தனிமையாக எழுந்து நின்று தொழுபவராக இருந்தார். இமாமவர்கள் தனது காலை மாலை துஆக்கள் மட்டுமன்றி அல்குர் ஆனுடனான உறவையும் ஆழமாகப் பேணி வந்தார்கள். அல்இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் மூன்றாவது தலைவர் உமர் தில்மஸானி அவர்கள் இது பற்றிக் கூறுகையில், "இமாமவர்கள் தனது வேலைகள் அதிகம் என்பதால் ஓதுவதற்கு அன்னாருக்கு நேரம் கிடைப்பதில்லை. அதனால் புகையிரதத்தில் ஏறியதும் எங்களையெல்லாம் விட்டொதுங்கி ஒரு மூலைக்குச் சென்று விடுவார். இரண்டு கண்களையும் மூடிக் கொண்டு மனனமாக ஓதிக் கொண்டிருப்பார்."

## இயக்க ஈடுபாடு, தியாகம்

தனது இருபத்திரண்டாவது வயதில் (1928) அல்இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தை ஆரம்பித்தார்கள். தனது ஒவ்வொரு விடயத்தையும் தஃவாவுடனேயே இமாமவர்கள் இணைத்துப் பார்த்தார்கள். நேர்வழி சென்ற ஆத்மஞானிகளின் ஆத்மீக பயிற்சியுடனும், ஸலபுஸ் ஸாலிஹீன்களின் ஈமானிய கோட்பாட்டுடனும், மத்ஹபுகளின் இமாம்களிடம் பெற்றிருந்த ஆழமான ஷரீஆ பற்றிய அறிவுடனுமே தனது இஸ்லாமிய ஊழியர்களுக்கு இயக்க உத்வேகம் கொடுத்து வளர்த்தார்கள். இமாமவர்களின் தஃவாவின் செல்வாக்கு அதிகரித்தமை அரசுக்கு பெரும் தொந்தரவாக அமைந்தது. ஆரம்பப் பாடசாலை ஒன்றில் ஆசிரியராகக் கடமையாற்றிய இவருக்கா இத்தனை செல்வாக்கு? என ஆச்சரியமடைந்த ஆட்சியாளர்கள் இடமாற்றம் செய்து பார்த்தனர். செல்லுமிடங்களிலெல்லாம் இமாமவர்கள் இஸ்லாத்தின் செய்தியினூடாக மக்களின் உள்ளங்களை கவர்ந்திழுத்தார்.

நேரத்தைப் பயன்படுத்துவதில் மிகத் திறமையுடனும், கவனத்துடனும் அவர்கள் செயல்பட்டார்கள். "நேரம்தான் வாழ்க்கை" என்ற வசனத்தை எப்போதும் தனது அலுவலகத்தில் தொங்க விட்டிருப்பார். தனது தஃவாவை எதிரிகள் முளையிலேயே கிள்ளியெறிய எண்ணியிருந்ததை இமாமவர்கள் நன்கறிந்திருந்தார்கள். ஆனால் இரண்டாம் உலக மகாயுத்தம் முழு உலகத்தின் கவனத்தையும் திருப்பியிருந்த வேளையை பயன்படுத்தி கிராமம் கிராமமாக தஃவாவுடன் ஏறி இறங்கினார். இரவு பகல் பார்க்காது இளைஞர்களையும், மார்க்கப் பற்றுள்ளவர்களையும் சந்தித்து தனது தூதை எத்திவைத்தார். நடுநிசி வேளைகளில் தனது இயக்க சகோதரர்களுடன் வீடு திரும்புவார். வீட்டாருக்கு தொல்லை கொடுக்காது கால்விரல் நுனிகளால் நடந்து சமையலறைக்கு செல்வார். உள்ளதை தனது இயக்க சகோதரர்களுடன் பகிர்ந்து உண்பார்.

இஸ்லாமிய தஃவா கற்றுக் கொடுத்த சிறந்த பாடமே இமாமவர்களின் கடமையுணர்வாகும். வேலைப்பளு எவ்வளவு அதிகமாயிருந்தாலும் உரிய நேரத்துக்கு கடமைக்காக பாடசாலைக்கு சென்று விடுவார். பாடசாலை வேளையில் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தாலும் பாடம் நிறைவுற்ற பின்னரே தொடர்பு கொள்ளச் சொல்வார். தான் வெளிநாடு சென்று கலாநிதி பட்டமேற்படிப்பை மேற்கொள்ள வாய்ப்பிருந்தும் முஸ்லிம் சமூகத்தின் விடிவைத் தீர்மானிக்கவிருக்கும் தஃவா பணிக்காக தன்னை காணிக்கையாக்கினார். "நீங்கள் நூல்களை எழுதுவதில் கவனம் செலுத்தலாமே....." என ஆலோசனை கூறப்பட்டபோது, "நூல்களை ஆக்கும் மனிதர்களை உருவாக்குகிறேன்" என்று பதிலளித்தார்கள்.

## ஊழியர்களைப் பயிற்றுவித்தல்

தனது ஊழியர்களின் எல்லா விவகாரங்களிலும் இமாமவர்கள் கவனம் செலுத்தி வந்தார். இயக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு சகோதரர் தான் தொழிலுக்கு சென்று வரப் பயன்படுத்திய துவிச்சக்கர வண்டியை விற்றுப் பணம் கொடுத்து விட்டு, விடயத்தை இரகசியமாக வைத்துக் கொண்டார். ஒருமுறை ஊழியர் வட்டமொன்றுக்கு தாமதமாக வந்தமைக்கான காரணத்தை இமாமவர்கள் வினவியபோது உண்மையைக் கூறினார். உடனே அங்கிருந்த ஊழியர்கள் அனைவரும் பணம் சேர்த்து அவருக்கு ஒரு துவிச்சக்கர வண்டியை வாங்கிக் கொடுத்தனர்.

தீவிரவாத சிந்தனையுடன் றிப்அத் என்ற சகோதரர் போராட முற்பட்டபோது, "நான் ஒரு கடிதம் தருகிறேன். அதனைக் காட்டி முஜாஹிதுகளுடன் சேர்ந்த கொள்ளுங்கள். இல்லாவிடின் நீங்கள் எகிப்தின் உளவாளிகள் என முஜாஹிதுகள் உங்களைக் கொலை செய்து விடுவார்கள்" என்று கூறினார். ஆனால் அந்தச் சகோதரர் யாரையும் கருத்திற் கொள்ளவில்லை. இமாமவர்கள் எச்சரித்தது நடந்து விட்டது. அந்தச் சகோதரர் அநியாயமாகக் கொல்லப்பட்டார். இஹ்வான்களின் நான்காவது முர்ஷிதாகிய அபூ நஸ்ர் அவர்கள் கூறுகிறார்கள்., "ஆங்கிலேயருடன் போராட வேண்டுமென்ற முடிவுடன் நான் துப்பாக்கியுடன் வெளியேறியபோது, இமாமவர்கள் என்னை அழைத்து மறுகையில் இதனையும் வைத்துக் கொண்டு போராடுங்கள்" என ஓர் அல்குர்ஆன் பிரதியையும் கொடுத்தார்."

இத்துணை பாரிய தியாகமும், ஊழியர்களைப் பயிற்றுவித்தமையுமே அன்னார் எதிர்பார்த்த, கனவு கண்ட, உலகின் பல மாற்றங்களுக்கு பின்னணியாக அமைந்த, நவீன இஸ்லாமிய எழுச்சியிலும் ஒரு பெரும் பங்கு வகிக்கும் **இஸ்லாமிய இயக்கத்தை** கட்டியெழுப்பியது. இன்று உலகின் சிந்தனை ரீதியான எழுச்சிக்கு இமாமவர்களின் பங்களிப்பு மறுக்க முடியாததாகும். இவ்வெழுச்சியின் முன்னோடிகளைச் சார்ந்த முஹம்மத் கஸ்ஸாலி, யூஸுப் அல்கர்ழாவி போன்றோர் இமாமவர்களின் பாசறையில் வளர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## குடும்ப வாழ்வு

அவரது குடும்பம் ஒருபோதும் த.்.வாவுக்கு தடையாக அமையவில்லை; முரண்படவுமில்லை. தனது வருமானத்தில் மூன்றிலொன்றை த.்.வாவுக்கும், மூன்றிலொன்றை குடும்பத்துக்கும், மீதி மூன்றிலொன்றை தனது உறவினர்களுக்கும் எடுத்துக் கொள்வார். தனது குழந்தைகளின் சுகாதார, கல்வி நலன்களில் கவனம் செலுத்திய இமாமவர்கள், அவர்களின் இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்களை கட்டியெழுப்புவதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். அவரது மூத்த மகள் வபா கூறுகிறார், "எனக்கும் எங்களது வீட்டுப் பணிப் பெண்ணுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டு நான் அவளுக்கு ஏசியபோது எங்களது தந்தை எனது காதை இலேசாகத் திருகி அவளுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற ஒழுக்க முறைமையைக் கற்பித்தார்."

எகிப்தின் வழக்கறிஞர்கள் சங்கப் பொதுச் செயலாளராகிய இமாமவர்களின் மகன் சைபுல் இஸ்லாம் கூறுகிறார்: "பாடசாலைப் பருவத்தில் Tarzan திரைப்படம் திரையரங்குகளில் ஓடிக் கொண்டிருந்தது. எனது நண்பர்கள் அதனைப் பார்த்து விட்டு என்னையும் போகும்படி தூண்டினார்கள். ஆனால் எனது தந்தை என்னிடம் மிக மென்மையாகப் பேசி இஸ்லாம் விரும்பாத அந்தக் கேளிக்கையை விட்டும் என்னைத் தடுத்தார். அப்போது தோன்றிய அனைத்துக் கவலைகளும் நீங்கி விடுமளவுக்கு எனது தந்தையின் புத்திமதி அமைந்தது.

## அரசியல் நிலைப்பாடு

இமாமவர்கள், **அரசியல் இஸ்லாத்திற்கு அப்பாற்பட்டது என்ற சிந்தனைக்கு மாற்றமாக இஸ்லாமிய அரசே இஸ்லாமிய சமூகத்தின் எழுச்சிக்கு வழி** என உறுதியாக நம்பினார். விபச்சார விடுதிகள், மதுபானச் சாலைகள், சினிமா தியேட்டர்கள் போன்றவற்றை தடைசெய்யக் கோரி ஆட்சியாளர்களுக்கு கடிதங்களும் வரைந்தார்.

பாராளுமன்றத்துக்கும் இஸ்லாம் சென்றடைய வேண்டுமென்பதற்காக, இஸ்மாயிலிய்யா தொகுதியில் வேட்பாளராக்நின்றார். அவர் வெற்றிபெற்றால் அவரது செல்வாக்கு இன்னும் அதிகரிக்கும் என அஞ்சிய இஸ்லாத்தின் எதிரிகள் அவரை போட்டியிட விடாது தடுத்து விட்டனர்.

இமாமவர்களின் பணி படிப்படியாக வெற்றியடைந்து பல அரபு நாடுகளுக்கும் பரவியபோது எகிப்திய ஆட்சியாளர்களுக்கு மாத்திரமல்லாமல் மேற்குலகிற்கே கொலைநடுக்கம் பிடித்தது. இறுதியில் அரச கூலிகளின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியானார்கள். அரச படைகளின் கடுமையான காவலின் கீழ் அன்னார் அடக்கம் செய்யப்பட்டார்கள். ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு யாரும் வெளியில் வரமுடியாதபடி தடை செய்யப்பட்டது. ஜனாஸாவில் பங்கு கொள்ள மறைவாக வந்தவர்களும் கூட கைது செய்யப்பட்டார்கள் **இமாமவர்களது தந்தையைத் தவிர அடக்கப்பணிகளில் ஈடுபட்ட அனைவரும் பெண்கள் என்பதை உலகம் மறந்து விடவே மாட்டாது.** 45 வயதில் இமாமவர்கள் கொல்லப்பட்டாலும் அன்னாரின் த.்.வாவை யாராலும் பலியிட முடியவில்லை. பெரும் விருட்சகமாக இன்று இமாமவர்களின் இயக்கம் மாறிவிட்டது. இந்திய உபகண்டத்தில் இமாம் அபுல் அ.்.லா மௌதூதி (ரஹ்) அவர்கள் உருவாக்கிய ஜமாஅதே இஸ்லாமி நவீன எழுச்சியில் எவ்வளவு பங்களிப்பினை அளித்ததோ அதேயளவு பங்களிப்பினை அரபு நாடுகளில் ஏற்பட்ட எழுச்சிக்கு இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்) அவர்களது இயக்கம் வழங்கியது.

கலாநிதி யூஸுப் அல்கர்ழாவி அவர்கள் கூறுகிறார்கள்:

> "இரண்டு இமாம்களும் தங்களுடைய வாழ்க்கையில் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டதில்லை. ஆனால் அவர்களது இயக்கப் பாசறையில் உருவாகிய பிள்ளைகள் இன்று நவீன இஸ்லாமிய எழுச்சியை வழிநடாத்திச் செல்கிறார்கள். மேற்குலகில் இஸ்லாமிய த.்.வாவுக்கு கூட்டுப் பங்களிப்பை ஆற்றுகிறார்கள். இருவரதும் கொள்கையும் வழியும் ஒன்றே. அவர்களால் கதைத்துப் பேச முடியவில்லை. அல்லாஹ் அந்தப் பாக்கியத்தை அவர்களது சீடர்களுக்கு வழங்கியுள்ளான்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாம் A/L

அஷ்ஷெய்க் ஏ. சீ. அகார் முஹம்மத்

### அல் முஸாரஆ, விவசாயப் பங்குடமை

ஒரு முஸ்லிம் தனக்குச் சொந்தமான ஒரு பயிர் நிலத்தை பல வகைகளில் பயன்படுத்த முடியும். அவர் விரும்பின்; தானே அதில் பயிர்ச் செய்கை யில் ஈடுபட முடியும் அல்லது அவர் தன்னால் விவசாயம் செய்ய முடியாது எனக் காணும் வேளையில் வேறு ஒருவருக்கு எவ்வித இலாபமும் எதிர்பார்க்காது அந்நிலத்தை இரவலாகக் கொடுத்துதவ முடியும்.

***"உங்களில் ஒருவருக்கு ஒரு நிலம் இருந்தால் அதில் பயிரிடட்டும் அல்லது அதனை தனது சகோதரனுக்கு வழங்கட்டும்"*** என்பது நபி வாக்காகும். (புஹாரி, முஸ்லிம்)

மக்களுக்குக் கொடுத்தார்கள். அதாவது அவர்கள் பயிரிட்டு விளைச்சலின் அரைவாசியை நபி (ஸல்) அவர்களுக்குக் கொடுப்பது என்ற நிபந்தனையின் பேரில் அந்நிலங்கள் கொடுக்கப்பட்டன. (புஹாரி, முஸ்லிம்)

இந்த விவசாய பங்குடமை அமைப்பு நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மாத்திரமன்றி கலீபாக்கள் காலத்திலும், பின்வந்தோர் காலத்திலும் தொடர்ந்து இருந்து வந்ததாக அறிஞர்கள் கூறுவர்.

இஸ்லாம் அனுமதிக்காத விவசாயப் பங்குடமை அமைப்பு ஒன்று இஸ்லாத்திற்கு முன்பும் இன்றும் இருந்து வருகின்றது. நிலத்தில் ஒரு நியாயமான நிலையைக் காண முடியாது. எனவே தான் இவ்வமைப்பு ஷரீஅத்தில் விலக்கப்பட்டுள்ளது.

நாம் கண்ட அனுமதிக்கப்பட்ட பயிர்ச் செய்கையில் ஈடுபடும் போதும் நிலச் சொந்தக் காரரும், விவசாயியும் ஒருவருக்கொருவர் பெருந்தன்மை யுடன் நடந்து கொள்ள வேண்டும். நிலச் சொந்தக்காரரர் விளைச்சலில் மிகக் கூடுதலான பங்கைக் கேட்கக்கூடாது. விவசாயியும் பயிர்ச் செய்கையில் மிகவும் அக்கறையுடன் நடந்து கொள்ள வேண்டும். இரு தரப்பினருக்கும் இடையில் அன்பாதரவும், நல்லுறவும் இருக்க வேண்டுமென நபி மொழிகள் கூறுகின்றன.

ஒருவர் தனது நிலத்தைப் பயன்படுத்துவதற்கு மற்றுமொரு

# இஸ்லாமிய வியாபார அமைப்புகள்

ஒருவர் தனக்கு சொந்தமான நிலத்தைப் பயன்படுத்துவதற்கு மூன்றாவது ஒரு முறையும் உண்டு. தனது நிலத்தை வேறொருவருக்கு விவசாயம் செய்வதற்காகக் கொடுத்து, மொத்த விளைச்சலில் அரைவாசியையோ அல்லது கால்வாசியையோ அல்லது உடன்படிக்கையின்படி குறிக்கப்பட்ட விகிதாசாரத்தை தான் பெறுவதென்ற நிபந்தனையின் பேரில் பெற்றுக் கொள்வதே அம்முறையாகும். நிலச் சொந்தக்காரர் விவசாயிக்கு விதைகள், உபகரணங்கள் போன்ற வற்றைக் கொடுத்து உதவ லாம். இவ்வமைப்பு விவசாயப் பங்குடமை என குறிப்பிடப்படுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் இவ்வமைப்பின் அடிப்படையிலேயே கைபர் பிரதேசத்தில் கைப்பற்றிய நிலங்களை அங்கு வாழ்ந்த பகுதியின் விளைச்சலை நிலச் சொந்தக்காரர் பெறுவதாகவும் மிகுதியுள்ள பகுதியின் விளைச்சலை விவசாயி பெறுவதாகவும் நிபந்தனை யிட்டோ அல்லது விளைச்சலில் குறித்த அளவு தானியத்தை நிலச் சொந்தக் காரர் பெறுவதாக நிபந்தனையிட்டோ நிலத்தை வழங்குவதே அவ்வமைப்பாகும்.

இம்முறை நியாயமற்றதாக இருப்பதனை நீங்களும் ஏற்றுக் கொள்வீர்கள். ஏனெனில் இங்கு விவசரயி பாதிப்படைய இடமுண்டு. விளைச்சல் அதிகமாக இருந்தால் இருவருக்கும் தாராளமாகக் கிடைக்க வேண்டும். குறைவாக இருந்தால் இருவருக்குமே குறைவாகக் கிடைக்க வேண்டும். இதுவே நீதியான பங்கீடாக இருக்க முடியும். ஆனால் இவ்வமைப்பில் வழிமுறையும் காணப்படுகின்றது. ஒரு தொகைப் பணத்திற்கு நிலத்தை ஒரு விவசாயிக்கு வாடகைக்கு விடுவதே அம்முறையாகும். இது ஆகுமானது என்பது பெரும்பாலான இமாம்களின் கருத்தாகும். ஆயினும் பணத்திற்கு நிலத்தை வாடகைக்கு விடுவது கூடாது என்ற கருத்தில் வரும் ஹதீஸ்களை வைத்து இவ்வமைப்பு ஹராமானது என்று கூறும் அறிஞர்களும் உள்ளனர்.

### அல்முழாரபா கூட்டுப் பங்கான்மை

ஒரு சாரார் தேவையான நிதி – மூலதனத்தை வழங்க இன்னுமொரு சாரார் மனித வளத்தை (உழைப்பை) வழங்கி ஒரு குறிப்பிட்ட பொருளாதார முயற்சியில் ஈடுபடுவதே "முழாரபா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வழங்கப்படுகிறது. இவ்வமைப்பை "கிராழ்" என்றும் குறிப்பிடுவர்.

இலாபம் முன் தீர்மானிக்கப்பட்ட பங்கீட்டு ஒழுங்கில் இருசாராருக்கும் இடையில் பகிர்ந்து கொள்ளப்படும். நட்டத்தைப் பொறுத்தவரையில் அது நிதி உரிமையாளரால் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும். தொழிற்றுரை உரிமையாளர் நட்டத்தை ஏற்க வேண்டியிருக்காது. இக்கோட்பாடு மனித வளத்தை மூலதனத்தின் அந்தஸ்தில் வைத்து சமநிலையில் கணிப்பதைக் காண்கின்றோம். இங்கு நிதி மூலதன உரிமையாளர் நட்டத்தை ஏற்க வேண்டி இருப்பது போல தொழிற்றுறை உரிமையாளர் அவரது நேரத்தையும், முயற்சியையும், உழைப்பையும் இழக்கின்றார்.

மனிதர்களின் நலன்கருதியே முழாரபா அமைப்பு அனுமதிக்கப் பட்டுள்ளது. ஏனெனில் சிலரிடம் மூலதனம் இருக்கும். ஆனால் அவர்களிடம் அவற்றை முதலீடு செய்வதற்கான திறன் இருக்காது. வேறு சிலரிடமோ தொழிற்றிறன் இருக்கும். ஆனால் மூலதனம் இருக்காது. இவ்விரு சாராரும் பயனடையும் விதத்திலேயே முழாரபா அமைப்பு காணப்படுகின்றது.

முழாரபா அமைப்பு நிறைவேறுவதற்கு கீழ்வரும் நிபந்தனைகள் அமையப் பெறல் வேண்டும்.

1) மூலதனத்தின் தொகை குறிப்பாக அறியப் பெற்றிருத்தல் வேண்டும்.

2) மூலதனம் கையிருப்பில் உள்ள பணமாக இருத்தல் வேண்டும். உதாரணமாக நகைகளாகவோ, வியாபாரப் பண்டங்களாகவோ இருத்தல் கூடாது

3) மூலதன உரிமையாளருக்கும், முயற்சியாளருக்கும் உரிய இலாப விகிதாசாரம் தீர்மானிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

4) உடன்படிக்கை வரையறுக்கப்பட்டதாய் அமைதல் கூடாது.

உதாரணமாக ஒரு குறிப்பிட்ட ஊரில் தொழில் முயற்சி அமைய வேண்டும் என்றோ அல்லது ஒரு குறிப்பிட்ட ஒரு பொருளாக இருக்க வேண்டுமென்றோ நிதி உரிமையாளர் முயற்சியாளரை நிர்ப்பந்தித்து நிபந்தனையிட முடியாது.

கீழ்வரும் நிலைகளில் முழாரபா உடன்படிக்கை முறிந்து விடும்.

1) மேலே கண்ட நிபந்தனைகளில் ஒன்றை இழத்தல்

2) முயற்சியாளர் பொருட்களைப் பாதுகாப்பதில் கவனக் குறைவாய் இருத்தல் அல்லது உடன்படிக்கையின் நோக்கத்திற்கு முரணாக ஒன்றைச் செய்தல்

3) முயற்சியாளரோ அல்லது நிதி உரிமையாளரோ மரணித்தல்.

மேலும் முயற்சியாளர் முழாரபா மூலம் பெற்றுக் கொண்ட நிதியைக் கொண்ட மற்றொரு முழாரபா உடன்படிக்கை செய்து கொள்ள முடியாது. அவ்வாறு நடந்து கொள்வது அத்துமீறலாகக் கொள்ளப்படும்.

## அல்முஷாரக்கா: கூட்டுப் பங்குடமை

பல பங்குதாரர்கள் தத்தமது மூலதனத்தை ஒன்று சேர்த்து ஓர் உற்பத்தி முயற்சியில் ஈடுபடும் அமைப்பே "முஷாரக்கா" எனப்படுகின்றது. இங்கு ஒவ்வொரு பங்குதாரரும் அவரது பங்குக்கு ஏற்ற இலாபத்தைப் பெறுவார்.

முழாரபா குறுங்கால பொருளியல் நடவடிக்கைகளுக்கே மிகவும் பொருந்தும். ஆனால் முஷாரக்காவோ நீண்டகால உற்பத்தி முயற்சிகளுக்கே பொருத்தமானதாகக் கணப்படுகிறது. ■

***பாகிஸ்தான்...........***

***10 ம் பக்கத் தொடர்***

முழு நாடகத்திலும் பாகிஸ்தான் ஜமாஅதே இஸ்லாமிய பங்கேற்ற பாத்திரம் பிரத்தியேகமாக நோக்கப்பட வேண்டும். ஜமாஅத் இட்ட திட்டத்தின் ஒரு அங்கமாகவே இப்புரட்சி உருவானது என பலர் கருதினர். உண்மை அதுவாக இல்லாவிட்டாலும் மக்களை நவாஸ் ஷரீபுக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்வதில் ஜமாஅத்தின் பங்கு அளப்பரியது. முஸ்லிம் லீக் மற்றும் வஞ்சக தந்திரமுடைய அரசியல் வாதியான பெனாஸிர் பூட்டோவின் பாக். மக்கள் கட்சி ஆகியவற்றில் விரக்தியடைந்துள்ள மக்கள் ஜமாஅத்தை ஒரு திருப்பு முனை அரசியலை வழங்கக் கூடிய மூன்றாவது சக்தியாகக் கண்டுள்ளனர்; நேர்மையான நடத்தைகளைக் கொண்ட அதன் தலைவர்களின் செயற்பாடுகளாலும் ஜமாஅத்தின் தீவிர வாசறபடிப் பிரச் சாரத்தாலும் மக்கள் கவர்ந்திழுக்கப் பட்டுள்ளனர். அண்மைக் காலமாக ஜமாஅத்தின் வளர்ச்சி வேகம் நவாஸ் ஷரீபுக்கு மாத்திரமல்ல, பாகிஸ்தானின் ஏனைய கட்சிகளுக்கும் ஒரு பெரும் சவாலாகவே தென்பட்டது. இதனை அவதானித்த சுமார் 15 கட்சிகள் (சிறிய பெரிய கட்சிகள்) ஒன்றிணைந்து ஒரு ஒன்றியத்தை அண்மையில் ஸ்தாபித்துக் கொண்டனர். இவ்வொன்றியத்தின் நடவடிக்கைகளுக்கு தொடர்பூடகங்கள் வழங்கிய பிரச்சாரத்தின் அளவு அவை ஜமாஅத்தின் நடவடிக்கைகளுக்கு வழங்கத் தவறி விட்டன.

ஜமாஅத்தைப் பொறுத்த மட்டில் அது ஜெனரல் பர்வேஸின் வாக்குறுதிகளை வரவேற்றுள்ளதோடு, அவற்றை நடைமுறையில் கொண்டு வந்தால்தான் நம்புவ

*39ம் பக்கம் பார்க்க*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப உறவில் அனுமதிக்கப்பட்ட பொய்

**கேள்வி:**

நான் திருமணம் செய்து கொண்ட மனிதர் நல்லவராயினும் அதிகம் சந்தேகப் போக்குடையவர். அவர் என்னிடத்தில் பல கேள்வி களைக் கேட்பார். அடிக்கடி வரும் வினா, நான் அவரல்லாத வேறு யாரை யாவது விரும்புகிறேனா? என்பதாகும். அதற்கு கணவரல்லாத வேறு யாரையும் நான் நேசிப்பதில்லை யென்றும், அவரில் தூய அன்பு செலுத்துவதாகவும் கூறுவேன். சத்தியம் செய்யுமாறு கூறுவார். திருப்தியோடு அதைச் செய்வேன்.

என்றாலும் அவர் இந்த வினா வோடு நிறுத்திக் கொள்வதில்லை. திருமணத்துக்கு முன் யாரையாவது நேசித்தேனா? எனக் கேட்பார். அப்படி எதுவும் இல்லை எனக் கூறிய போது சத்தியம் செய்யச் சொல்ல அவ்வாறு செய்வேன்.

எனது தூய அன்பையும், அவர் மீதான அக்கறையையும், சீரிய குடும்ப உறவில் நான் செலுத்தும் கவனத் தையும் தெளிவாக வெளிப்படுத்திய பின்னரும் இத்தகைய கேள்விகள் தேவையில்லை என அவரிடம் கூறி னாலும் அவர் சத்தியம் செய்யுமாறே அடிக்கடி வேண்டிக் கொண்டி ருக்கிறார்.

இவ்விடத்தில் நான் மறைக் காமல் ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். திருமணத்துக்கு முன்னர் தூரத்து உறவினனான ஒரு இளைஞன் மீது எனது உள்ளம் நாட்டம் கொண்டிருந்தது. என்றாலும் திருமணத்தில் இணைவதற்கு இறை நாட்டம் துணை நிற்கவில்லை. பல வருடங்களுக்கு முன்னதான இந்நினைவுகள் திருமணத்தோடு மறந்து போய் விட்டன. இப்போது எனக்குள்ள பிரச்சினை, கணவன் கேட்பது போல சத்தியம் செய்து கொடுத்து என்னைத் தேற்றிக் கொள்வதா? அவ்வாறு செய்வதால்

**தமிழில்: A.A. கியாஸ் முஹம்மத் (நளீமி)**

பொய்ச் சத்தியம் என்ற பாவத்திலும் இறை கோபத்திலும் விழுந்து விடுவேனா? அல்லது அதனைத் தவிர்ந்து கொள்வதன் மூலம் குடும்ப வாழ்க்கையைக் குலைக்கக் காரண மாகும் சந்தேகத்திலிருந்து தப்பிக் கொள்வதா? என்பதாகும்.

**யூஸுப் அல்கர்ளாவி**



**பதில்:**

தனிப்பட்ட குடும்ப, சமூக மட்டத் தில் பொய் ஏற்படுத்தும் தீங்குகள் காரணமாக அது அடிப்படையில் தடுக் கப்பட்ட ஒன்றாகும். எனினும் இந்த அடிப்படையிலிருந்து பிரத்தியேகமான காரணங்களையும் வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளையும் முன்னிட்டு விலகிச் செயல்பட இஸ்லாம் அனுமதிக் கின்றது. இந்நிலையை உம்மு குல்தூம் வாயிலாக இமாம் முஸ்லிம் அவர்கள் பதிவு செய்யும் நபிவாக்கு விளக்கு கின்றது. ***"மூன்று விடயங்களில் அன்றி பொய் சொல்வதற்கு நபி (ஸல்) அவர்கள் சலுகையளித்ததை நான் கேட்ட தில்லை. அவையாவன, மக்களிடையே சமாதானம் செய்யும் வேளை, யுத்த சந்தர்ப்பத்தில், கணவன் மனைவிக் கிடையிலான உறவாடலில்."***

இது இஸ்லாமிய ஷரீஆவின் நடைமுறைச் சாத்தியத் தன்மையை யும், அதன் ஆழ்ந்த நுட்பத்தையும் காட்டுகிறது. ஏனெனில் சமாதானத் துக்காக முனையும் ஒருவர் இரு தரப்பு எதிரிகளிடமிருந்தும் தாம் கேட்ப வற்றையெல்லாம் அடுத்த தரப்புக்கு நகர்த்துவதன் மூலம் எரியும் நெருப்பை இன்னும் மூட்டி விட முயல்வதானது அறிவுக்கு ஏற்புடையதன்று. மாறாக அவர் சூழ்நிலைகளை ஓரளவு மிதமான நிலைக்குக் கொண்டு வர வேண்டும். இதற்காக வார்த்தைகளில் சில கூட் டல் குறைப்புகளைச் செய்தல் எதிர் தரப்பின் இழிந்துரைகளை மறுத்தல் போன்றவற்றைக் கையாள்வதும் சரியே.

அவ்வாறே உண்மை என்ற பெயரில் எதிரிகளுக்குத் தேவையான தகவல்களையும், அல்லது படை மற்றும் நாட்டு ரகசியங்களையும், தன் தரப்புப் பலவீனங்களையும் வெளிப்படுத் துவதும் அறிவுடமையாகாது. மாறாக இவையனைத்தையும் மறைப்பதே கடமையாகும். காரணம் "யுத்தம் என்பது ஏமாற்றுதலாகும்."

ஒரு மனைவியும் உண்மையு ரைக்கும் தோரணையில் காலங் கடந்து விட்ட உள உணர்வுகளை வெளிப்படுத்தி தன் மணவாழ்வைப் பாழ்படுத்திக் கொள்வது ஏற்புடைய தன்று. இதனால்தான் குடும்ப உறவைப் பாதுகாக்கும் வகையில் பொய்யிலிருந்து சில விதிவிலக்கு களை இந்நபி மொழி தந்திருப்பதானது ஆழ்ந்த மதி நுட்பத்தைக் காட்டுகிறது.

மேற்குறிப்பிட்ட விதத்தில் மனைவியிடம் சத்தியம் செய்யுமாறு கோருவது தவறாகும். இந்தத் தவறை இரண்டு வகையில் இனங்காணலாம்.

**முதலாவது:**

கணவன் தனக்குத் தொடர் பில்லாத கடந்த காலங்களைப் பற்றி ஆராய்கிறான். இவற்றைக் கிளறுவ தால் அவனுக்கு எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. காரணம் பெரும்பாலும் யுவதிகள் (அவ்வாறே இளைஞர்களும் கூட) தமக்கு நெருக்க மான மற்றும் அயல் வீட்டு இளைஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களிடத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்து அவனைத் தமது கற்பனை வீரனாகக் காண்கின்றனர். பின்னர் அவனோ அல்லது அவளோ ஒருவரை விட்டும் மற்றொருவர் தூரமாகின்றனர். குறிப்பாக இது திருமணங்களின் போது இடம்பெறுகின்றது. காலங் கடந்து விட்ட இவ்வுணர்வுகளுக்கு உயிர் கொடுப்பது ஏற்புடையதன்று. தன் மனைவி தன்னோடு தூய்மையாக நடந்து கொள்வதும், தன் கடமைகளை நிறைவேற்றுவதும், தன் வீட்டைப் பராமரிப்பதும், தனது எந்தப் பணியிலும் குறை செய்யாமலிருப்பதுமே கணவனுக்குப் போதுமானதாகும்.

**இரண்டாவது:**

சத்தியமானது தம்பதிகளுக்கிடையிலான உறவில் எந்தக் கூட்டுதலையும் குறைத்தலையும் ஏற்படுத்தப் போவதில்லை. காரணம், குறிப்பிட்ட பெண் இறைவனையும் கேள்வி கணக்கினையும் அஞ்சுகின்ற மார்க்கப்பற்றுள்ளவளாக இல்லாவிட்டால் மிகவும் பாரிய சத்தியங்களைக் கூட பொய்யாகச் செய்வதற்குத் தயங்க மாட்டாள். மறுபுறத்தில் இறைவனையும் கேள்விகளையும் பயப்படும் மார்க்கப்பற்றுடையவளாக இருப்பின் அவளுடைய மார்க்கமும் இறையச்சமுமே அவள் குறித்து திருப்தியடையவும் அவளது நம்பிக்கை தூய்மை என்பவற்றை உறுதிப்படுத்தவும் கணவனுக்குப் போதுமானதாகும்.

இவ்விடத்தில் அச்சத்துக்குரிய விடயம் தன் மனைவியைப் பொய்ச் சத்தியத்துக்கு கணவன் நிர்ப்பந்திக்கின்ற வேளை அதன் பாவம் அவனையே சாருகின்றது. நான் இங்கு வலியுறுத்திக் கூற விரும்புவது கேள்வியில் குறிப்பிடப்பட்டது போல் கணவனின் நிர்ப்பந்தத்தால் மனைவி பொய்ச் சத்தியம் செய்வது அவள் மீது குற்றமாகாது என்பதாகும். காரணம் இங்கு அவள் உண்மை பேசுவதால் தன் குடும்ப வாழ்வை பாழ்படுத்த வேண்டியேற்படும். அது அல்லாஹ் வெறுத்த, இஸ்லாம் எதிர்க்கின்ற விடயமாகும். இவ்விடத்தில் செய்யப்படும் சத்தியம் நிர்ப்பந்த வகையிலமைந்ததாகும்.

கணவன் மனைவியிடத்தில் "நீ என்னை விரும்புகிறாயா? இல்லையா?" எனக் கேட்டு அதற்காகச் சத்தியம் செய்யக் கோருவது, இவ்வகையானதே. இத்தகைய ஆண்களை சத்தியத்தைத் தவிர வேறு எதுவும் திருப்திப்படுத்துவதில்லை. அது பொய்ச்சத்தியமாக அமைந்தாலும் சரியே. வேறு வழியில்லாத கட்டத்தில் மனைவி சத்தியம் செய்து அல்லாஹ்விடத்தில் மன்னிப்பும் கோரட்டும். நிச்சயமாக அவன் மன்னிக்கக் கூடியவனும் அருளாளனுமாவான்.

உமர் (ரழி) அவர்கள் காலத்தில் இடம்பெற்ற சம்பவமும் இவ்விடத்தில் நோக்கத்தக்கதாகும். இப்னு அபீ உத்ரா அத்து அலி (ரழி) எனும் நபித்தோழர் தான் மணமுடிக்கும் பெண்களை தலாக் சொல்லிப் பிரிந்து விடும் இயல்புள்ளவராக இருந்தார். இதனால் மக்களிடத்தில் அவர் விரும்பாத பல கதைகள் உலவ ஆரம்பித்தன. இது குறித்து அவர் அறிந்த போது இக்கருத்தினை மாற்ற முயல்கிறார். இதற்காக அப்துல்லாஹ் இப்னுல் அர்கம் (ரழி) அவர்களை தனது வீட்டுக்கு அழைத்து வந்து தனக்கும் மனைவிக்குமிடையிலான உரையாடலை செவிமடுக்கச் செய்கிறார். அவர் மனைவியிடத்தில், "அல்லாஹ்வின் பெயர் கூறி கேட்கிறேன் நீ என்னை வெறுக்கிறாயா?" மனைவி: "என்னிடம் கேட்காதீர்," அவர், மீண்டும் "அல்லாஹ்வுக்காக கேட்கிறேன்" எனக் கூற, மனைவி 'ஆம்' எனப் பதிலளித்தார். இது முடிய இவ்வுரையாடலைச் செவியுற்ற இப்னுல் அர்கமையும் அழைத்துக் கொண்டு உமர் (ரழி) அவர்களிடம் வந்து கூறுகிறார், "நான் பெண்களை தலாக் செய்து அநியாயம் இழைப்பதாக என்னைப் பற்றி கதைத்துக் கொள்கிறீர்கள். இப்போது இப்னுல் அர்கம் சொல்வதைக் கேளுங்கள்" என வேண்டி நின்றார். இப்னுல் அர்கமும் நடந்தவற்றை விவரித்தார். தொடர்ந்து உமர் (ரழி) அவர்கள் சம்பந்தப்பட்ட பெண்ணை அழைத்து கணவனை வெறுப்பதாக அவள் கூறியது பற்றி விசாரித்த போது, அப்பெண் தன் கணவர் அல்லாஹ்வின் பெயரைச் சொல்லிக் கேட்ட போது தன்னால் எப்படிப் பொய் சொல்ல முடியும் என உமர் (ரழி) அவர்களிடம் வினவினார். அதற்கவர், "ஆம் இவ்விடயத்தில் ஒரு பெண் பொய்யுரைக்கலாம். ஒருத்தி தன் கணவனை விரும்பாத போதும் அது குறித்து அவரிடத்தில் எதுவும் கூறக் கூடாது. காரணம் அன்பினால் பிணைந்த குடும்பங்கள் மிகக் குறைவு. இஸ்லாம் மற்றும் குல அந்தஸ்த்துகள் அடிப்படையிலேயே மனிதர்கள் வாழ்ந்து வருகின்றனர்" எனக் கலீபா விளக்கினார்கள்.

இந்நிகழ்வு உமரிய சாணக்கியங்களில் ஒன்று, அவர் நாட்டின் தலைவராக மட்டுமன்றி ஓர் அறிஞராக; பயிற்றுவிப்பாளராக; (முரப்பி) பகீஹாக; முப்தியாக இருந்திருக்கிறார்.

அவர், கணவன் மனைவியோடும், மனைவி கணவனோடும் நடந்து கொள்ளும் ஒழுங்கு குறித்து வந்த நபி மொழியை நடைமுறைப்படுத்துகிறார். இல்லறத்தைப் பாதுகாப்பதற்காக மனைவியுரைக்கும் பொய்யை அவர் தடுக்கவில்லை. அத்தோடு குடும்ப உறவின் தத்துவத்தை இவ்வாறு விளக்கினார். "அன்பினால் பிணைந்த குடும்பங்கள் மிகவும் குறைவு, இஸ்லாம் மற்றும் குடும்ப அந்தஸ்தின் அடிப்படையிலேயே மனிதர்கள் வாழ்ந்து வருகின்றனர்."

ஒவ்வொரு கணவனும் மனைவியும் பரஸ்பர அன்பிலும் பாசத்திலும் லைலா-கைஸ் ஆக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவ்வாறிருப்பின் கைஸ் லைலாவைப் போன்று திருமணமின்றியே வாழ்க்கையைக் கழிப்பார்கள். கணவன் மனைவியர் மார்க்கப் பண்பாடுகளின் அடியாக அல்லது உமர் (ரழி) கூறியது போல மார்க்கம் குல அந்தஸ்துகளின் அடியாக நல்ல முறையில் வாழ்வை அமைத்துக் கொள்வது போதுமானதாகும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்களின் பிரச்சினைகள்

டாக்டர்
எம்.சரஸ்வதி, D.H.M.S.

பொதுவாக பெண்களுக்கு வரக்கூடிய நோய்களில் மிகவும் தொல்லை தரக்கூடியது மாதவிடாய் கோளாறுகளே. இதற்கு ஹோமியோபதி வைத்திய முறையில் சிகிச்சை அளிக்கப்படுவதே பலருக்கு தெரியவில்லை. ஆதலால் மாதவிடாய் கோளாறுகள் என்ன என்பதையும், அதை ஹோமியோபதி வைத்திய முறையில் எவ்வாறு குணப்படுத்தலாம் என்பதையும் பார்ப்போம்.

சாதாரணமாக காணப்படும் மாதவிடாய் கோளாறுகளை ஆறு பெரும் பிரிவின் கீழ் கொண்டு வரலாம்.

- மாதவிடாய் வராமல் இருப்பது (Amenorrhoea)
- மிகுந்த வலியுடன் கூடிய உதிரப்போக்கு (Dysmenorrhoea).
- அதிகமான உதிரப்போக்கு (Menorrhagia) ஆனால் மாதவிலக்கு நாட்களில் மாற்றம் இருப்பதில்லை.
- அதிகமான உதிரப்போக்கு (Metrorrhagia) ஆனால் மாதத்தில் இரண்டு மூன்று முறை கூட மாதவிலக்கு ஏற்படுதல்.
- வெள்ளைபடுதல்.
- அடி இறங்குதல் (Prolapse)

## மாதவிலக்கு வராமல் இருத்தல்:

மாதவிலக்கு, பெண் கருத்தரித்திருக்கும் காலங்களில் வருவதில்லை. மேலும் பருவம் அடைந்த பெண்களில் சிலருக்கு முதல் மாதவிலக்கிற்கு பிறகு இரண்டாவது மாதவிலக்கு 3 மாதங்களோ அல்லது ஆறு மாதங்களோ கழித்து வருகின்றன. குழந்தைகளுக்கு பால் கொடுக்கும் காலங்களில் சில பெண்களுக்கு மாதவிலக்கு வருவதில்லை. ஆதலால் மேற்கூறிய காரணங்களுக்கு கவலைப்பட வேண்டாம். ஒரு சில பெண்களுக்கு 40 வயதிற்கு மேல் மாதவிலக்கு சரிவரவில்லை எனில் அதை (Menopause) மாதவிடாய் நின்று விடும் நிலை வரப்போகிறது என்று எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால் மேற்கூறிய காரணங்கள் இல்லாமல் மாதவிலக்கு வராமல் இருந்தால் அதற்கு காரணங்கள்:

- கருப்பையில் கட்டி இருத்தல் (Ovarian cyst)
- கர்ப்பப்பையில் கட்டி இருத்தல் (Uterine Fibroid)
- தைராய்டு (Thyroid) சுரப்பியின் சீர்கேடு
- Fallopian Tube - ல் அடைப்பு.

இவற்றை ஹோமியோபதி மருத்துவத்தில் அறுவை சிகிச்சை இன்றி நிரந்தரமாக எந்தவித பக்க விளைவுகளோ, தகாத விளைவுகளோ இன்றி குணப்படுத்தலாம். Homoeopathy மருத்துவத்தில் குறிகளை (Symptoms) வைத்தே குணப்படுத்தி விடலாம்.

அதாவது ஒரு பெண்ணின் மனநிலை (Mental Symptoms), மாதவிலக்கு வராததால் உடல் அளவில் (Physical) ஏற்படும் வேறுபாடுகள், இவை அனைத்தையும் மனதில் கொண்டு (Totality of symptoms) Constitutional Remedy இவற்றின் அடிப்படையில் மருந்து கொடுத்து குணப்படுத்துகிறோம். ஆதலால் ஒருத்தருக்கு கொடுத்த மருந்தையே அடுத்தவருக்கு கொடுக்க இயலாது.

## வலியுடன் உதிரப்போக்கு

அதிக வலியுடன் கூடிய உதிரப்போக்கினால் நிறைய பள்ளிச் செல்லும் பெண்கள் கூட அவதிப் படுகின்றனர். அதிகமான வயிற்று வலி, தலைவலி, வாந்தி இவற்றால் பள்ளிக்கு செல்வது கூட தடைபடுகிறது. இதை ஹோமியோபதி மருத்துவத்தில் Belladonna, Vib. opulus, Cimcifuga, Ammon-Carb, Colocynth, Sepia, Lachesis போன்ற மருந்துகளைக் கொண்டு நிரந்தரமாக குணப் படுத்தலாம்.

“ஹோமியோபதியில் குணப் படுத்தலாம். ஆனால் உடனடியாக, விரைவில் குணப்படுத்த முடியுமா?” என்று மக்கள் ஐயப்படுகின்றனர். இது மிகவும் தவறான கருத்து. ஒரு பெண் பரீட்சைக்கு செல்லும் போது மாதவிலக்கு வந்து விட்டதால் தன்னால் பரீட்சையே எழுத முடியாமல் போய் விடுமோ என்று மிகவும் பயந்து கொண்டு என்னிடம் வந்தார். ஒவ்வொரு முறையும் மாதவிலக்கு வரும்போது அவர் பள்ளி செல்வது இல்லை. ஆதலால் இம்முறை பரீட்சையே எழுத முடியாமல் போய் விடுமோ என்று எண்ணினார். ஆனால் அவர் ஹோமியோபதி மருந்தினால் அரை மணிக்குள் வலி நீங்கி மிக மகிழ்ச்சியுடன் சென்றார். இவருக்கு Bell என்ற மருந்து கொடுத்தவுடன் வலி குறைந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேலும் அதிக வலியுடன் கூடிய உதிரப்போக்கு கல்யாணம் ஆன வுடன் சரியாகி விடும் என்பது பொதுவான பேச்சு. ஆனால் பலருக்கு கல்யாணம் ஆகி குழந்தை பிறந்த பிறகு கூட மாத விலக்கு நாட்களில் அவதிப் படுவது தொடர்கிறது. ஆதலால் பல பெண்கள் கவலைக்குள்ளாகின் றனர். எதற்கு ஒவ்வொரு மாதமும் வேதனை; நமக்கு தான் இரண்டு குழந்தைகள் இருக்கிறார்களே; மாதம், மாதம் அவதிப்படுவதை விட அறுவைச் சிகிச்சை செய்து கர்ப் பப்பையையே எடுத்து விடலாமே என்று அதனால் ஏற்படக் கூடிய பின் விளைவுகளைப் பற்றி தெரியாமல் நினைக்கின்றனர். இந் நிலையில் என்னிடம் வந்த பெண்கள் தற்போது மாதவிலக்கு காலங்களில் வலி இல்லாமல் நிம்மதிக் காற்றைச் சுவாசிக்கின்றனர். ஆம். இதை ஹோமியோபதியில் செய்ய முடியும். பலர் நலம் பெற்றுள்ளனர். இந்த மாதிரி அதிக வலியுடன் கூடிய உதி ரப்போக்கிற்கு, Bell, Vib-opulus, Cimcifuga, Colocynth போன்ற மருந் துகள் மிகவும் பயனளிக்கின்றன.

## அதிகமான உதிரப்போக்கு

சிலருக்கு ஒரு மாதத்தில் இரண்டு, மூன்று முறைகூட மாத விலக்கு தொடர்ந்து நிற்காமல் போய்க்கொண்டே இருக்கும். இவற் றை அலட்சியம் செய்தால் இரத்த சோகையும், கான்ஸர் வருவதற்கு வாய்ப்பும் ஏற்படுகிறது. இதற்கு கருப்பை (ovaries) கட்டியோ, கர்ப் பப்பை (Uterus)கட்டியோ காரணமாக இருக்கலாம். எது காரணம் என்று அறிந்து அறுவை சிகிச்சையின்றி கருப்பை (ovaries) கட்டியையும், கர்ப்பப்பை (Uterus) கட்டியையும் நிரந்தரமாகக் குணப்படுத்தலாம்.

பெண் வயது 40. இவரது வலது பக்க கருப்பையில் (ovaries) 21/17mm அளவிலான கட்டி இருந்தது. அவ ருக்கு scan பண்ணி பார்த்ததில் இது தெரிய வந்தது. ஆபரேஷன் செய்து அகற்ற வேண்டும் என்று கூறியதால் அவர் ஹோமியோபதி சிகிச்சைக்கு 9.3.97 அன்று சிகிச்சைக்காக வந்தார். அவருக்கு சிகிச்சை அளிக் கப்பட்டது. ஐந்து மாதம் கழித்து Scan பண்ணி பார்த்ததில் அவருடைய வலது பக்கம் கருப்பையில் இருந்த கட்டி முற்றிலுமாக கரைக்கப்பட்டி ருந்தது. இவருக்கு Aconite என்ற மருந்து கொடுத்து கட்டி கரைக்கப்பட்டது.

அதேபோல் மற்றொரு கல் யாணமாகாத பெண் வயது 19. அவரது வலதுபக்க கருப்பையில் (ova-ries 30/33mm அளவிலான கட்டி இருந் தது. கல்யாணம் ஆகாத பெண் என்ப தால் அறுவை சிகிச்சை செய்து கட்டியை அகற்றுவது சுலபம் அல்ல. இந்த நிலையில் அவர் 3.1.97 அன்று சிகிச்சைக்காக வந்தார். சிகிச்சைக்கு பிறகு அதாவது 4 மாதம் கழித்து 1.5.97 அன்று Scan செய்து பார்த்ததில் அவரது கருப்பையில் இருந்த கட்டி முழுவதுமாக கரைக்கப்பட்டிருந்தது. இவருக்குCalc. Carb என்ற மருந்தும், Calc. flour என்ற மருந் தும் கொடுத்து கட்டி கரைக்கப் பட்டது.

## வெள்ளைபடுதல்:

வெள்ளைபடுதல் மாதவிலக்கு வருவதற்கு 4 நாட்கள் முன்பு பட் டாலோ அல்லது மாதவிலக்கு வந்து 12 நாளிலிருந்து 14 நாள் வரை பட் டாலோ அதை சாதாரணம் (Normal) என்று கூறுகிறோம். இப்படி இல்லாமல் தினமும் வெள்ளைபட்டு கொண்டு இருந்தாலோ அல்லது கலர்மாறி மஞ்சள் நிறமாகவோ, பச்சை நிறமாகவோ, அல்லது இரத்தம் கலந்து வெள்ளை பட்டாலோ, துர்நாற்றம் அடித்தாலோ, அரிப்பு தன்மை உடையதாக இருந் தாலோ, அதை நாம் அலட்சியம் செய்யலாகாது. அரிப்பு தன்மையுடன் இருப்பதற்கு Tricomonas Vaginalis, Tricomonas Moniliasis போன்ற நுண்ணுயிர்களே காரணம். வெள் ளைபடுதல் அலட்சியம் செய்ய லாகாது. தொடர்ந்து வெள்ளை பட்டுக் கொண்டே இருந்தால் கர்ப்பப்பையின் வாய்ப்பகுதியில் புண் ஏற்பட்டு அதை குணப்படுத்தாமல் இருந்தால் நாளடைவில் கான்ஸர் வர வழி வகுக்கிறது. வெள்ளை படுதலுக்கு Kreosolt, Calc.Ova tosta, Calcphos, Sepia, Helonias, Hydrastis போன்ற மருந்துகளைக் கொடுத்து குணப்படுத்தலாம்.

## அடி இறங்குதல்:

அதிகமான பிள்ளைப்பேறு, அதிக எடையுடன் கூடிய குழந்தை, அடிக்கடி கருச்சிதைவு செய்வது, குழந்தை பிறந்த பிறகு மிக விரைவில் அதிகமான வேலை செய்தல், பளுவான பொருட்களைத் தூக்குதல் ஆகியவற்றால் கர்ப்பப்பை கீழே இறங்கி விடுகிறது.

குழந்தை பிறந்தவுடன் கர்ப்பப்பை சுருங்க நாட்கள் ஆகும். அதனால்தான் இரண்டு மாதகால ஓய்வாவது எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் ஓய்வெடுக்காமல் கனமான, கடினமான வேலைகள் செய்வதால் காப்பப்பை பலவீனமாகி இறங்குவதற்கு வழி ஏற்படுகிறது. கர்ப்பப்பை இறங்கி இருந்தாலும் அதை அறுவை சிகிச்சையின்றி ஹோமியோபதி மருந்துகளான Bell, Lil - Tig, Sepia, Lachesis, Sabena, Nat.Mur போன்ற மருந்துகளைக் கொடுத்து குணப்படுத்துகிறோம்.

மேலும் விவரமறிய:
டாக்டர் M. சரஸ்வதி,
ராஜம் ஹோமியோ க்ளினிக்,
பிளாட் எண் 268
11 வது தெரு
கொரட்டூர்,
சென்னை – 600 080
போன்: 655878

நன்றி: பேமிலி ஹெல்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு மங்கையின் வாழ்வில் திருப்பம் ஏற்படுத்திய அல்குர்ஆன் வகுப்பு!

ஐக்கிய அறபு இராச்சியத்தில் வாழும் நான் அங்குள்ள பாடசாலையில் படிக்கும் ஓர் உயர் வகுப்பு மாணவி. இந்நாட்டைப் பற்றிய நல்லபிப்பிராயம், கண்ணியம் என்னிடம் எப்போதும் உண்டு. ஏனெனில் இங்குதான் அல்லாஹ் எனக்கு நேர்வழியைக் காட்டினான்.

இங்கு நான் வந்த நாள் முதல் கண்ணியத்திற்கும், மரியாதைக்கு முரிய எனது ஆசானாகிய தொலைக் காட்சியுடன் ஒட்டி உறவாடியிருந்தேன். ஒரு வினாடி கூட அவரை விட்டு நான் பிரிந்திருக்க மாட்டேன். ஒளிபரப்பப்படும் தொலைக் காட்சித் தொடர்கள், சிறுவர் நிகழ்ச்சிகள், இசைக்கச்சேரி, நடனம், போன்ற இன்னோரன்ன நிகழ்ச்சிகளை பார்க்காமல் நான் விட்டதே இல்லை. ஆனால் கலாச்சார, மார்க்க நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டாலோ அவசரமாக அதை நிறுத்தி விடுவேன். அப்போது என் அன்புச் சகோதரி "ஏன் இவ்வாறு நடந்து கொள்கின்றாய்?" என்று என்னிடம் கேட்பாள். "செய்ய வேண்டிய பாடசாலைப் பயிற்சிகளும், வீட்டு வேலைகளும் அதிகமாக இருக்கின்றது. அதனால் தான்" என்பேன். "இவைகளையெல்லாம் இப்போதுதான் சிந்தித்தியாக்கும். சற்று முன்னர் பாட்டுக்கள், நடனம், கீழ்த்தரமான இன்னும் பல நிகழ்ச்சிகளை பார்த்துக் கொண்டிருந்தாயே! அப்போது எங்கிருந்தாய்? ஏன் இந்த சிந்தனை முன்னரே உனக்கு வரவில்லை?" சகோதரியின் இக்கேள்விக்கு மௌனத்தைத் தவிர என்னிடம் பதில் ஏதுமில்லை.

எனது சகோதரியோ எனக்கு நேர்மாற்றமானவள். எனது தாய் அவளுக்கு தொழுகையைக் கற்றுக் கொடுத்த நாள் முதல் காரணமின்றி அதை அவள் விட்டதே இல்லை. நானோ தொழுகையைப் பேணித் தொழுவதில்லை. எனது சகோதரி முடிந்தளவு தொலைக்காட்சி பார்ப்பதை விட்டும் ஒதுங்கியிருந்தாள். நல்லது செய்யத் தூண்டும் சாலிஹான தோழிகளுடன் தனது சகவாசத்தை வைத்துக் கொண்டாள். இறை சிந்தனையை எப்போதும் எனக்கு ஊட்டி நல்லுபதேசம் செய்வாள். அப்பொழுதெல்லாம் பெருமையும், பிடிவாதமும் தான் என்னிடம் அதிகரித்ததே தவிர; அவள் உபதேசம் என் செவிகளில் விழவில்லை. மாறாக என் ஆசானாகிய தொலைக் காட்சிக்கு முன்னால் நான் கழிக்கும் நேரங்கள் தான் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே சென்றது. தொலைக்காட்சி, கீழ்த்தரமான நிகழ்ச்சிகளையும், தரங்கெட்ட சினிமாக்களையும், வெட்கங்கெட்ட பாடல்களையுமே ஒளிபரப்பி தீமைக்கு இட்டுச் செல்கின்றது என்பதை இறைவனிடமிருந்து எனக்கு 'ஹிதாயத்' கிடைத்ததன் பின்னரே உணர்ந்து கொண்டேன். அந்த அல்லாஹ்வுக்கே புகழும், நன்றியும் உரித்தாகட்டும்.

என்னை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த இத்தகைய செயல்பாடுகள் அனைத்தும் 'ஹராம்' என உறுதியாகத் தெரிந்தும் கூட அவைகளைச் செய்து கொண்டிருந்தேன். இவைகளையெல்லாம் நினைக்கும் போது எனதுள்ளம் கடுமையாக வேதனைப்படுகின்றது. இத்தகைய எனது செயல்பாடுகள் பாவங்களைச் செய்வதோடு மட்டும் நிற்கவில்லை. மாறாக இஸ்லாத்தின் முக்கிய கடமைகளை விட்டு விடும் நிலைக்குக் கூட இட்டுச் சென்றது.

இவ்வாறு ஐந்து வருடங்கள் கடந்தன. அன்றொரு நாள்; அது என் வாழ்வில் மறக்க முடியாத நாள்; ஆம்! அன்றுதான் அல்லாஹ் எனக்கு நேர்வழிக்கான சரியான பாதையைக் காட்டிய நாள்.

அன்று நாம் பாடசாலையின் அரையாண்டு விடுமுறையில் இருந்தோம். ஓய்வாதலால் இஸ்லாமிய 'ஜம்இய்யா' ஒன்றினால் நடைபெறும் அல்குர்ஆன் மனனப் பயிற்சி வகுப்பொன்றில் கலந்து கொள்ளவிருந்த என் சகோதரி என்னையும் அதில் சேர்த்துக் கொள்ள விரும்பி, தன்னோடு அவ்வகுப்புக்கு வரும்படி பணிவாக வேண்டினாள். சகோதரியின் இவ்வேண்டுதலுக்கு எனது தாயின் சம்மதமும் கிடைத்தது. நானோ அதை முற்றாக மறுத்து விட்டேன். அழிந்து போகும் இவ்வற்ப உலகின் சுகபோகங்களில் மூழ்கி விட்டேன். இவ்வுலகமே தஞ்சமென இருந்து விட்டேன். 'முடியாது' என உரத்த குரலில் கூறினேன். குர்ஆன்மீது கொள்ளும் காதலும்; பாடல்களின் ரசனைகளில் கொள்ளும் மோகமும் ஒரு மனிதனின் உள்ளத்தில் எப்படி ஒன்று சேர முடியும்?

என் தந்தை வந்தார். நடந்ததை அவரிடம் முறையிட்டேன். 'போகும்படி அவளை வற்புறுத்தாதீர்கள். அவள் பாட்டிற்கு அவளை விட்டு விடுங்கள்' என்றார் அவர். தந்தையின் பதில் எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

என் தந்தையிடம் எனக்கென தனி மரியாதையே இருந்தது. ஏனெனில் நான் அவருடைய இரண்டாவது மகள். மூத்த சகோதரியைத் தவிர வேறு சகோதரிகள் எனக்கில்லை. எனது சகோதரனோ என்னை விட இளையவன். தொழுகையில் நான் மிகவும் பேணுதலுடன் இருக்கின்றேன் என நினைத்துத்தான் என் தந்தை இவ்வாறு சொல்லியிருப்பார் போல. நான் அவ்வாறில்லை என்பதை அவர் அறிய நியாயமில்லை. ஆம் உண்மை தான்; தொழுதாயா? என்று என்னிடம் அவர் கேட்டால் 'ஆம்' என்பேன். பொய் சொல்லும் எனது இப்பழக்கம் என் சகோதரிக்கு

22 ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆத்ம சலவை

பெண்ணே.......!
எத்தனை
காலம்தான்
அடுத்தவர் குறைகளையே
அலசித் திரிவாய்....?

★★★

உன்னை நீ
சலவை செய்ய
எப்பொழுதாவது
சந்தர்ப்பம் எடுத்ததுண்டா....?

★★★

உன் இதயத்தை
எப்பொழுதாவது நீ
கறைபோகக்
கழுவியதுண்டா.....?
இத்தனை தூரம்
உன்னை விட்டுப்
பிரிந்ததேன் மௌனம்...?

★★★

வாய் நோகாமல்
வம்பளந்து,
கோள் சொல்லிக்
குடும்பம் கலைத்து
சுகம் என்ன கண்டாய் நீ....?

★★★

புரிந்து கொள்....!
பேசாதிருப்பதால்
உன் நாவொன்றும்
துருப்பிடித்து விடாது.
மௌனத்தில் தான்
உள்ளது மரியாதை.

★★★

உன் பல்லிடுக்குகளில்
எத்தனை காலம்தான்
அடுத்தவர் சதையோடு
அலம்பாமல் திரிவாய்....?!

★★★

இனிமேலாவது
ஆடைகளோடே
சலவைக்குப் போட்டுவிடு.....
ஆத்மாவையும்.

★★★

மன்னார் எம். ஷிபான்.
பேருவலை.

# தவறான விளக்கம்

புத்தகம் படிக்கச்
சொன்னேன்.
பாட்டுப் புத்தகங்களை
மட்டுமே படித்தாய்.

✱✱✱

பத்திரிகை வாசிக்கச்
சொன்னேன்.
நடுப்பக்கங்களை
மட்டுமே வாசித்தாய்.

✱✱✱

படிப்பில் கவனம்
வேண்டும் என்றேன்.
பெண்கள் படித்தாலும்
அடுப்படிக்குத்தானே என்றாய்

✱✱✱

அதிக கதை
கூடாது என்றேன்.
ஆசிரியரோடு கதைப்பதையும்
குறைத்துக் கொண்டாய்.

✱✱✱

அதிக பயணம்
கூடாது என்றேன்.
பாடசாலைக்கு செல்வதையும்
குறைத்துக் கொண்டாய்.

✱✱✱

டி.வி. பார்ப்பதைக்
குறைக்கச் சொன்னேன்.
செய்தி(கள்) பார்ப்பதைக்
குறைத்துக் கொண்டாய்.

✱✱✱

வானொலி கேட்பதைக்
குறைக்கச் சொன்னேன்.
கல்விச் சேவையை
மறந்தே போனாய்.

✱✱✱

சப்தம் போட்டுக்
கதைக்காதே என்றேன்.
வேதம் (குர்ஆன்) ஓதுவதை
நிறுத்திக் கொண்டாய்.

✱✱✱

ஏன் மேற்படிப்புப் படிக்கவில்லை
எனக் கேட்கிறார்கள்
வீட்டார் எதையும்
செய்யவிடவில்லை என்கிறாய்.

✱✱✱

ஆக்கியோன்
மடவளை
மனாப் எம்.இஸ்மாயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவசரமும் சில ஆத்திரங்களும்

நண்பரே வாருங்கள்
உங்களைத்தான்....

என்றாவது நாம்
சிந்தித்ததுண்டா
ஒன்றாக புறப்படுவது
பற்றி....

புறப்படும் போதெல்லாம்
ஏதோ ஒரு தடை....

ஒன்று எம்மில்
யாராவதொருவர்
பொதிகளை மறந்து
புறப்பட்டு விடுவோம்....

சிலவேளை சிலர்
கடும் மழையிலும்
குடைகளை தொலைத்து
விடுவோம்.

இன்னும் சிலபோதில்
செருப்பு வார்கள்
அறுந்து போய்
அதை தைப்பதில்
சிலரின் நேரம் செல்லும்...

கொஞ்சம் பேர்
வீட்டுச்சாப்பாட்டின்
ருசியில் திளைத்துப் போய்
விட்டு வர மனமின்றி
விட்டேற்றியாய்
வெளிவருவோம்.....

எங்களுக்குத் தெரியும்
நாங்கள் அவசரப்பட
மாட்டோம்....
ஆத்திரப்பட மாட்டோம்.....

நாம் தலை சாய்த்து
தொழ வேண்டிய
மஸ்ஜிதுகள் அங்கே
நிலை சாய்ந்து போய்
தரையோடு
தகர்க்கப்படினும்....

நாம் தோள் கோர்த்து
திரிய வேண்டிய
சகோதரங்களின்
உடம்புகளில்
வாள் சேர்த்து
வடிந்தோடும்
குருதியாற்றில்
ஒரு கூட்டம்
படகு விட்டுக்
கொண்டிருந்தாலும்...

நாம் அவசரப்பட
மாட்டோம்
ஆத்திரப்பட மாட்டோம்.

இதுவெல்லாம் என்ன.....
அவர்கள் எமது
சொந்தப் பெண்களின்
சிகை சிரைத்து - நம்
சிரத்திற்கு அதில்
தூக்குக்கயிறு தயாரித்துக்
கொண்டிருந்தாலும்

நாம் பொறுமைசாலிகள்
அவசரப்பட மாட்டோம்
ஆத்திரப்பட மாட்டோம்!

மாத்தளை எஸ்.எம். ரியாஸ்
ஜாமிஆ நளீமியா
பேருவலை.

# யாரும்மா?

உம்மா!
உன் பொன்மேனியை புண்ணாக்கி
தெருவிலிட்டவன்
எவன்?

உன்
தொட்டிலை எரித்து
சுதந்திரத்தை காவியவன்
எவன்?

உன்னை
அடித்துப் பாயிலிட்டவர்
யார்?
சொல்லும்மா!

உன்னை
எச்சில் துப்பி நனைத்தவனை
எரிக்கத் துடிக்கிறேன்.

சிந்தனை யுத்தத்தால்
உன்னை
சிதிலாக்கியவனை
சிதைக்கத் தகிக்கிறேன்.
யாரவன்
சொல்லும்மா!

சாமிரியின்
புத்திரனா?
புதைத்து வருகிறேன்.
அமெரிக்கனா?
சப்பியுண்டு
சக்கையாய் துப்புகிறேன்.

நேட்டோவா?
அடித்துத் துரத்தி
ஒரு முடிவு செய்கிறேன்.

இனி அச்சமில்லை
உளம் நிறைந்த
ஈமான் உள்ளவரை
உம்மா
சத்தியம் நிலைப்பது
நிச்சயம்தான்.

சொல்லும்மா
இப்படி உன்னை
அடித்துப் போட்டவர்
யாரும்மா!

அல்ஹஸனாத்
- பர்ஸான் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹஸனுல் பன்னா (ரஹ்) வின் இறுதிக் கணங்கள்

## மருத்துவ தாதி கூறுகிறார்.

இமாம் ஹஸனுல் பன்னா அவர்கள் கொலை வெறியர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்ட இவ் வேளையில், அவ்வீனச் செயலை கண்ணால் கண்ட பல சாட்சிகளில் ஒருவரான ஓய்வு பெற்ற வைத்தியத் தாதி சகோதரி இன்ஆம் அஸ்சுபுகி (66) அவர்கள் வைத்திய சாலையில் தான் கண்டவற்றை பின்வருமாறு கூறுகிறார்:

1949 ம் ஆண்டு ஆரம்ப பகுதியில், தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் சேர்வதற்காக எகிப்தின் தலைநகர் கெய்ரோவுக்கு வந்தேன். இதுதான் தலை நகருக்கான எனது முதல் பயணம். அப்போது எனக்கு வயது 16. காலஞ்சென்ற இமாம் அவர்களின் பெயரை தனது மகனுக்கு பெயராகச் சூட்டிய எனது மூத்த சகோதரர் மஹ்மூத் அவர்கள் மூலமாக இமாம் அவர்களைப் பற்றி நான் கேள்விப்பட்டதுண்டு.

"தலைவரைக் கொன்று விட்டார்கள். தலைவரைக் கொன்று விட்டார்கள்...." என வைத்தியர்களும் தாதிமார்களும் ஏனைய ஊழியர்களும் பேசிக் கொள்வதை வைத்தியசாலையில் கடமையில் இருந்த அன்றைய தினம் என்னால் செவிமடுக்க முடிந்தது. இச்செய்தி வைத்தியசாலை வட்டாரத்தில் மிக வேகமாகப் பரவியது.

கொல்லப்பட்ட அம்மா பெரும் தலைவர் யார்? கொலை செய்த பாவிகள் யார்? போன்ற கேள்விகள் எழ, என் தோழிகளுடன் சேர்ந்து அதை அறியும் ஆவலில் ஓடினோம்.

எகிப்து தேசத்தின் மிகப் பெரும் சத்திர சிகிச்சை நிபுணர் "மோரோ பாஷா" அவர்களின் தலைமையில் இயங்கும் சத்திர சிகிச்சை அறையில் இமாம் அவர்கள் படுக்க வைக்கப்பட்டிருந்ததை நாம் கண்டோம். ஆண் தாதிகளின் தலைவர் அவர்களைத் தவிர வேறு எவரும் அங்கு தென்படவில்லை. சத்திர சிகிச்சை அறையில் எந்த வைத்தியர்களும் நுழையக் கூடாதென தடை விதிக்கப்பட்டிருந்தது.

> அல் இமாம் அல் பன்னா அவர்களுக்கு முதலுதவி அளிக்க வைத்தியசாலை நிருவாகம் தடைவிதித்தது. அவர் மரணித்து விட்டதை மன்னர் பாறூக் நேரடியாகப் பார்த்து உறுதி செய்தார்.
> - தாதி இன்ஆமுஸ் சுபுகி -

சத்திர சிகிச்சைக் கட்டிலில் இமாம் அவர்கள் மல்லாந்து படுத்திருக்க, செங்குருதி அவர்களது உடலில் இருந்து வடிந்து கொண்டிருக்க, அவர்களது நாவு மட்டும் கலிமாவை மொழிந்து கொண்டிருந்தது. முதலுதவிகூட செய்யக்கூடாதென எம்மையும் தடுத்து விட்டனர். அரச போலீஸ் படையினரால் வைத்தியசாலை சுற்றி வளைக்கப்பட்டு அப்பகுதி சிறைப்படுத்தப்பட்டது.

இரவு 12 மணிக்கு கொண்டு வரப்பட்ட இமாம் அவர்கள் தன்னந் தனியாக எந்த சிகிச்சையுமின்றி சத்திர சிகிச்சை அறையில் படுக்க வைக்கப்பட்டிருந்தார்கள். நள்ளிரவு மூன்று மணி இருக்கும். மன்னர் பாறூக் வைத்தியசாலைக்கு வந்தார்.

மன்னர் பாறூக்கைப் பற்றிக் கேள்விப்பட்டதுண்டு. நேரடியாகக் கண்டதில்லை. பத்திரிகைகளில் அவர் படத்தைப் பார்த்திருக்கிறேன். " இங்கு வா! மன்னரைப் பார்ப்போம்" என என் தோழிகள் சத்தம் போட்டதை அடுத்து அவ்வறையின் யன்னல் ஊடாக எட்டிப் பார்த்தேன். படைபட்டாளம் சூழ மன்னர் வந்திருந்தார்.

"கொலையாளிகள் தமது கடமையை செவ்வனே நிறைவேற்றியுள்ளனரா? இமாம் அவர்கள் மரணித்தது உண்மைதானா?" என்பன போன்றவற்றை தனது கண்ணால் கண்டே உறுதி செய்ய வேண்டும் என்பதற்காகவே மன்னர் வைத்தியசாலைக்கு வந்திருந்தார்.

மன்னர் வைத்தியசாலைக்கு வருவதற்கு நீண்ட நேரத்திற்கு முன்னதாகவே இமாம் அவர்கள் மரணத்தை தழுவி இருந்தார்கள். இதை பார்த்த பின்பு அங்கிருந்து அவர் போய்விட்டார்.

இக்கொலையால் எகிப்து தேசமே அல்லோல கல்லோலப் பட்டது. பல்கலைக்கழக மாணவர்கள், வைத்தியத்துறை பட்டதாரிகள் போன்றோர் போராட்டம் நடத்தினார்கள். எனினும் காவல் துறையினர் அனைத்தையும் கட்டுப்படுத்தி ஆயுத முனையில் அடக்கினர்.

இமாம் அவர்கள் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டதும், அவரது மரணத்தை உறுதி செய்ய மன்னரே நேரடியாக வைத்திய சாலைக்கு வந்ததும் எகிப்து தேச மக்களின் உள்ளத்தில் சில கேள்விக்கணைகளை தொடுத்தது.

"அல் பன்னா" என்ற அந்த மனிதர் யார்? அவர் ஏன் கொல்லப் பட்டார்? அவரது கொள்கை என்ன? கொலையாளிகளின் பின்னணி என்ன?" போன்ற கேள்விகளுக்கு விடை தேடிய மக்கள், இமாம் அவர்கள் எழுதிய புத்தகங்களை, கட்டுரைகளை படிக்க, சிந்திக்க ஆரம்பித்தனர். இதன் மூலம் "அல் - இஃவானுல் முஸ்லிமூன்" என்ற அந்த சிந்தனை என்னிலும் மற்ற மக்களிலும் வேரூன்ற ஆரம்பித்தது.

தகவல்: அத்தஃவா - 82,
தமிழில்: அகத்திமுறிப்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோரம் போகும் முஸ்லிம் யுவதிகள்?

ஆர். அப்துல்லாஹ் அஸ்ஸாம் இஸ்லாஹி

கடந்த சில மாதங்களாக காதில்படும் செய்திகளையும், தகவல்களையும் வைத்துப் பார்க்கும் போது இவ்வாறான ஓர் அதிர்ச்சி வினாவை எம் சமூகத்தில் எழுப்பாமல் இருக்க முடியாது. முஸ்லிம் சமூகத்தின் கண்கள் என வர்ணிக்கப்படும் எமது பெண்கள் பற்றி வெளிவரும் அசிங்கமான தகவல்கள், எத்தனையோ வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் இலங்கை முஸ்லிம்களுக்கு மேலும் பேரிடியாக அமைந்துள்ளது.

ஆம்! மலையகத்தின் சில பகுதிகளில் முஸ்லிம் யுவதிகள் சிங்கள வாலிபர்களுடன் சுற்றுகிறார்கள் என்பதும், இன்னும் சிலர் அவர்களைத் திருமணம் செய்துள்ளார்கள் என்பதும் வாய்வழிச் செய்தியாக இலங்கை முழுவதும் பரவியுள்ளமை அனைவரும் அறிந்ததே. எத்தனை பேர் ஓடிப் போனார்கள்? எத்தனை பேர் திரும்பி வந்தார்கள்? என்ற கணக்கு வழக்கெல்லாம் தாங்கள் தாங்கள் போட்டுக் கொண்டதற்கிணங்க நூறு என்றும், ஐம்பது என்றும்,பத்து என்றும்........ சொல்லிக் கொண்டும், பள்ளிவாயல் விளம்பரப் பலகைகளில் ஒட்டிக் கொண்டுமிருக்க விசாரித்துப் பார்த்ததில் சொல்லுமளவுக்கு உண்மை இல்லை என்று தெரிந்து கொண்ட அதேவேளை, முற்றுமுழுதாக பொய்யாகவும் அவை இல்லை என்பதும் தெரியவந்தது.

ஆனால் முஸ்லிம் யுவதிகளை தமது வலையில் சிக்கவைக்க வேண்டுமென்று திட்டமிட்டு செயற்படும் பேரினவாதக் குழு மிகத் தீவிரமாக செயற்பட்டு வருவதும், அவ்வாறு முஸ்லிம் யுவதிகளை மணம் முடிக்கும் சிங்கள வாலிபர்களை குறைந்தது இரண்டு வருடங்கள் பராமரிப்பதற்கென பெரும் தொகைப் பணம் வங்கியில் சேமிப்பில் இடப்பட்டிருப்பதும் அம்பலத்துக்கு வந்துள்ளன.

சொல்லுமளவுக்கு பிரச்சினைகள் உக்கிரமாக இல்லை என்று சாந்திய டையும் நிலையில் இல்லை. ஆபத்து சூழ்ந்ததாகவே நிலைமை உள்ளது. சம்பந்தப் பட்ட பகுதிகளிலுள்ள சில அமைப்புக்கள், இளைஞர் குழுக்கள் விழிப்புடன் செயற் பட்டதால் பல ஆபத்துக்கள் தவிர்க்கப் பட்டுள்ளன. ஆனாலும் இத்தகைய சூழல் ஏற்படுவதற்கான காரணங்கள் எமது சமூகத்தில் நிலவின என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவற்றைக் கண்டும் காணாமலும் அலட்சியமாக இருந்தோம் என்பதும் உண்மை. உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இத்தகைய ஆபத்துக்களைத் தவிர்த்தி ருக்கலாம்.

### சீதனம்

முஸ்லிம் சமூகத்தை உக்கிரமாக ஆட்டிப் படைக்கும் காட்டேரியாக சீதனம் மாறி விட்டுள்ளது. லட்சக் கணக்கில் பணமும், ஏக்கர் கணக்கில் நிலமும், இன்னும் வாகனங்களும் இத்தியாதி களும் கேட்கும் ஜாஹிலிய்யத் இந்த சமூகத்தை விட்டும் ஒழிக்கப்படும் வரை சீதனம் கொடுக்க திக்கற்ற எமது பெண்கள் அந்நிய நாடு செல்வதும், அந்நியனோடு செல்வதையும் எப்படித் தடுக்க முடியும்? அண்மையில் கொழும்பில் நடைபெற்ற அதிர்ச்சியான ஒரு சம்பவத்தை ஒரு சகோதரர் என்னிடம் சொன்னார். தொடர்மாடியில் வசிக்கும் மலே சமூகத்தைச் சேர்ந்த குடும்பத்தில் அழகுக்கும், அறிவிற்கும் பஞ்சமில்லாத மூன்று முஸ்லிம் யுவதிகள். ஆனால் ஏழைகள். மாறிமாறி பெண்பார்க்க வந்தவர்களெல்லாம் ஏழ்மையைப் பார்த்து ஒதுங்கிக் கொண்டனர். அதே தொடர்மாடியில் வசிக்கும் மூன்று வேற்றுமத இளைஞர்கள் அவர்களைத் திருமணம் முடிக்க விருப்பம் தெரிவித்துக் கொண்டிருந்தனர். ஆனாலும் பெற்றோர் மார்க்கப் பிரச்சினையைக் காட்டி மறுத்து வந்தனர். ஆனால் பெண்களுக்கும் வயது ஏறிக் கொண்டிருந்ததேயன்றி மணமக்கள் வாய்க்கவில்லை. இறுதியில் பெற்றோர்கள் அவ்விளைஞர்களுக்கு தமது பெண்களை திருமணம் முடித்துக் கொடுத்து விட்டனர். இதை யாரிடம் போய்ச் சொல்லுவது?

இஸ்லாம் பெண்களுக்கு மஹர் கொடுத்து மணமுடிக்கச் சொல்லுகிறது.

**"நீங்கள் பெண்களுக்கு அவர்களுக்குரிய மஹர்களை கொடையாகக் கொடுத்து விடுங்கள்"**

(அல்குர்ஆன்4 :4)

ஆனால் ஆயிரத்து ஒரு ரூபா மஹரைப் பள்ளிவாயலில் கொடுத்து விட்டு லட்சக்கணக்கை மணமகளின் வீட்டில் வாங்கிக் கொள்கிறார்கள்.

### கலவன் அமைப்புக்கள்

இவற்றுள் சிங்களப் பாடசாலைகள், சர்வதேசப் பாடசாலைகள் (International Schools), ஆடைத் தொழிற்சாலைகள், டியூட்டரிகள் மற்றும் வேலைத் தலங்கள் முதலியன முக்கிய பங்கை வகிக்கின்றன. இந்த முஸ்லிம் பெற்றோர்களுக்கு என்னதான் நடந்ததோ தெரியாது சிங்களப் பாடசாலைகளில் அவ்வளவு மோகம்! அதுவும் பெண்பிள்ளையை அனுப்பி கட்டைக் கவுனுடன் அந்நிய ஆடவனுடன் குதூகலிப்பதைப் பார்ப்பதில் அளவிலா ஆனந்தம்! இன்று இதன் விளைவை அனுபவித்தும் புத்திவருவதாக இல்லை. இந்த சிங்களப் பாடசாலைகளும் ஏனைய அமைப்புகளும்தான் மேற்கத்திய கலாச்சாரத்தையும், மோகத்தையும் ஊட்டி வளர்த்து இஸ்லாமிய உணர்வை மழுங்கடிக்கச் செய்கின்றன என்பதும் ஆண் - பெண் சமய பேதமின்றி நெருங்கிப் பழகும் வாய்ப்பை ஏற்படுத்தி வெட்க உணர்வை இல்லாமற் செய்கின்றன என்பதும் தெரியாமலா உள்ளன? ஆயினும் அப்பாடசாலைகளிலுள்ள தரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லாஹ்வின் பாதையில்..... IV

பாரூகி

ஒரு முஸ்லிம் நாட்டுக்குள் அந்நியரது ஊடுருவல் இடம் பெறுவது போன்று மேலும் பல வித்தியாசமான சந்தர்ப்பங்கள், ஜிஹாதைப் பிரகடனப்படுத்து வதற்குரிய கட்டங்களைத் தோற்று விக்கலாம். எனினும், அவ்வாறு யுத்தப் பிரகடனம் செய்வதற்கு ஒரு சட்டபூர்வமான, எல்லோ ராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இஸ்லாமியத் தலைமைத்து வத்திற்கே முடியும். பொதுவாக, ஒரு முஸ்லிம் நாட்டின் அரசு அதனைச் செய்யும்.

அவ்வாறு அதிகாரம் பொருந்திய தலைமைத்துவம் இல்லாத பட்சத்தில், ஓர் உத்தி யோகபூர்வமற்ற இஸ்லாமியத் தலைமைத்துவம் இதனைப் பிர கடனப்படுத்தலாம். உதாரணமாக, மதிப்பும், அறிவும் நிறைந்த ஆலிம்கள் – அவர்களது அரசியல், சன்மார்க்கத் தீர்ப்புக்கள் இஸ் லாமிய உம்மத்தால் ஆரவாரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, பின்பற்றப் படுபவையாக இருத்தல் வேண்டும். எனினும், ஜிஹாதை பிரகடனப்படுத்தும் பாரிய பொறுப் பை ஏற்பவர், தெளிவான இஸ்லா மிய அடிப்படையில், திடசங்கற்பம் பூண வேண்டும். தமது தீர்மானத் தின் சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்தறிந்திருத்தல் வேண்டும். குறிப்பிட்ட சந்தர்ப் பத்தில், ஜிஹாதில் இறங்குவது யதார்த்தமானதெனவும், சாத்திய மானதெனவும் திருப்தியுடைய வராக இருத்தல் வேண்டும். ஆகக் குறைந்த அளவு ஆயுதங்களை யாவது கைவசம் பெற்றிருத்தல் வேண்டும்.

யுத்தம் பிரகடனப்படுத்து வதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்ட பின்பும், முஸ்லிம்கள் அதற்குத் தயார் நிலையில் இல்லை என்றி ருந்தால், அத்தலைமைத்துவம் தம் தீர்மானத்தைப் பின்போட்டு விட்டு, முதலில் யுத்தத்திற்குத் தேவையான ஆயத்தப் பணிகளில் ஈடுபடுதல் வேண்டும். முஸ்லிம் கள் உளரீதியாகவோ, இராணுவ ரீதியாகவோ ஆயத்தமில்லாத நிலையில், அவ்வாறு யுத்தத்திற்கு வழிநடாத்திச் செல்வது தற்கொ லைக்குச் சமமானது என்ற கட்டத் தில், அறிந்தோ, அறியாமலோ அவர்களுக்குத் தலைமை தாங்கிச் செல்ல இஸ்லாமிய தலைமைத் துவம் முற்படாதிருப்பது கடமை யாகும். ஒரு போராட்டம் திட்ட மிட்டு, யுத்த தந்திரங்களைக் கடைப்பிடித்து மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றல்லாமல், கோபத் தினாலும், தூண்டுதல்களினாலும் உந்தப்பட்டு மேற்கொள்ளப்படு வதல்ல. ஜிஹாதின் நோக்கம் ஒழுங்கை நிலைநாட்டுவ தேயன்றி, அதனை சீர்குலைப்ப தல்ல. அதனால்தான், சட்டபூர்வ மான, அங்கீகாரம் பெற்ற அதி காரத்தினால் தான் ஜிஹாதுக்கான தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமே யொழிய, பக்தியும், ஆர்வமும் மிக்க தனிநபர்களால் அல்ல.

அவ்வாறில்லாமல், வேறு தேவைகள் ஏற்பட்டாலும் கூட, முழு சமூகத்தையுமே பாதிப்புக் குள்ளாக்கும் விடயத்தில் ஒரு சில தனிநபர்கள் முடிவெடுப்பது எவ்வாறு சாத்தியமாகும்? முழுச் சமுதாயத்தின் சம்மதமும், உடன் பாடுமின்றி எடுக்கப்படும் ஒரு தீர்மானம் வெற்றி பெறுவது மிக அரிது. மறுபுறத்தில், அவ்வாறு ஈடுபட்டால், அது அங்குமிங்கு மாக நிகழக்கூடிய மூர்க்கத்தன மான தாக்குதல்களாக அமைந்து, ஒழுங்குக்குப் பதிலாக "பஸாதையே" தோற்றுவிக்கும்; ஜிஹாதின் நோக்கத்தையே தோல்வியடையச் செய்து விடும். அவ்வாறான தனிப்பட்ட நடவடிக் கைகள், முஸ்லிம்கள் மீது மேலும் மரணங்களையும், தோல்வி களையும் ஏற்படுத்த, எதிரிகளுக்கு ஒரு சாக்காக அமைந்துவிடும். எதிர்காலத்தில் தம்மை தயார் படுத்திக் கொண்டு ஜிஹாதைப் பிரகடனம் செய்யக்கூடிய தகை மையையும் அது அழித்து விடும். ஜிஹாதை வழிநடாத்திச் செல்லத் தக்க உண்மையான முஸ்லிம் தலைமைத்துவம் இல்லையென் றால், ஜிஹாத் பற்றிய அறிவூட்டி, விழிப்பேற்படுத்தி, வெகுசன அபிப்பிராயங்களைத் திரட்டுவது மக்களினதும், ஆலிம்களினதும், இயக்கங்களினதும் கடமை யாகும். இவ்வாறு செய்வது ஒருவேளை ஆட்சி, அதிகாரத் திலிருக்கும் முஸ்லிம்களுக்கு தம் கடமைகளை உணர்த்தும்; அல்லது, அவ் அதிகாரத்தை இயக்கத்திடம் கையளிக்க உதவும். முஸ்லிம் உம்மத்துக்குத் தெரியாமல், அவர் களது சம்மதத்தையும், உடன் பாட்டையும் பெறாமல், தனிநபர் களுக்கோ, தனிநபர்களைக் கொண்ட குழுக்களுக்கோ ஜிஹா தைப் பிரகடனப்படுத்த முடியாது.

முன்னைய காலங்களில், நாடுகள், முஸ்லிம் நாடுகள் (தாருல் இஸ்லாம்) என்றும், முஸ்லிமல்லாத நாடுகள் என்றும் பிரிக்கப்பட்டு, முஸ்லிம் அல்லாத நாடுகளும் கூட, முஸ்லிம்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் புனித இஸ்லாம் எழுச்சி பெறுகிறது ஆண்டு தோறும் ஐம்பதாயிரம் அமெரிக்கர்கள், புனித இஸ்லாத்தைத் தழுவுகிறார்கள்!

*சென்ற இதழ் தொடர்ச்சி......*

**ii. பொருளாதாரம்:-**

அல்ஹம்துலில்லாஹ், வல்ல அல்லாஹ்வின் பெருங்கிருபையினாலும், மற்றும் அவனது அருளினாலும், அமெரிக்காவில் வாழ்கின்ற முஸ்லிம்களின் பொருளாதார நிலைமை மிகவும் நல்ல நிலையில் உள்ளது. அமெரிக்காவில் வாழ்கின்ற முஸ்லிம்களின் பொருளாதார வளங்களையும், மற்றும் அவர்களின் உழைப்பையும், ஒருமுகப்படுத்தி, - அவர்களின் சேமிப்புக்களை இஸ்லாமிய மயப்படுத்துவதற்காகவும் அமெரிக்க முஸ்லிம்களுக்கான, ஒரு தனியான இஸ்லாமிய சமூக பொருளாதார ரீதியில் பங்களிப்பு செய்வதற்கென, "வட்டி இல்லா இஸ்லாமிய வங்கி முறைமையை நாம் ஏற்படுத்தி இருக்கின்றோம்; அல்ஹம்துலில்லாஹ் தற்போதைய சூழ்நிலையில் தலைநகர் வாஷிங்டனில் ஒரு சிறிய அமைப்பிலான "வட்டி இல்லா இஸ்லாமிய வங்கி" ஒன்று அமெரிக்க முஸ்லிம் கவுன்சிலால் ஸ்தாபிக்கப்பட்டு திறம்பட நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது; எனவே அமெரிக்காவில் வாழ்கின்ற முஸ்லிம்களும், மற்றும் ஏனைய முஸ்லிம் நாடுகளில் வாழ்கின்ற முஸ்லிம் தனவந்தர்களும் - தங்களால் இயன்ற உதவிகளை வழங்க வேண்டுமென நாம் முஸ்லிம் கவுன்சில் சார்பாக கேட்டுக் கொண்டிருக்கிறோம்; இவ்வாறு செய்கின்ற உதவி உபகாரங்களை எமது இஸ்லாமிய வட்டி இல்லா வங்கியினூடாக அமெரிக்காவில் இஸ்லாமிய தஃவாப்பணியை மேலும் மேலும் விரிவுபடுத்தவும், வளர்ச்சியடையவும், செய்ய முடியும்.

**iii. அரசியல்:-**

அமெரிக்காவில் தற்போது சுமார் 8 மில்லியன் முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். இவர்களில் சுமார் ஒரு மில்லியன் பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் வாக்காளர்களும் உள்ளார்கள்: அத்துடன் பதிவு செய்யப்படாமல் இருக்கின்ற ஏனைய முஸ்லிம் வாக்காளர்களையும் தொடர்ந்தும் பதிவு செய்வதற்கு நாம் முயற்சியில் இறங்கியுள்ளோம். மேலும் நாம் அமெரிக்க முஸ்லிம்களை ஒரு சிறந்த இஸ்லாமிய - அதாவது முற்போக்கான இஸ்லாமிய அரசியல் தலைமைத்துவத்துக்குள் - ஒன்றுபடவைத்து, அமெரிக்காவில் முஸ்லிம்களுக்கான தனித்துவமான "ஒரு முஸ்லிம் அரசியல் முன்னணியை" உருவாக்கி அங்கு முஸ்லிம்கள் சகல உரிமைகளையும் பெற்று; தலைநிமிர்ந்து வாழ்வதற்கும், அத்துடன் அமெரிக்க வாழ் முஸ்லிம்களின் ஜனநாயக மற்றும் அடிப்படை உரிமைகளுக்காக அமெரிக்காவில் புனித இஸ்லாத்துக்கும், முஸ்லிம்களுக்கும் சேவை செய்யப் புறப்பட்டுள்ள சகல இஸ்லாமிய அமைப்புகளும் - ஒன்று சேர்ந்து - ஒற்றுமையாக கை கோர்த்து செயற்பட வேண்டும். அதாவது ஒரே அணியில், திரண்டு ஒரு உறுதியான இஸ்லாமிய தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என நாம் எமது முஸ்லிம் கவுன்சிலினூடாக சகல இஸ்லாமிய அமைப்புக்களுக்கும், மற்றும் அமெரிக்காவில் வாழ்கின்ற எல்லா முஸ்லிம்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

மேலும் அமெரிக்கா முஸ்லிம் கவுன்சிலும் மற்றும் ஏனைய தஃவா செய்யும் இஸ்லாமிய அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து தத்தமது நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தி - ஒன்றிணைத்து அதாவது அரசியல் ரீதியிலும் - மற்றும் கல்வி, கலை, கலாசாரம் போன்ற இன்னோரன்ன விடயங்களிலும் முஸ்லிம்களின் குரலை ஓங்கி ஒலிப்பதற்கும்; அத்துடன் அமெரிக்காவில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கென்று உறுதியானதொரு அரசியல் தனிப்பாரம்பரியத்தையும் ஓர் அரசியல் கட்டுக்கோப்பையும் உண்டுபண்ணி அதனடிப்படையில் அமெரிக்காவில் முஸ்லிம்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை வென்றெடுத்து முஸ்லிம்களின் சகல உரிமைகளையும் சிந்தனா ரீதியிலான போராட்ட அடிப்படையில் வென்றெடுப்பதற்கு அமெரிக்காவில் இயங்குகின்ற சகல இஸ்லாமிய அமைப்புகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென நாம் சகல அமைப்புக்களையும் கேட்டுக் கொண்டுள்ளோம், மேலும் தற்போதைய சூழ்நிலையில் அமெரிக்காவில் ஒவ்வொரு மாநில வாரியாகவும், (10,000) பத்தாயிரம் வரையான தகுதி பெற்ற முஸ்லிம் வாக்காளர்களை பதிவு செய்து அந்தந்த மாநிலங்களில் நடைபெறுகின்ற உள்ளூராட்சி தேர்தல்கள் மற்றும், ஏனைய பாராளுமன்ற தேர்தல்கள் செனற் சபைத் தேர்தல்கள் போன்ற எல்லா தேர்தல்களிலும் இனிவரும் காலங்கள் முஸ்லிம்கள் சார்பாக "முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்பாளர்களை" சகல தேர்தல் களிலும் நிறுத்தி போட்டியிடுவதற்கும் நாம் சகல இஸ்லாமிய அமைப்புக் களுடனும்தொடர்ந்தும் ஆலோசனை செய்து வருகிறோம்.

மேலும் அமெரிக்காவில் முஸ்லிம்கள் வாழ்கின்ற எல்லா மாநிலங்களிலும், அவர்களுக்கு எதிராக, இஸ்லாத்தினதும் முஸ்லிம் களினதும் எதிரிகளினாலும், மற்றும் அரச அதிகாரிகளினாலும் கட்டவிழ்த்து விடப்படுகின்ற சகல பழிவாங்கல் நடவடிக்கைகளையும் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் போது, உரிய பிரச்சினைகளை, அவைகள் பற்றி உரியவர்களின் கவனத்துக்கு கொண்டு வந்து அதற்கான பரிகாரங்களை உடனடியாக காணவேண்டுமென்று அமெரிக்காவில் இருக்கின்ற சகல பள்ளிவாசல்களுக்கும் நாம் ஆலோசனைக் கடிதங்களை அனுப்பி வைத்திருக்கின்றோம். மேலும் இவ்வாறான பிரச்சினைகளையும், கஷ்டங்களையும் எதிர் நோக்குகின்ற முஸ்லிம்கள் தமது அந்த விடயங்களை உடனுக்குடன் எமது கவனத்துக்கு கொண்டு வந்தால் அது எல்லா வகைகளிலும் அனுகூலமாக அமையும் என நாம் எதிர்பார்க்கிறோம். அண்மையில் இவ்வாறான பிரச்சினைகளை எமது கவனத்துக்கு கொண்டு வந்ததின் காரணமாக அமெரிக்காவின் ஜனாதிபதி பில்கிளின்டனுக்கு அந்தப் பிரச்சினைகளை எடுத்துக் காட்டி சில தரவுகளையும் பெற்றிருக்கிறோம். எனவே இது விடயத்தில் அமெரிக்காவில் வாழ்கின்ற முஸ்லிம்கள் அனைவரும் பொறுப்புணர்ச்சியோடும் மிகமிக கவனமாகவும் சிரத்தையோடும் நடந்து கொள்ள வேண்டும் என நாம் சகல பள்ளிவாசல்களுக்கும் சுற்றுநிருபங்களை அனுப்பி வைத்திருக்கிறோம்.

**மஜ்லிஸுஷ் ஷூறா:-**

மேலும் வல்ல அல்லாஹ்வின் மிகப்பெரிய கிருபையினால் அமெரிக்காவில் இஸ்லாமிய தஃவாப் பணியில் ஈடுபடுகின்ற எல்லா இஸ்லாமிய அமைப்புக்களும் ஒற்றுமையாக ஒரு முகப்பட்டு ஒரு கொடியின் கீழ் திரண்டு ஒரு கட்டுக்கோப்புக்குள் ஒன்றுபட்டு இயங்கினால் மிகமிக வேகமாக இஸ்லாமிய தஃவாப் பணியை செய்வதுடன்; அமெரிக்காவில் வாழ்கின்ற முஸ்லிம்களின் சார்பாக அவர்களை எல்லா துறைகளிலும், வெற்றிப் பாதையில் வீறுநடை போட்டு எழுச்சிப் பெறச் செய்யலாம்; என்ற ஒரு கருத்தினடிப்படையில் வைத்துத்தான் அண்மையில் நாம் அமெரிக்க முஸ்லிம் கவுன்சிலின் சார்பாக எல்லா இஸ்லாமிய தஃவா அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் ஒன்று கூட்டி ஒரு பெரியதொரு மாநாடு நடாத்தினோம். அந்த மாநாட்டின் முடிவின் படி, எல்லா இஸ்லாமிய அமைப்புக்களின் பிரதிநிதிகளில் 15 பேரைக் கொண்டு "மஜ்லிஸுஷ்ஷூறா" என்ற ஒரு அமைப்பை நாம் ஏற்படுத்தியுள்ளோம். (A Shoora council) இந்த ஷூறா கவுன்சிலின் பிரகாரம், "சகல அமைப்புக்களின் ஆலோசனைகளின் படி" ஒரு சட்டமன்றத்தையும்; (ஒரு பத்வா குழுவையும்) நாம் ஏற்படுத்தியுள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளாக இவ்வாறு நாம் ஒற்றுமையாக இயங்கி வருகின்றோம்; இந்த ஒற்றுமையானது சகல இஸ்லாமிய அமைப்புக்கள் மத்தியிலும் ஒரு சிறந்த புரிந்துணர்வையும், தெளிவையும் உண்டாக்கியிருக்கிறது, இந்த ஒற்றுமையானது இஸ்லாமிய அமைப்புக்களின் சிறந்த ஒற்றுமைக்கு சிறப்பானதொரு எடுத்துக்காட்டாகும்.

**V. சமூக சீர்திருத்தமும் உதவி செய்தலும்**

அல்ஹம்துலில்லாஹ் அடுத்த கட்ட நடிவடிக்கையாக அமெரிக்கா முஸ்லிம் கவுன்சிலை மையமாகக் கொண்டு அமெரிக்க மாநிலங்கள் முழுவதும் "இஸ்லாமிய நலன் புரிச் சங்கங்களை" அமெரிக்காவின் ஒவ்வொரு மூலைமுடுக்குகளிலும் ஏற்படுத்தி அமெரிக்காவில் வாழ்கின்ற முஸ்லிம்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை முன் வைத்து அவர்களுக்கு எல்லா வகையிலான உதவிகளையும் உடனடியாக செய்வதற்கென்ற ஒரு உயரிய நோக்கத்துடன்தான் இந்த நலன் புரிச் சங்கங்களை நாம் தற்போது ஏற்படுத்தி வருகிறோம். இந்நலன் புரிச் சங்கங்களினூடாக அமெரிக்காவில் வாழ்கின்ற முஸ்லிம்களின் பிரச்சினைகளை தேசிய சர்வதேச மட்டத்துக்கு கொண்டு வந்து உடனடியாக பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண முடியுமென நாம் நம்புகின்றோம்! இவ்வாறான இஸ்லாமிய நலன்புரிச் சங்கங்களை தற்போது அமெரிக்காவில் நாம் நிறுவியுள்ளதால் முஸ்லிம்களின் பிரச்சினைகளை இஸ்லாமிய அடிப்படையில் மிகமிக இலகுவாக தீர்க்க முடியும் எனவும், தகுந்த தீர்வுகளையும், உடனடியாக வழங்க முடியும் என நாம் உறுதியாக நம்புகிறோம். இவ்வாறு, அமெரிக்காவில் புனித இஸ்லாத்தைத் தழுவுகின்ற சகோதரர்களுக்கான சிறியளவிலான நிதி உதவிகளையும் நாம் செய்து வருகின்றோம். இவ்வகையான நிதி உதவித் திட்டத்தை நாம் தொடர்ந்தும் செயற்படுத்துவதற்காக பல்வேறு இஸ்லாமிய நிதியுதவி வழங்கும் நிறுவனங்களும் எமக்கு உதவி வருகின்றன. இந்தவகையில் ஜித்தாவில் தலைமையகத்தைக் கொண்ட நிறுவனங்களான "உலக இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி, (World Islamic Development Bank) மற்றும் சவூதி அரேபியாவின் அல் பைஸல் நிறுவனம்" (King Faizel Foundation), மற்றும் சவூதியில் உள்ள ஏனைய வர்த்தக நிறுவனங்களான, டல்லாஹ் அல்பரக்கா நிறுவனம், (Dallah Albaraka Company). பில்லாதியன் பிரைவட் கொம்பனி லிமிட்டெட் (BILLADIAN PRIVATE COMPANY LTD) அர்ராஜிஹ் பேங்க் கொம்பனி லிமிட்டெட் (Al Rajhi Banking Investment Corporation.) ஆகிய பல நிறுவனங்களினூடாக நிதி உதவிகளும், கிடைக்கின்றன.

*28ம் பக்கம் பார்க்க*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாயிரம் ஆண்டிலொரு மீள்பார்வை

## புரொபஸர். யூஸுப் பரொக்லர்

**2000**ம் ஆண்டை எதிர்நோக்கி ஆவலுடன் காத்திருக்கின்றது கிறிஸ்தவ உலகம். அதனுடன் சேர்ந்து முழு உலகமும் அதனைக் கொண்டாட நிர்ப்பந்திக்கப்படுகிறது. ஆனால் இந்த ஆண்டோடு முஸ்லிம்களுக்கு 1420 ஆகவும், சீனர்களுக்கு 4607 ஆகவும், யூதர்களுக்கு 5760 ஆகவும், மஜூஸிகளுக்கு (Zoroastrians) 1368 ஆகவும், ஹிந்துக்களுக்கு 5101 ஆகவும் இருக்கிறது.

எனினும் இந்தத் தடபுடலுக் கோர் பின்னணி இல்லாமலில்லை. **"மேற்குலகின் தலைவிதியை, எமது தலைவிதியாக மாற்றிக் கொண்டால், மகிழ்ச்சிகரமான வாழ்வு காத்துக் கிடக்கின்றது"** எனும் பிரமையை இதன் மூலம் எம்மீது திணிக்க முயல்கிறது மேற்குலகம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இது மேற்குலகின் மேலாதிக்கத்திற்கான தந்திர நடவடிக்கைகளில் ஒன்று எனலாம். இதற்கு முஸ்லிம்களாகிய நாமும் ஒத்துப் போவதா? இதனை அலட்சியம் செய்யவும் முடிவதில்லை; ஆதரித்து அண்டிச் செல்லவும் முடியாது. இதற்குள்ள ஒரே மாற்று வழி, மேற்குலகின் பரிபாஷையிலேயே அதன் வரலாற்றை விமர்சிப்பதுதான்.

மேற்குலகம் மூன்று முக்கிய சாதனைகளை, முன்னைய ஈராயிரம் ஆண்டுகளில் அடைந்துள்ளது. அவற்றை "முக்கொலைகள்" என வர்ணிக்கலாம். ஒன்று, அவர்கள் கடவுள் கொள்கையைக் கொன்றார்கள்; (Deicide) இரண்டு, இயற்கையை கொன்றார்கள் (Ecocide), மூன்று, இனப்படுகொலை செய்தார்கள் (Genocide)

### கடவுள் கொள்கையின் கொலை (DEICIDE)

மாறுபட்ட கடவுள் கொள்கையுடன் தான் நவீன கிறிஸ்துவம் ஆரம்பமானது. "உலகைப் படைக்க இறைவனின் கை நீண்டது; ஆனால் அது மீண்டும் சட்டைக்குள் புகுந்து கொண்டது" எனும் யூதர்களின் கற்பனையொன்று பைபிளுக்குள் இடம் பிடித்துள்ளது. இதனை, அல்குர்ஆன் "அல்லாஹ்வின் கை கட்டப்பட்டுள்ளது என யூதர்கள் கூறுகிறார்கள்" என அவர்களைக் கண்டிக்கின்றது. இந்தக் கொள்கை அல்லாஹ்வின் சக்தியை குறைத்து மதிப்பிடுவதோடு, மனிதனால் இயலாதவைகளை மாத்திரம் அல்லாஹ்வின் பொறுப்பில் விட்டுவிட்டு, ஏனையவற்றில் இறைவனுடன் சமஉரிமை கோரும் தன்மையை ஏற்படுத்தியது. அதுமாத்திரமல்ல, கிறிஸ்துவ தலைமைப்பீடம் பைபிளையே மாற்றியமைத்தது. நம்பிக்கைகளை சடங்குகளை மாற்றியது; புதியனவற்றைப் புகுத்தி, அவற்றை மறுக்கக் கூடாத கொள்கைகளெனப் பிரகடனப்படுத்தியது; மார்க்கச் சடங்குகளில் இலாபம் சம்பாதித்தது; பிரம்மச்சரியத்தைப் புகுத்தியது; ஆண்மேலாதிக்கம், சொத்துரிமை, மற்றும் அந்நியரை வெறுத்து, அவர்கள் மீது மூர்க்கத்தனத்தைப் பிரயோகிக்கும் வழிமுறையை விதந்துரைத்தது. ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ஸுன்னாக்களை மாற்றியது. இந்த ஏமாற்று வேலைகளை ஏற்காதவர்களை சித்திரவதை செய்தது. அவர்கள் உயிரோடு எரிக்கப்பட்டார்கள். புதுமைகள் புகுத்தப்பட்டு (Innovations). மக்கள் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டன. காலம் மாறிய போது "சீர்திருத்தம்" (Reformation) கொண்டுவரப்பட்டது. ஆனால் புதிதாகப் புகுந்தவை புறந்தள்ளப்படவில்லை. அதன்பின்னர் அறிவுஞானத்தின் (Enlightenment) ஆதிக்கம் ஆரம்பித்தது. 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தத்துவ ஞானியாகக் கருதப்படும் நியட்ஸே (Nietzsche) "இறைவன் இறந்து விட்டான்" எனத்துணிந்து கூறினான். அவர்கள் அவர்களது தெய்வ நம்பிக்கையை கொன்று விட்டார்கள். இதற்கு ஆயிரம் ஆண்டுகள் ஆயின.

### சுற்றாடல் கொலை (ECOCIDE)

தௌஹீதைப் பற்றித் தவறான தொரு விளக்கத்தை வைத்துக் கொண்டு கிறிஸ்துவ தலைமைத்துவம் (Church) பல்தெய்வக் கொள்கையை (Paganism) எதிர்த்துப் போராடியது. இயற்கையை வணங்குபவர்களை வெறுத்தவர்கள் இயற்கையையும் வெறுக்கத் தொடங்கி விட்டார்கள். இது, இயற்கை உலகை விட்டும் அவர்களைத் தூரமாக்கியது. எந்தளவுக்கெனில், உலகை மாற்றுவதில் படைத்தவனுடன் தம்மைப் பங்காளிகளாக்கிக் கொண்டார்கள். இதன் மூலம் "ஷிர்க்" ஸ்தாபிதம் செய்யப்பட்டது. விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஏற்பட்டு, அவர்களது கைகள், படைக்கும் சாதனங்களை (Tools) பெற்றுக் கொண்ட போது, தாமே கடவுளாகி விட்டதொரு மாயையில் மகிழ்ந்தார்கள். இது, இயற்கையை, சூழலை ஆக்கிரமித்து அழிக்கும் தன்மையை அவர்களில் ஏற்படுத்தியது. இதனால் அவர்களது தொழிற்சாலைகளும், பொருளாதாரமும், கலாச்சாரமும் கூட அழிவுப் பாதையில் சென்றன. வீண்விரயங்களும், கட்டுக்கடங்காமல் விழுங்கும் கலாச்சாரமும் (Consumerism) இயற்கையை அழித்தொழிக்கும் இயல்பை அவர்களின் இதயங்களில் இருத்தி விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுணர்வால் உந்தப்படும் தேனீக்கள்



உம்முடைய ரப்பு தேனீக்கு 'மலைகளிலிருந்தும், மரங்களிலிருந்தும், அவர்கள் (மனிதர்கள்) கட்டுகின்ற (தேன் கூடு முதலிய) வற்றிலிருந்தும் வீடுகளை நீ அமைத்துக் கொள், என்று உள்ளுணர்வை ஏற்படுத்தினான்.

பிறகு எல்லாக்கனி (மலர்) வகைகளிலிருந்தும் நீ உணவருந்தி உன்னுடைய ரப்பின் எளிதான வழி களில் நீ புகுந்து செல்வாயாக! (என்றும் உள்ளுணர்வை ஏற்படுத்தினான்) அவற்றின் வயிறுகளிலிருந்து ஒரு பானம் (தேன்) அதன் நிறங்கள் பல வகையானதாக வெளிப்படும். அதில் மனிதர்களு(டைய பிணிகளு)க்கு நோய் நிவாரணி உண்டு. சிந்தனை செய்கின்ற கூட்டத்தினருக்கு நிச்சயமாக இதில் உறுதியான அத்தாட்சி இருக்கிறது"

(அல்குர் ஆன் 16:68,69)

நாம் மேற்கண்ட இரு திருமறை வசனங்களிலும் அளவற்ற அர்ரஹ்மான் தனது அற்புதப்படைப்பினங் களில் ஒன்றாகிய அற்ப தேனீயைப் பற்றிக் கூறி இதில் உறுதியான தனது அத்தாட்சி இருப்பதாக பிரஸ்தாபிக்கின்றான்.

அந்த வியத்தகு அத்தாட்சிகளை இங்கு நோக்குவோம்.

## கட்டடக் கலை

தேனீக்களின் வாழ்க்கையில் நம்மை வியப்புறச் செய்யும் முதலாவது நிகழ்ச்சி, கூடு கட்டுவதில் அவைகளிடத்தில் வெளிப்படும் கலைத்திறனாகும்.

"தேனீ மெழுகு அறைகளை உருவாக்கும் கலைத்திறனில் கை தேர்ந்த கட்டடக் கலைஞனையும் நாணமுறச் செய்கிறது. ஆயினும் ஒரு மிகச் சிறந்த தேனீயிடமிருந்து ஒரு மோசமான கட்டடக் கலைஞன் கூட எவ்வாறு வேறுபடுகின்றான் என்றால், மெழுகு அறை புனையப்படுவதற்கு முன்பு தேனீக்களுக்கு சிந்தனையில்லை. ஆனால் மனிதனுக்கோ என்ன கட்டப் போகின்றோம் என்பது குறித்து அவன் மூளைக்குள் ஒரு திட்டமான கருத்து உருவாகி விடுகிறது"

-கார்ல் மார்க்ஸ்-

தேனீ சம்பந்தமான மேற்கண்ட கருத்தை ஒருமுறை கார்ல் மார்க்ஸ் கூறினார்.

பகுத்தறிவைத் திறம்படப் பயன்படுத்திச் சிறந்த கட்டிடக் கலைஞனாக (பொறியியலாளராக Engineer) விளங்கும் ஒருவரைக் காட்டிலும் மிகச் சிறந்த கட்டுமானத்திறனை தேனீக்கள் வெளிப்படுத்திய போதிலும் அந்த அரிய அபார கலைத்திறனுக்கு சிந்தனை (பகுத்தறிவு) தேவைப்படவில்லை என நாத்திக உலகின் முதுகெலும்பாக விளங்கிய கார்ல்மார்க்ஸ் ஒப்புக் கொள்கிறார்.

கார்ல் மார்க்ஸின் கூற்றிலிருந்து பகுத்தறிவுள்ள கட்டடக் கலைஞனை விட கூடிய கலைத்திறன் அவைகளின் சிந்தனையிலிருந்து வெளிப்படவில்லை என விளங்குவதால் அக்கலைத்திறன் அவைகளின் உள்ளுணர் விலிருந்தே வெளிப்படுவதாக அவர் ஒப்புக் கொள்கிறார் என்பதை நாமறிகிறோம்.

## தொடர்பாடல் கலை

தேனீக்களின் நடத்தையில் மற்றொரு வியப் பிற்குரிய செய்தி தேனிருக்கும் இடத்தை தேடிப்பிடித்து தேனீக்கள் அதனை பிற தேனீக்களுக்கும் அறிவிக்கும் அற்புத தொடர்பாடல் கலையாகும்.

36 ம் பக்கம் பார்க்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழியர் முஅஸ்கர் - 1999

ஜம்இய்யாவின் வருடாந்த "ஊழியர் முஅஸ்கர்" அல்லாஹ்வின் அருளால் மிகவும் சிறப்பாக நடந்து முடிந்தது!

ஒக்டோபர் 8ம் திகதி ம.்.ரிப் முதல், 9ம் திகதி இரவு 10 மணிவரை, மாதம்பை அல்மிஸ்பாஹ் கல்லூரியில் நடைபெற்ற இப்பயிற்சிப் பாசறையில், ஜமாத்தின் அமீர் உஸ்தாத் ரஷீட் ஹஜ்ஜுல் அக்பர், ஜமாத்தின் உதவி அமீர் அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மத் (நளீமி), பிரபோதய பத்திரிகை ஆசிரியர் சகோ. S.M. மன்சூர் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர், சகோ.A.H. சல்மான் பாரிஸ் (நளீமி) ஆகியோர் முக்கிய உரைகளை ஆற்றினர். இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 400 ஜம்இய்யாவின் ஊழியர்கள் இந்நிகழ்ச்சியில் ஒன்று கூடிப்பிரிந்தார்கள்.

## வெளிநாட்டு விஜயம்

இந்திய மாணவர் இயக்கமான, Students Islamic Movement (sim) இனது அழைப்பினை ஏற்று ஜம்இய்யாவின் நாஸிம் சகோ. ஜெனீபர் அவர்கள் இந்தியா பயணமாக உள்ளார். மாநில இளைஞர் மாநாடு ஒன்றில் கலந்து கொள்ளுமுகமாகவே இவ் விஜயம் மேற்கொள்ளப்படுகிறது.

## ஜம்இய்யாவின் புதிய வருட உத்தியோகத்தர்கள்

சகோ. M. ஜெனீபர்
(நாஸிம்)
சகோ. R.M. நிஸ்மி
(பொ. செயலாளர்)
சகோ. M.A.M. ஷாஜஹான்
(நிதி செயலாளர்)
சகோ. S.A.C.P மரிக்கார்
சகோ. S.I.M. பஹ்மி
சகோ. ஆகில் அஹ்மத்
சகோ. H. அஜ்மல்
அஷ்ஷெய்க் J.M.அஷ்ரப் நளீமி
அஷ்ஷெய்க் M.S.M. உவைஸ் இஸ்லாஹி

24 ம் பக்கத் தொடர்

### தொலைக்காட்சி.........

அல்குர்ஆனினதும், பெருமானார் ரஸூல் (ஸல்) அவர்களினதும் போதனையின் அடிப்படையிலும், ஸஹாபிகளின் முன்மாதிரியின் அடிப்படையிலும் வாழ வேண்டிய உங்கள் பிள்ளைகள் இன்று யார்யாரைப் பின்பற்றுகிறார்கள், எந்தக் கதாநாயகர்களினதும், கதாநாயகிகளினதும் பேச்சையும் நடை உடை பாவனையையும் முன்மாதிரிகளாகக் கொண்டு வாழ்கிறார்கள் என்பது உங்களது கண்களுக்குத் தெரியாமலில்லை. உங்கள் பெண் பிள்ளைகள் வானொலி நிகழ்ச்சிக்கு தொலைபேசி மூலம் வெட்கமில்லாமல் தனக்குப் பிடித்த நடிகர் இன்னார் என்று ஓர் ஆண்மகனின் பெயரைக் கூறும் அளவுக்கு அவர்களை வழிகெடச் செய்தது யார்? அல்லாஹ் மனித சமுதாயத்தில் பெண்களை பல பிரத்தியேகமான இயல்புகளுடனும், தன்மைகளுடனும் படைத்திருக்கிறான். அந்த நடை, உடை, பாவனைகள் தான் பெண்களுக்கு அழகையும், கண்ணியத்தையும், குறிப்பாக முஸ்லிம் பெண்களுக்கு தனித்துவத்தையும் வழங்குகின்றன. அவை எவ்வாறு அமைய வேண்டும்? எந்த வரையறையை மீறக்கூடாது? என்ற வழிகாட்டல்களை அல்லாஹ்வே திருமறை மூலமும், ரஸூல் (ஸல்) அவர்களின் முன்மாதிரி மூலமும் வழங்கியிருக்கின்றான்.

எங்களது பிள்ளைகளின் இந் நிலைக்கு பிரதான காரணம் உங்கள் வீட்டுக்குள் இருக்கும் தொலைக் காட்சியை வரையறை இன்றி, சுதந்திரமாக இயங்க விட்டதுதான். இன்று தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகின்ற நிகழ்ச்சி நிரலைப் பார்க்கின்ற போது அதிர்ச்சியாக உள்ளது. ஒருவாரத்தில் சராசரியாக தமிழ், ஹிந்தி, சிங்களம், ஆங்கிலம் என்று 30க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் ஒளிபரப்பாகின்றன. ஒவ்வொரு நாளும் இசைக் கச்சேரிகள்.... இவைதவிர நாடகங்கள், சினிமாப்பாடல்கள்.... நகைச்சுவை என்ற பெயரில் விரசங்கள்....

இவற்றையெல்லாம் பார்க்கும் எமது உள்ளங்கள் எவ்வளவு பாழ்பட வாய்ப்பிருக்கிறது? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். ஒரு குடும்பத்தின் தலைவன் /தலைவி என்ற வகையில் உங்களுக்குரிய பொறுப்புகளும் கடமைகளும் அதிகம். அல்லாஹ் கூறுகிறான்.

**"விசுவாசம் கொண்டவர்களே! உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்....."**

(அல்குர்ஆன்)

ரஸூல் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்,

**"அனைவரும் மேய்ப்பாளர்கள்; அனைவரும் தமது மேய்ப்பைப் பற்றி விசாரிக்கப்படுவார்கள்".**

ஆகவே!

உங்கள் வீட்டுத் தொலைக்காட்சியை பயனுள்ள வகையில் மட்டும் உபயோகிப்பதற்கு உறுதிபூணுங்கள். அதற்கான சில எளிய வழிகாட்டல்கள் இங்கே தரப்படுகின்றன.

- பத்திரிகைகளில் ஒருவாரத்துக்கான, ஒரு மாதத்துக்கான நிகழ்ச்சி நிரல் வெளியிடப்படுகிறது அதில் ஒரு பிரதியை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். செய்திகள் மற்றும் பிரயோசனமான நிகழ்ச்சிகளை அடையாளப்படுத்திக் கொண்டு, மற்றைய நேரங்களில் தொலைக் காட்சியை மூடிவையுங்கள்.
- Discovery Channel போன்றவற்றில் உற்சாகத்தை ஏற்படுத்தி ஏனைய நிகழ்ச்சிகளில் இருக்கும் ஆர்வத்தை குறையுங்கள்.
- ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் தொலைக்காட்சி பார்க்கலாம் என்பதை வரையறுத்துக் கொள்ளுங்கள்.
- தொலைக்காட்சியை இயக்கும் அதிகாரத்தை பெற்றோராகிய நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்.
- வீடியோ வசதியை இயன்றளவு தவிருங்கள். அல்லது விவரணங்கள், இஸ்லாமிய சொற்பொழிவுகள், பிரயோசனமுள்ள வரலாற்றுத் திரைப் படங்கள் ஆகியவற்றுக்காக மட்டும் வீடியோவை உபயோகியுங்கள்.
- பெற்றோர்களாகிய உங்களது விருப்பு வெறுப்புக்களை தியாகம் செய்து உங்கள் அன்புச் செல்வங்களின் நலனுக்காக உங்களுக்குப் பிடித்தமான நிகழ்ச்சிகளைக் கூட ரத்துச் செய்யுங்கள்.
- அல்லாஹ்வின் வழிகாட்டல் அல்குர்ஆன், ரஸூல் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வழிமுறை ஆகியவற்றின் பக்கம் முழுக் குடும்பத்தினதும் வழியைத் திருப்புங்கள்.

ஆனால் தொலைக்காட்சியை கட்டுப்பாடாக பயன்படுத்துவது கஷ்டமான ஒரு காரியமென்று கருதுவீர்களாயின் உங்களதும், உங்களது குடும்பத்தினதும் நலன் கருதி, அல்லாஹ்வின் திருப்தியையும், நிறைவான சுவர்க்கத்தையும் மனதில் கொண்டு அந்தத் தொலைக்காட்சியை வீட்டிலிருந்து ஒதுக்கி விடுவதுதான் மீதமாயிருக்கிற ஒரே தீர்வாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சிய சமூகத்தின் இலட்ஷணங்கள் ஓர் அல்குர்ஆனியப் பார்வை...

ஆக்கம்: எம்.டீ.எம்.பர்ஸான் (சிலாபம்)

இஸ்லாத்தை இந்த மண்ணிலே ஸ்தாபிக்க வேண்டும்; அதன் ஆழிய கருத்துக்களை இவ்வையகத்தின் திசை எங்கிலும் எடுத்தியம்ப வேண்டும்; இஸ்லாம் என்ற ஆல விருட்சத்தின் நிழலின் கீழ் உலக மாந்தர் யாவரும் நிம்மதிப் பெருமூச்சு விட வேண்டும்; சத்திய வேதமாம் இந்த தீனுல் இஸ்லாம் ஏனைய அனைத்து கொள்கை கோட்பாடுகளையும் வெற்றி கொண்டு வாகை சூடவேண்டும்; 21ம் நூற்றாண்டு இஸ்லாத்துக்குரியதாய் மலர வேண்டும்; நவீன உலகின் கடிவாளம் முஸ்லிம்களின் கரத்தினுள் வரவேண்டும்; இவ்வுலகின் சட்ட யாப்பாக குர்ஆனும், அதன் ஆட்சியாளர்களாக முஸ்லிம்களும் மாறவேண்டும்; இழந்த கிலாபத் மீண்டும் இத்தரணியில் எழுச்சியுற வேண்டும், என்பன போன்ற உயர் நோக்கங்களையும், இலட்சிய வேட்கைகளையும் தங்களது அகங்களில் தாங்கியவர்களாய் ஆயிர மாயிரம் இஸ்லாமியவாதிகள் இன்று த.ஃவா களத்திலே இறங்கியுள்ளதை எம்மால் காணமுடிகிறது.

21ம் நூற்றாண்டை இஸ்லாத்துக்குரியதாய் மாற்றுவோம் என்ற இலட்சியத்துக்காய் இவர்கள் யாவரும் இரவு பகலாய், ஊன் உறக்கம் மறந்து முனைப்புடன் செயற்படுவதை காண முடிகிறது. இந்த இலட்சியத்தை அடைவதற்காய் தனிநபர் ரீதியிலும் இயக்க ரீதியிலும் பலரும் பல வழி முறைகளில் செயற்பட்ட போதினிலும் இந்த இஸ்லாத்தை நிலைநாட்டும் பணியில் இவர்கள் அடைந்த அடைவுகள், வெற்றிகள் மிகக் குறைந்த அளவுடையதாகவே காணப்படுகின்றன. இதற்கான காரணம் என்ன? 21ம் நூற்றாண்டில் முஸ்லிம்களின் நிலையைப் பற்றி சிந்திக்கின்ற நாங்கள் இந்தப் பின்னடைவுக்கான காரணத்தை அறிதல் எம்மீதான கடப்பாடாக இருக்கிறது.

இஸ்லாத்தை நிலைநாட்டுவதற்காய் களத்திலே இறங்கியுள்ளவர்கள் அந்தப்பணிக்குரிய சமூகம் பெற்றிருக்க வேண்டிய பண்புகளை தங்களில் வளர்த்துக் கொள்வதற்கு மறந்து விட்டார்கள். ஒரு சமூக மாற்றத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பவர்கள் முதலில் தங்களை அந்த மாற்றத்துக்குரிய முன்மாதிரிகளாக மாற்றிக் கொள்ளல் வேண்டும். இதே போன்று தான் இஸ்லாத்தை மேலோங்கச் செய்கின்ற பணியில் தன்னை பிணைத்துக் கொண்டு நடைபயிலும் ஒரு சமூகம் முதலில் தன்னை அந்தப் பணிக்குரிய சமூகமாக மாற்றிக் கொள்ள வேண்டும். அந்தப் பணி வேண்டி நிற்கின்ற உயர்பண்புகளை முதலில் தனது வாழ்வில் நிதர்சனப்படுத்திக் காட்ட வேண்டும். அப்போது தான் தன்னை பின்துயரும் மனிதர்களின் அகங்களில் ஆழமான தாக்கத்தை செலுத்தக் கூடிய சக்தியாக எம்மால் பரிணமிக்க முடியும். இந்தப் பண்பு நீங்குகின்ற போது எமது பணியின் வெற்றியும் காலதாமதமாகும். இந்நிலை தான் இஸ்லாமிய உம்மத்தை பீடித்துள்ளது. அதன் வெற்றியின் தாமதத்திற்கும் இது தான் மூலகாரணமாகும்.

எனவேதான் இஸ்லாத்தை நிலைநாட்டும் பணியில் ஈடுபடும் ஒரு சமூகம் எத்தகைய பண்புகளை பெற்றிருக்க வேண்டும், என்பது பற்றி அல்குர்ஆன் எமக்கு மிக அழகாக விளக்குகிறது. வெறுமனே கோட்பாட்டு ரீதியாகவன்றி அல்குர்ஆன் கூறுகின்ற பண்புகளின் அச்சில் தம்மை வார்த்து உலகுக்கே முன் உதாரணங்களாய் வாழ்ந்து விட்டுச் சென்ற ஒரு சமூகத்தை மையமாக வைத்து இப்பண்புகளை அல்குர்ஆன் கூறுகிறது. அந்த உன்னத சமூகம் எது? அவை அணிகலன்களாய் கொண்ட பண்புகள் யாவை? என்பதை அறிவதற்காய் நாம் ஸூரதுல் பத்ஹின் இறுதி வசனத்தை நோக்கி நகர்வோம்.

இந்த வசனத்தின் ஆரம்பப் பகுதியிலே அல்லாஹ் ஓர் நன்மாராயத்தை அருளுகிறான். அதுதான் இந்த தீனுல் இஸ்லாம் உலகிலே தோன்றிய அனைத்து கொள்கை கோட்பாடுகள், சித்தாந்தங்கள் யாவற்றையும் மிகைத்து வெற்றிவாகை சூடும் என்பதாகும். அவ்வாறு வெற்றி பெறுவது தான் அந்த தீனின் இயல்பான பண்பாகும். அப்பணிக்காகவே தனது தூதரை அவன் அனுப்பி வைத்தான். அவ்வாறு இந்த தீன் வெற்றிபெறுவதற்கு அல்லாஹ்வே சாட்சியாகவும் இருக்கிறான் என்று கூறி இவ்வாக் குறுதியை உறுதிப்படுத்துகிறான். அதனைத் தொடர்ந்து, இவ்வாறு இந்த தீன் வளர்ந்து வெற்றி பெறுவதற்கு காரணம் அந்த தீனை சுமந்து செல்லும் தூய மனிதர்கள்தான் என்பதையும் தெளிவுபடுத்துகிறான். அதனைத் தொடர்ந்து அந்த மனிதர்கள் பெற்றிருந்த பண்புகளை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறான்.

### 1. தீமையை எதிர்க்கும் மனப்பாங்கு

மார்க்கத்தை நிலைநாட்டும் பணியில் கால்பதிக்கும் சமூகத்திடம் காணப்பட வேண்டிய முதலாவது பண்பு தீமையை எதிர்க்கும் மனப்பாங்காகும். இதனையே அல்லாஹு தஆலா "முஹம்மத் அல்லாஹ்வின் தூதராவார். அவருடன் இருப்பவர்களோ, நிராகரிப்போர் மீது மிகக் கடுமையாக நடந்து கொள்வார்கள்" என்று குறிப்பிடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுது ஒரு மனிதன் இஸ்லாத்தின் தாரக மந்திரமான லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கூறி இஸ்லாத்தினுள் நுழைந்து விடுகிறானோ அந்தக் கணத்திலிருந்தே அவனுக்கும் நிராகரிப்புக்கும் இடையிலான போராட்டம் தொடங்கி விடுகிறது. ஓர் உண்மையான கொள்கைவாதியைப் பொறுத்த மட்டில் அவன், தான் ஏற்ற கொள்கை தான் சத்தியமானது, இந்தக் கொள்கை ஒன்றின் மூலம் மாத்திரமே அமைதியற்று அலைந்து திரியும் அகங்களுக்கு சாந்தத்தை அளிக்க முடியும்; ஏனைய கொள்கை கோட்பாடுகளினால் இந்த பூமிக்கு அழிவுகளே கிட்டும் என்பதை உறுதியாக நம்புவான். எனவே இவ்வுணர்வுள்ள ஒரு கொள்கைவாதி, தான் ஏற்ற கொள்கையை இந்த மண்ணிலே ஆதிக்க முள்ள சக்தியாக மாற்றுவதற்காக உழைக்க முன்வருவான். சடவாத கோட்பாடுகளின் கழுகுப் பிடிக்குள் சிக்கி மூச்சுத் திணறி பரிதவிக்கும் இந்த உலக மாந்தர்களை சுபீட்சமிக்க வாழ்வை நோக்கி நகர்த்துவதற்காக முனைப்புடன் செயற்படுவான். தனது கொள்கை ஒன்றின் மூலமே இதனை சாதிக்க முடியும் என உறுதியாக நம்பி அதன் மேல் தீவிர ஆசை கொள்வான். அதற்காக தன் உயிரையும் அர்ப்பணிக்க முன்வருவான். அதே நேரம், மனிதர்களை ஆட்டிப் படைத்து திறமைகளை கட்டவிழ்த்து விட்டிருக்கும் கொள்கை கோட்பாடுகளுக்கெதிராக கிளர்ந்தெழுவான். அத்தீய சக்திகளை அழித்தொழிப்பதற்காக தன்னுடைய முழுச் சக்தியையும் ஒன்று திரட்டி போராட முன்வருவான். எந்தளவுக்கு ஒரு கொள்கைவாதி தனது கொள்கை மீது பற்று வைக்கிறானோ அதே அளவு வெறுப்பை அதற்கு எதிரான தீய சக்திகள் மீதும் பிரதிபலிப்பான். ஏனெனில் அந்தச் சக்திகள் தான் பூமியில் குழப்பம் விளைவிக்கின்றவைகள். ஆரோக்கியமான சூழலும், சமூகமும் உருவாகுவதற்கு தடைகற்களாய் உள்ளவையும் இத்தீய சக்திகள் தான். எனவே அவன் அதற்கு எதிராக போர்க்கொடி தூக்குவான். இது தீவிரவாத போக்காக அமைய மாட்டாது. மாறாக ஓர் உண்மை கொள்கைவாதியின் ஈமானின் வெளிப்பாடாகவே அமையும்.

எந்தளவுக்கு ஒருவன் தீமைகளை களைவதற்காக போராடுகிறானோ அந்தளவுக்கு அவனிடம் ஈமான் பிரகாசிக்கிறது என்பது பொருளாகும். இதனைத்தான் இறுதித் தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு நவின்றார்கள்;

***"உங்களில் யார், ஓர் தீமையான விடயத்தை காண்கிறாரோ அதனை அவர் தனது கரங்களினால் தடுக்கட்டும். அது முடியாவிடின் தனது நாவினால் தடுக்கட்டும். அதுவும் முடியாவிடின் தனது மனதினால் அதனை வெறுக்கட்டும். அதுதான் ஈமானின் மிகக் குறைந்த படித்தரமாகும்".***

எனவே இங்கு தீமையை தடுக்கும் பணியானது ஈமானை அளவிடும் அளவுகோலாக கணிக்கப்படுகிறது. எனவே இஸ்லாத்தை நிலைநாட்ட போராடும் சமூகம் இந்தப் பண்பை தன்னிலே வளர்த்துக் கொள்ள வேண்டும். தீமைகளை எங்கு கண்டாலும், யாரிடம் கண்டாலும், எங்கிருந்து ஊற்றெடுத்தாலும் அதனை அடியோடு பிடுங்கி எறிவதற்காக அணிதிரள வேண்டும். அவ்வாறு இல்லாமல் தன்னை சுற்றியிருக்கின்ற உலகம் இருளிலும், கேடான வழியிலும் தட்டுத் தடுமாறுவதைப் பார்த்தும் கவலைப்பட்டு ஓர் இதயம் கண்ணீர் வடிக்க வில்லையானால் அது இதயமே அல்ல. ஒரு இதயத்திற்கு இருக்கின்ற உயிரோட்டம், அறிவாற்றல், மறுமலர்ச்சி ஆகிய அனைத்தையுமே அந்த இதயம் இழந்து விட்டது என்பது தான் பொருள். ஏனெனில் அல்லாஹ்வை விசுவாசித்த ஒரு சமூகம் ஒரு போதும் தீமைகளுடன் இணங்கி கூட்டணி அமைக்க மாட்டாது. சத்தியமும் அசத்தியமும் ஒரு போதும் ஒன்று சேர மாட்டாது. இறை சட்டம் தான் நன்மையானது; அதற்கு முரண்படுகின்ற சட்டம் தீமையானதாகும். இதனைத்தான் இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) பின்வருமாறு விளக்குகிறார்;

"நன்மை என்பதில், மார்க்க கடமை ஒவ்வொன்றும் அடங்கும். தீமை என்பதில், கீழ்த்தரமான ஒவ்வொரு செயலும் அடங்கும். கீழ்த்தரமானவைகள் என்பது தாம் தீமைகளாகும். இவற்றை தான் மார்க்கம் தடை செய்துள்ளது. இணைவைத்தல், பொய்கூறுதல், அநியாயம் செய்தல் போன்ற மோசமான செயல்கள் இதில் அடங்கும்.

மேலும் ஏகத்துவத்தையும் நபித்துவத்தையும் மறுத்தல், மார்க்கத் திற்கும் அதன் சட்டதிட்டங்களுக்கும் மாறு செய்தல் ஆகிய அனைத்தும் "தீமை" என்பதில் அடங்கிவிடும். எனவே அல்லாஹ்வை உண்மையி லேயே ஈமான் கொண்டவர்கள், இறைசட்டத்தை (நன்மைகளை) உலகெங்கிலும் பரப்புவதற்கான முயற்சிகளில் முனைப்புடன் ஈடுபடுவார்கள். மேலும் அல்லாஹ்வின் சட்டத்திற்கு முரண்பட்ட சட்டங்களுக்கு (தீமைகளுக்கு) எதிராக போர்க்கொடி தூக்கி அவற்றுக்கு சாவுமணியடித்து அழித்தொழித்து விட முயல்வார்கள்.

எனவே எந்த சமூகம் தீமைகளுக்கு எதிராக போராடும் மனப்பாங்கை பெறவில்லையோ, அதற்காக முன்வரவில்லையோ, அந்த சமூகத்தால் வெற்றிபெற முடியாது. மாறாக இறை நிராகரிப்புக்கும் தீமைகளுக்கும் எதிரான போராட்ட உணர்வை எப்பொழுது இந்த சமூகம் தன்னிலே வளர்த்துக் கொள்ளுமோ அப் பொழுது அந்த சமூகம் வெற்றியை நோக்கி நடை பயில்வது இலகுவாகும்.

இந்தப் பண்பை அன்றைய ஸஹாபா சமூகம் நிறைவாய்ப் பெற்றிருந்தது. அதனால் தான் அவர்களால் ஓர் சமூக மாற்றத்துக்கான உறுதியான அடித்தளத்தை இட முடிந்தது. இங்கு தீமையை எதிர்த்தல் என்கின்றபோது இரண்டு விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

1. தன்னை தீமைகளிலிருந்து பாதுகாத்தல்
2. தன்னை சூழ உள்ளவர்களை தீமைகளிலிருந்து பாதுகாத்தல்.

இவ்விரண்டு நிலைப்பாடுகளையும் கருத்திற் கொண்டு செயற்படும் போது ஓர் ஆரோக்கியமிகு சமூகத்தை கட்டியெழுப்பலாம். அத்தகைய மனிதர்களாலேயே இந்த தீனை ஸ்தாபிப்பது சாத்தியமாகும்.

(அடுத்த இதழில் தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்கச் செய்திகள்

➢ ஜமாஅத்தின் வெளியீட்டுப் பகுதியின் செயலாளர் சகோ. எஸ்.எம். மன்சூர் அவர்கள் பிலிப்பைன்ஸில் நடைபெற்ற ஒருவார கால இஸ்லாமிய மாநாடு ஒன்றில் 14.08.99இல் கலந்து கொண்டார். அங்கு அவர் "இஸ்லாம் உங்கள் இதயத்துடன் பேசுகிறது" எனும் தலைப்பில் உரையாற்றியதோடு "த.ஃவாவில் தொடர்பு சாதனங்களின் பங்கு" பற்றி ஒரு பத்திரிகை சமர்ப்பித்தார்.

➢ பங்காளாதேஷ் இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் மாலை தீவுக்கு குறுகிய கால, விஜய மொன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த வேளையில் 16.08.99ல் ஜமாஅத்தின் பிரமுகர்களை சந்தித்து கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டனர்.

➢ 18.09.99 அன்று ஜமாஅத்தின் ஹெம்மாதகம பயிற்சி மன்றம் ஹெம்மாதகம முஸ்லிம் சமூக மேம்பாட்டுப் பேரவையுடன் இணைந்து இரத்ததான வைபவமொன்றை ஏற்பாடு செய்ததில் 100க்கும் அதிகமான முஸ்லிம் முஸ்லிமல்லாத இருபாலாரும் கலந்து கொண்டு இரத்தம் வழங்கினர்.

➢ அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் இஸ்லாஹி அவர்கள் கடந்த 5 வருடங்களாக புத்தளம் பெரிய பள்ளிவாயலில் நடாத்தி வந்த ரியாழுஸ்ஸாலிஹீன் ஹதீஸ் விளக்க நிறைவு வைபவம் 25.09.99 அன்று மேற்படி பள்ளிவாயலில் நடைபெற்றது. சிறப்பு அதிதிகளாக அஷ்ஷெய்க் அகார் முஹம்மத், மௌலவி எம்.எல்.எம். ஹனிப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

➢ 25.09.1999 அன்று நாடளாவிய ரீதியில் க.பொ.த (உ/த) வகுப்பு மாணவர்களுக்கும், மத்ரஸா வகுப்பு மாணவர்களுக்குமான த.ஃவதுல் குர்ஆன் போட்டிப் பரீட்சை நடைபெற்றது.

➢ க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகளுக்காக ஹெம்மாதகம அல்ஹஸனாத் அரபுக் கல்லூ ரியில் 25.08.99 முதல் 31.08.99 வரை ஒரு வார கால பயிற்சி நெறியொன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மத்திய பிராந்தியத்தைச் சேர்ந்த சுமார் 40 மாணவிகள் இதில் கலந்து கொண்டனர்.

➢ பாகிஸ்தான் சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக் கழத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் தலைமைத்துவப் பயிற்சிநெறியில் இவ்வருடம் கொழும்பு பயிற்சி மன்றத்தைச் சேர்ந்த சகோ. எம்.ஏ.எம். நியாஸ் அவர்களும் சிலாபம் மன்றத்தைச் சேர்ந்த சகோ. சப்றி அவர்களும் கலந்து கொண்டனர். இப்பயிற்சி நெறி 01.09.99 முதல் 02.10.99 வரை நடைபெற்றது.

➢ ஜமாஅத்தின் வருடாந்த ஷ.ஃபான் மாத பிராந்திய இஜ்திமாக்கள் பின்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன, இன்ஷா அல்லாஹ்.

14.11.99 தென்கிழக்குப் பிராந்தியம்
27-28.11.99 மத்திய பிராந்தியம்
04.12.99 கிழக்குப் பிராந்தியம்
04.12.99 புத்தளம் பிராந்தியம்
05.12.99 கொழும்பு பிராந்தியம்

➢ ஜமாஅத்தின் பிரசுரப் பகுதி மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்களின் இரு நூல்களை இணைத்து, "பலஸ்தீனில் யூத, சியனிஸ சதிகள்" என்ற பெயரில் வெளியிட்டுள்ளது.

---

*பாகிஸ்தான்..........*

*14 ம் பக்கத் தொடர்*

தாகவும் கூறியுள்ளது. வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசாங்கத்துக்கு இரண்டு வருடம் காலக்கெடு விதித்துள்ளது. அதே நேரம் ஜமா அத்தின் ஆட்சேர்ப்பு, மற்றும் விழிப்பூட்டல் நடவடிக்கைகள் நிறுத்தப்படாமல் செல்வதற்கான ஒழுங்குகளை அது செய்து வருகிறது; ஜமா அத்தின் எந்த அரசியல் நடவடிக்கையும் தடைப்படாது என எதிர் பார்க்கலாம்.

ஜெனரல் பர்வேஸ் அமைத்துள்ள அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் பிரமுகர்கள் ஆட்சி நடத்தப் போதியளவு தகுதி வாய்ந்தவர்கள் அல்ல என ஜமாஅத் அமீர் மௌலானா காஸி ஹுஸைன் அஹ்மத் குறிப்பிட்டுள்ளார். இதில் ஷரீபுத்தீன் பீர்ஸாதா என்பவர் இதற்கு முன்புள்ள பல அரசாங்கங்களில் அங்கம் வகித்தவர்; எதனையும் சாதிக்குமளவு திடவுறுதி குன்றியவர். அப்துஸ்ஸத்தார் என்பவர் கிரிக்கட் சாஹிப் இம்ரான்கானின் கட்சியைச் சேர்ந்தவர். மற்றையோரும் நாட்டு நிர்வாகத்தைத் திறம்படச் செய்வதற்குப் போதிய தகைமை உள்ளவர்களா என்பதில் ஜமாஅத்துக்குச் சந்தேகம் உள்ளது; நாடு மற்றுமொரு சர்வாதிகாரப் பிடியில் சிக்குமா என்ற கேள்வி ஜமாஅத்துக்கு உள்ளது. மௌலானா காஸி ஹுஸைன் எல்லை மாநிலத்துக்குப் போவதிலிருந்து அண்மையில் தடை விதிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நிலைமை எவ்வாறு இருப்பினும் பாகிஸ்தானில் இஸ்லாமிய எழுச்சியை நசுக்கிடும் பணியை அமெரிக்கா புதிய ஆட்சியாளர்களைப் பயன்படுத்தி நிறைவேற்ற முயற்சிக்கலாம் என்ற பீதி இன்னும் நிலவத்தான் செய்கிறது. சூழ்ச்சி செய்வதில் அல்லாஹ் மிக்க சிறப்பானவன். ∎



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகச் செய்திகள்

## செச்னியா

1991 செப்டம்பர் 6ம் திகதி செச்னியாவின் தலைவர் ஷஹீத். துதாயேவ் அவர்களால் தலைநகர் க்ரொஸ்னியிலுள்ள சோவியத் ருஷ்யாவின் கட்டிடம் கைப்பற்றப் பட்டது. அதன் 8ஆவது ஆண்டு சுதந்திர நினைவுதின விழாவை செச்னியா கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளை, ரஷ்யாவினால் மீண்டுமொரு தாக்குதல் தொடுக்கப் படலாமெனும் அச்சம் நிலவியது. 22ம் திகதி ருஷ்ய பிரதம மந்திரி விலாடிமிர் புடினின் அறிவிப்பு வருகின்றது. "செச்னியாவுடன் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒரு உடன்படிக்கையல்ல." மறுநாளே க்ரொஸ்னி விமான நிலையத்தை ரஷ்யக் குண்டுகள் தாக்கின.

டஜெஸ்தானின் இஸ்லாமிய வாதிகள் ரஷ்யாவுக்குள் குண்டு வெடிப்புகளை நிகழ்த்தினார்கள் எனக் கூறப்பட்டது. பின் டஜெஸ்தான் தாக் கப்பட்டது. அதன்பின்னர் செச்னிய இஸ்லாமியவாதிகள் தான் இதற்குத் தூண்டுகோலாக இருக்கிறார்க ளெனக் கூறப்பட்டது. இப்போது, செச்னியாவின் இலக்குகள் மீதும் தாக்குதல்கள் தொடர்கின்றன.

இத்தனைக்கும் மத்தியில் உலக நாடுகளும், ஐ.நா. வும் பார்த்துக் கொண்டு வாளாவிருக்கின்றன. கொஸோவோவில் போன்று தலையிடு வதற்கு இங்கு ஒரு மிலோசெவிக் இல்லை. எனவே ரஷ்யாவின் தன்னிச் சையான நடவடிக்கை அனுமதிக்கப் படுகிறது. அழிவது முஸ்லிம்கள் தானே! அகதிகளாவதும், அங்கவீனர் களாவதும் முஸ்லிம்கள் தானே! ஆனால் அவர்கள் என்றும் அடிமை களாக மாட்டார்கள் என்பதை இன்ஷா அல்லாஹ், காலம் நிரூபிக்கும்.

## சீனா

உய்குர் அரசியல் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான ராபியா காதர் கைது செய்யப்பட்டு தேசத்துரோகக் குற்றச்சாட்டு அவர் மீது சுமத்தப்பட்டுள்ளது. இது உய்குர் முஸ்லிம்களின் சுதந்திரப் போராட்டத்தை மேலும் பலப்படுத்து வதாயமைகிறது.

ராபியா காதர் ஓர் பிரபல உள்ளூர் வர்த்தகர். முன்னர் ஏழையாக இருந்த இவரை, இரண்டு வருடங்களுக்கு முன்புதான் மக்களுக்கோர் முன்மாதிரியென சீனா வர்ணித்தது. உள்ளூர் பாராளுமன்றத்திற்கு ஆலோசனை வழங்கும் "மாகாண மக்களின் அரசியல் ஆலோசனைசபை"யின் அங்கத்தவராக அவர் தெரிவு செய்யப் பட்டார். தற்போது அமெரிக்காவில் இருந்து கொண்டு வொய்ஸ் ஒப் அமெரிக்கா மூலம் சீனாவுக்கு ஒலிபரப்பு மேற்கொண்டுவரும் சித்தீக் ரவ்ஸி அவர்களின் மனைவியான ராபியா கணவரின் நடவடிக்கைகளை பகிரங்கமாக கண்டனம் செய்வார் என சீனா எதிர்பார்த்தது. ஆனால் கணவருக்கு அவர் தகவல்களை வழங்குகிறார் என தற்போது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

## ஜோர்தான்

ஹமாஸ் அரசியல் பிரிவின் காரியாலயத்தை மூடி, அதன் தலைவர்களை கைது செய்தமை தொடர்பாக பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

- ஆயுதங்களும், சட்டவிரோத ஆவணங்களும் அங்கிருந்ததால் நீதிமன்றம் இதற்கான உத்தரவை பிறப்பித்தது என ஜோர்தான் மன்னர் கூறியதாக குவைத்தின் "அல்கபஸ்" தினப் பத்திரிகை குறிப்பிடுகிறது.

- இதற்கு ஒரு படி மேலாக, இஸ்ர வேலிய மொஸாட் உளவுப் படை யின் முன்னைநாள் தலைவரான மானியாதொம் தற்போது இஸ்ர வேல் ஜோர்தான் உறவுகளுக்குப் பொறுப்பாயிருக்கிறார். இவரை கொல்லச் சதித்திட்டம் தீட்டப் பட்டது. எனவேதான் ஹமாஸ் தடை செய்யப்பட்டது. இதுதான் உண்மையான காரணம் என துபாயின் "அல்பயான்" கூறுகிறது.

- யாஸீர், அரபாத்தின் பாலஸ்தீன் அதிகாரசபையின் வேண்டு கோளின் பேரிலேயே இது நடை பெற்றுள்ளது. ஏனெனில் "சமா தான தீர்வுப் பொதி" களுக்கு எதி ரான ஹமாஸின் பிரச்சாரம் அவர் களை கோபமடையச்செய்துள்ளது என ஜோர்தானிய வாராந்த பத்திரிகை "ஷிஹான்" கூறுகிறது.

ஹமாஸின் ஆன்மீகத் தலை வரான ஷெய்க்.யாஸீன் அவர்களும், ஜோர்தான் இஹ்வானுல் முஸ்லிமீன் தலைவரான அப்துல் மஜீத் அல்து னாய்யத் அவர்களும், பலத்த கண்ட னங்கள் தெரிவித்ததுடன், செப்டம்பர் 4ம் திகதி நடைபெற்ற எதிர்ப்பு ஊர்வலத்தின் பின் ஒன்று கூடி, அரசை நிர்ப்பந்திப்பதற்கான ஒரு குழுவை நியமித்துள்ளனர்.

காலித் மிஷால், அபுமர்சூக், இப்றாஹீம் கோஷே ஆகிய தலைவர் களுடன் சேர்த்து 134 அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்டதுடன், ஹமாஸின் நடவடிக்கைகளும் சட்டவிரோதமா னவை என தடைசெய்யப்பட்டுள்ளன.

☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 நாள் கம்பியூட்டர் டிப்ளோமா பயிற்சி நெறி

பாடத்திட்டம்

- ★ **Basic Principles**
- ★ **Operating System (Windows 95)**
- ★ **MS Offiice 97**
  1. **Ms Word**
  2. **Ms Excel**
  3. **Powerpoint**
  4. **Access**
- ★ **Visual Basic 4.0**
- ★ **Internet & E-mail**
- ★ **Hardware Fundamentals**

குறைந்த காலம்
நிறைந்த பயன்
வதிவிட
வசதியுடன்
கூடிய ☞

கட்டணம் : **5250/-** மாத்திரமே

**APPROVEDBY**

**TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION NO. P 13/0004**

**Islamic Institute of Information Technology**
Old Town, Madampe- 61230.
Tel : 032-47561/ 032-47786
Fax : 032- 47561/01 - 686030 E- mail : islah@slt.lk

## வெளிநாட்டில் உபயோகிக்கப்பட்ட கம்பியூட்டர்கள்

மலிவு விலையில்

எமது முகவர்கள் ☞

**486 Dx2 66MHz**
**16MB RAM**
**15" sgva Colour Monitor**
**1.44 MB FDD**
**Keyboard & Mouse**
**Windows 95 installed**
**Y 2 K compatible**

தொடர்பு கொள்ளுங்கள்

**M.C.M. AJWAD,**
160, MAIN STREET, OLD TOWN,
MADAMPE.
TEL : 032 - 47515, 077 - 341493

**Megasoft Technologies**
316 1/1, First Floor, Unity Plaza, Galle Road,
Colombo - 4. Tel : 075 - 363737

**Royal Computer Centre**
147 Main Street, Dharga Town. Tel; 034 - 70151

**I.T.M. Computer Centre**
302, Main Street, Kekirawa. Tel : 025 - 64302

**Globelink**
11, Kurunegala Road, Puttalam. Tel : 032 - 65884

**A.L. Ameer Ali**
Sinna Alim Lane, Sammanthurai. Tel : 067 - 60303

**Lanka Leaf**
102/15, Dam Street. Colombo 12. Tel : 331067





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதோ உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!!

கொழும்பு - கண்டி வீதியில் பிரயாணம் செய்யும் பயணிகளுக்காக
கஜுகமைக்கு அருகாமையில் ஒரு புதிய உணவகம்

# பாம் லீப் ரெஸ்டூரண்ட்

(கொழும்பு புறக்கோட்டையில் பிரபல்யம் பெற்ற பாம் லீப் ஹோட்டலினதும் நிட்டம்புவை சிடி சென்டர் ஹோட்டலினதும் புதுக்கிளை)



பின்வரும் வசதிகளுடன்

- ➢ சுவையான "ஹலாலான" உணவு வகைகள்
- ➢ போதியளவு வாகனங்கள் தரிக்கக்கூடிய வசதிகள்
- ➢ முஸ்லிம் பிரயாணிகளுக்காக தொழுகைக்கான வசதிகள்
- ➢ குடும் சகிதம் விஜயம் செய்பவர்களுக்கென விசேட வசதிகள்

மேலும் மேலும் பல வசதிகளுடன்!!!

இன்றே விஜயம் செய்து பாருங்கள்

## Visit Now !!!

***For the travellers between Colombo - Kandy***
***Just 0.5 km to Kadjugama Towards Kandy At Radavadunna.***

# PALM LEAF RESTAURANT

*(A New Branch of Palm Leaf Hotel, Colombo - 11 and City Center Hotel - Nittambuwa)*

- ➢ Delicious "Halal" fast foods and refreshments.
- ➢ Special Family Room facilities available
- ➢ With ample parking space.

And with many more facilities



PALM LEAF
RESTAURANT



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TYPESET & OFFSET BY A J PRINTS, NO. 44, STATION ROAD, DEHIWELA. TEL: 739765, 723205, 723209